PROGRESS THROUGH KNOWLEDGE

**GE3152** **தமிழர் மரபு** **L T P C**
**1 0 0 1**

**அலகு I மொழி மற்றும் இலக்கியம்: 3**

இந்திய மொழிக் குடும்பங்கள் – திராவிட மொழிகள் – தமிழ் ஒரு செம்மொழி – தமிழ் செவ்விலக்கியங்கள் - சங்க இலக்கியத்தின் சமயச் சார்பற்ற தன்மை – சங்க இலக்கியத்தில் பகிர்தல் அறம் – திருக்குறளில் மேலாண்மைக் கருத்துக்கள் – தமிழ்க் காப்பியங்கள், தமிழகத்தில் சமண பௌத்த சமயங்களின் தாக்கம் - பக்தி இலக்கியம், ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்கள் – சிற்றிலக்கியங்கள் – தமிழில் நவீன இலக்கியத்தின் வளர்ச்சி – தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பாரதியார் மற்றும் பாரதிதாசன் ஆகியோரின் பங்களிப்பு.

**அலகு II மரபு – பாறை ஓவியங்கள் முதல் நவீன ஓவியங்கள் வரை – சிற்பக்**

நடுகல் முதல் நவீன சிற்பங்கள் வரை – ஐம்பொன் சிலைகள்– பழங்குடியினர் மற்றும் அவர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்கள், பொம்மைகள் – தேர் செய்யும் கலை – சுடுமண் சிற்பங்கள் – நாட்டுப்புறத் தெய்வங்கள் – குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை – இசைக் கருவிகள் – மிருதங்கம், பறை, வீணை, யாழ், நாதஸ்வரம் – தமிழர்களின் சமூக பொருளாதார வாழ்வில் கோவில்களின் பங்கு.

**அலகு III நாட்டுப்புறக் கலைகள் மற்றும் வீர விளையாட்டுகள்: 3**

தெருக்கூத்து, கரகாட்டம், வில்லுப்பாட்டு, கணியான் கூத்து, ஒயிலாட்டம், தோல்பாவைக் கூத்து, சிலம்பாட்டம், வளரி, புலியாட்டம், தமிழர்களின் விளையாட்டுகள்.

**அலகு IV தமிழர்களின் திணைக் கோட்பாடுகள்: 3**

தமிழகத்தின் தாவரங்களும், விலங்குகளும் – தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியத்தில் அகம் மற்றும் புறக் கோட்பாடுகள் – தமிழர்கள் போற்றிய அறக்கோட்பாடு – சங்ககாலத்தில் தமிழகத்தில் எழுத்தறிவும், கல்வியும் – சங்ககால நகரங்களும் துறை முகங்களும் – சங்ககாலத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி – கடல்கடந்த நாடுகளில் சோழர்களின் வெற்றி.

**அலகு V இந்திய தேசிய இயக்கம் மற்றும் இந்திய பண்பாட்டிற்குத் தமிழர்களின் பங்களிப்பு: 3**

இந்திய விடுதலைப்போரில் தமிழர்களின் பங்கு – இந்தியாவின் பிறப்பகுதிகளில் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் – சுயமரியாதை இயக்கம் – இந்திய மருத்துவத்தில், சித்த மருத்துவத்தின் பங்கு – கல்வெட்டுகள், கையெழுத்துப்படிகள் - தமிழ்ப் புத்தகங்களின் அச்சு வரலாறு.

**TOTAL : 15 PERIODS**

**TEXT-CUM-REFERENCE BOOKS**


1. தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும் – கே.கே. பிள்ளை (வெளியீடு: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்).
2. கணினித் தமிழ் – முனைவர் இல. சுந்தரம். (விகடன் பிரசுரம்).
3. கீழடி – வைகை நதிக்கரையில் சங்ககால நகர நாகரிகம் (தொல்லியல் துறை வெளியீடு)
4. பொருநை – ஆற்றங்கரை நாகரிகம். (தொல்லியல் துறை வெளியீடு)
5. Social Life of Tamils (Dr.K.K.Pillay) A joint publication of TNTB & ESC and RMRL – (in print)
6. Social Life of the Tamils - The Classical Period (Dr.S.Singaravelu) (Published by: International Institute of Tamil Studies.
7. Historical Heritage of the Tamils (Dr.S.V.Subatamanian, Dr.K.D. Thirunavukkarasu) (Published by: International Institute of Tamil Studies).
8. The Contributions of the Tamils to Indian Culture (Dr.M.Valarmathi) (Published by: International Institute of Tamil Studies.)
9. Keeladi - 'Sangam City C ivilization on the banks of river Vaigai' (Jointly Published by: Department of Archaeology & Tamil Nadu Text Book and Educational Services Corporation, Tamil Nadu)
10. Studies in the History of India with Special Reference to Tamil Nadu (Dr.K.K.Pillay) (Published by: The Author)
11. Porunai Civilization (Jointly Published by: Department of Archaeology & Tamil Nadu Text Book and Educational Services Corporation, Tamil Nadu)
12. Journey of Civilization Indus to Vaigai (R.Balakrishnan) (Published by: RMRL) – Reference Book.

## தமிழர் மரபு GE3152

# அலகு - 1

# மொழி மற்றும் இலக்கியம்

**1. இந்திய மொழிக் குடும்பங்கள் குறித்து விவரித்து எழுதுக.**

**1. உலகமொழிகள்**

- 2011ல் எடுக்கப்பட்டக் கணக்கீட்டின்படி உலகமொழிகள் சுமார் 6500 ஆகும். இவற்றில் ஏறத்தாழ ஆயிரத்திற்கும் குறைவான மொழிகள் மக்களால் பேசப்படுகின்றன.
- மொழியியல் அறிஞர்கள் உலகமொழிகளை இரண்டாகப் பிரிப்பர்
- இனவழி மொழிக்குடும்பம்: தமிழும் மலையாளமும் ஒன்றாக இருந்து பிற்காலத்தில் அது இரண்டாகப் பிரிவது இனவழி மொழிக்குடும்பமாகும்.
- அமைப்புவழி மொழிக்குடும்பம்: பல நூறாண்டுகளுக்கு முன்பு ஒரு மொழியாக இருந்து பின்னர் அம்மொழியிலிருந்து பல மொழிகள் தோன்றுவதாகும்.

**2. இந்தியாவில் உள்ள மொழிக்குடும்பங்கள்**

- உலக நாடுகளில் இந்தியாவில் மட்டுமே அதிகமான மொழிகள் பேசப்படுகின்றன. ஒருகாலக்கட்டத்தில் சோவியத் ரஷ்யா பிரியாமல் இருந்தபோது அதிகமொழிகள் பேசும் நாடாக ரஷ்யா இருந்தது. பின்னர் சோவியத் ரஷ்யா பிரிந்தவுடன் இந்திய நாடு அதிக மொழிகள் பேசும் நாடாக விளங்கியது.
- இந்திய நாட்டில் 1652 -க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன.
- தொடக்காலங்களில் இந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்திலிருந்து வந்தவை என்று தவறாக கணிக்கப்பட்டுள்ளது. கல்கத்தாவிலுள்ள ஆசியக் கல்வி சங்கத்தை தோற்றுவித்தவர். சர். வில்லியம் ஜோன்ஸ். இவர் சமஸ்கிருதம் - இந்தோ - ஐரோப்பிய மொழிக்குடும்பத்தோடு தொடர்புடையது என்று 1786 - இல் நிறுவுகிறார்.
- திராவிட மொழிகள் குறித்து ஆராய்ந்தவர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல். தென்னாட்டில் பேசப்படுகின்ற தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலான ஒன்பது மொழிகளும் சமஸ்கிருதத்திலிருந்து மாறுபட்டவைகள் திராவிட மொழிகள் என்று குறிப்பிடுகிறார். திராவிட மொழிக்குடும்பம் தனிக்குடும்பத்தை சார்ந்தவை என்று 1856 இல் நிறுவுகிறார்.
- திபெத்தோ - சீன மொழிக்குடும்பம், ஆஸ்ட்ரிக் - ஆசிய அல்லது முண்டா மொழிக்குடும்பம் ஆகிய மொழிகள் இந்திய மொழிக்குடும்பத்துடன் இணைந்து கொண்டன. முண்டா மொழியைத் தனிமொழிக்குடும்பமாகக் கண்டறிந்தவர் மாக்ஸ் முல்லர் (1864)
- இந்தியாவில் ஏட்டளவில் மட்டுமே உள்ள மொழிகள்: நகலி, பாலி, பிராகிருதம்.
- இந்திய மொழிகளில் இலக்கிய மரபுகளும் எழுத்துகளும் காலப்போக்கில் தோன்றியனவாகும்.

S.MARTIN RAJA AP/TAMIL IGCE

**3. இந்திய மக்களும் மொழிக்குடும்பங்களும்**

1. இந்தோ - ஆரிய மொழிகள் பேசியவர்கள் - 73.30 விழுக்காடு. இது இந்தோ - ஆரிய மொழிக்குடும்ப வகையை சார்ந்ததாகும்.
2. திராவிட மொழிக்குடும்பம்: இம்மொழிகளை பேசியவர்கள் - 24.47 விழுக்காடு.
3. முண்டா அல்லது ஆஸ்ட்ரோ - ஆசிய மொழிகளை பேசியவர்கள் - 692495. இதில் 65 மொழிகள் உள்ளன.

4. சீனோ - திபெத்திய மொழிகளை பேசியவர்கள் - 0.73 விழுக்காடு. இதில் 226 மொழிகள் உள்ளன.

### 3.1. இந்திய மொழிகளை குறித்து ஆராய்ந்தவர்கள்:

1. இராபர்ட் கால்டுவெல் ஆராய்ந்தது - திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்
2. ஜான் பீம்ஸ் ஆராய்ந்தது - இந்தியாவின் தற்கால ஆரிய மொழிகள் ஒப்பிலக்கணம்
3. திரு. இராமகிருட்டிண கோபால் பந்தர்கர் ஆராய்ந்தது - இந்தோ - ஆரிய மொழிகள்

### 4. இந்திய மொழிகள் வரலாறு

- நீக்ரோ இன மக்களின் மொழிக்கூறுகள் தமிழகத்திலுள்ள இருளர்கள், காடர்கள், பணியர்கள், குறும்பர்கள் ஆகியோரிடையே காணப்படுகின்றன.
- தனது மொழியை இழந்து தமிழிலிருந்து தோன்றிய பல கிளைமொழிகளையும் வட்டார மொழிகளையும் பேசுகின்றனர்.
- கிழக்கு ஈரான் வடமேற்கு இந்திய பகுதிகளில் வாழ்ந்தவர்கள் ஆரியர்கள் ஆவர்.
- இந்தியாவில் முதலில் கிழக்கு வடக்குப் பஞ்சாப் பகுதிகளில் தங்கி இந்தோ - ஆரிய மொழிகளை பரப்பினர்.
- பல்வேறு இனம், மொழி, பண்பாடு போன்றவற்றால் இந்திய நாடு கலவையாக மாறியது.

### 5. இந்தோ - ஆரிய மொழிகள் (6 வகைப்படும்)

1. வடமேற்கு மொழிகள் - மேற்கு பஞ்சாபி, சிந்தி
2. தெற்கு பகுதி மொழிகள் - மராத்தி, கொங்கணி
3. கிழக்குப்பகுதி மொழிகள் - ஒரியா, வங்காளி, அசாமி, மைதிலி, மகஹி, போஜ்புரி
4. கிழக்கு நடுப்பகுதி மொழிகள் - கோசாலி, அவதி
5. நடுப்பகுதி மொழிகள் - இந்தி, கரிபோலி, உருது, பங்கரு, கிழக்கு பஞ்சாபி, ராஜஸ்தானி, குஜராத்தி, சௌராஷ்ட்ரி
6. வடக்கு அல்லது இமயமலை மொழிகள் - கொர்காலி, நேபாளி, கர்வாலி

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

### 6. இமயமலை மொழிகள்

- காஷ்மீரின் கிழக்கு பகுதி முதல் பூட்டான் வரை பேசப்படுகின்ற மொழிகள் இமயமலை மொழிகள்.
- இமயமலை மொழிக்கு மற்றொரு பெயர்: பஹரி அல்லது இமாலி ஆகும்.
- இமயமலை மொழி பலகிளை மொழிகளையும் வட்டார மொழிகளையும் உடையதாகும்.
- இப்பகுதி மக்களின் மக்களிடையே நேபாள மொழி செல்வாக்கு பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

### 7. ஆஸ்ட்ரிக் ஆசிய மொழிகள்

- இது இந்தியாவின் தொன்மையான மொழியாகும்.
- முண்டா அல்லது கோல் மொழிகள் கிழக்கு இந்தியா மற்றும் நடு இந்திய பகுதிகளில் வழக்கில் உள்ளன.
- சோட்டா நாக்பூர், ஒரிசா, மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளில் முண்டா மொழி பேசப்படுகிறது.
- சவரா, கடபா போன்ற மொழிகள் முண்டமொழியோடு தொடர்புடைய மொழிகளாகும்.
- காசி மொழி மூன்று லட்சம் மக்களால் பேசப்படுகின்றது. இம்மொழியில் ரோமன் எழுத்துகளில் இலக்கியங்கள் பலவற்றை கிறித்தவ பாதிரியார்களால் நூல்களாக அச்சிடப்பட்டுள்ளன.

### 8. சீன - திபெத்திய மொழிகள்

- சீன - திபெத்திய மொழிகளின் இருபெரும்பிரிவுகளை கொண்டது.
- தாய்மொழி சீனம் 2. திபெத்தோ - பர்மன்

### 9. பிறமொழிகள்

- அந்தமான் மொழி நீக்ரோ இன மக்களின் மொழியோடு தொடர்புடையதாகும். ஏறத்தாழ

இம்மொழி ஆயிரம் பேரால் பேசப்படுவதாக கணக்கிடப்படுகிறது.

- நிகோபார் மொழி ஏறத்தாழ பத்தாயிரம் பேரால் பேசப்படுகின்றது.
- சீனமொழி, சோமாலி மொழி, அரபிய மொழி, இரானிய மொழி போன்ற மொழிகளும் இந்தியாவில் பேசப்பட்டு வருகின்றன.
- 4. 1.5 லட்சம் பேர் ஆங்கிலத்தை வீட்டுமொழியாக பேசுகின்றனர்.
- கோவாவில் போர்த்துக்கீசிய மொழி, புதுச்சேரியில் பிரெஞ்சுமொழி, அரபிமொழி, பாரசீக மொழிகளும் இந்தியாவில் பேசப்படுகின்றன.

**2. திராவிடமொழிகள் பற்றி விளக்குக.**

- தென்னிந்திய மொழிகளை திராவிட மொழிகள் என்றழைத்தவர் - டாக்டர் இராபர்ட் கால்டுவெல்
- 1856 இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை வெளியிடுகிறார்.
- தமிழ்மொழி சமஸ்கிருதத்திலிருந்து வந்தது அல்ல. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகள் தனி, திராவிடமொழிக்குடும்பத்தை சார்ந்தது என்று குறிப்பிடுகிறார்.
- எழுத்து வடிவமும் இலக்கியங்களையும் உடையது திருந்திய மொழிகள் என்கிறார்.
- எழுத்து வடிவமும் இலக்கியங்களும் இல்லாததை திருந்தா மொழிகள் என்கிறார்.
- திருந்திய மொழிகள் என்பது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு
- திருந்தா மொழிகள் என்பது தோடா, கோண்டு, கூ, கோடா, ராஜ்மகால், ஓரொவன்

**1. தமிழும் தென் திராவிடமும்**

- தமிழ்மொழியுடன் நெருங்கிய தொடர்புடைய மொழி மலையாளம்
- தென் திராவிட மொழிகளில் மக்கள் அதிகளவில் பேசும்மொழி தெலுங்கு மொழியாகும்.
- மூன்றாவது இடம் பெறுவது கன்னடம். கன்னட இலக்கியங்கள் 10 ஆம் நூற்றாண்டில் தோன்றியனவாகும்.
- இந்தி, வங்காளி போன்ற மொழிகளில் திராவிட மொழி செல்வாக்கு பெற்றுள்ளது.
- வடமொழியில் மாற்றங்களை ஏற்படுத்திய திராவிட மொழிகளாகும்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**2. திராவிட மொழிச் சொற்கள்**

- வடமொழியில் திராவிட மொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளது. திராவிட மொழிச் சொற்ளை சுதேசிச் சொற்கள் என்று வடமொழி இலக்கண அறிஞர்கள் அழைப்பர்.
- ஒரிய மொழியில் திராவிட மொழிச் சொற்கள் உள்ளன.
- இந்தியா முழுமைக்குமான மொழிக்குடும்பமாக திராவிட மொழிகள் திகழ்கின்றன.

**3. திராவிட மொழிகளின் அமைப்பு**

- திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழிகளாகும். ஒரு மொழியில் பொருளை உணர்த்த குறிக்கும் சொற்கூறே உருபன் எனப்படும்.
- உருபனுடன் ஒட்டுகள் சேர்வது ஒட்டும் உருபன்கள், ஒட்டு உருபன்கள்
- சான்று: செய்தான் என்பது செய் ௗ த் ௗ ஆன் பிரிக்குமிடத்து,
- செய் - வினை நிகழ்ச்சியை குறிக்கும் உருபன்
  த் - இறந்த காலத்தைக் காட்டும் - உருபன்கள்
  ஆன் - ஆண்பாலைக் காட்டும் - ஒட்டுருபன்

**4. அடிப்படைச் சொற்கள் - ஒற்றுமை**

- பேச்சு வழக்கில் அதிகம் பயன்படும் பொருளை குறிப்பவையே அடிப்படைச் சொற்களாகும்.
- திராவிட மொழிகளில் அடிப்படைச் சொற்கள் பெரிய மாற்றங்கள் எதுவுமின்றி ஒன்று போலவே அமைகின்றன.

சான்றாக, தமிழ் - கண்,

கன்னடம், மலையாளம் - கண்ணு

தோடா - கொண்

கொடகு - கன்னு

தெலுங்கு - கன்னு

- எண்களைக் குறிக்கும் போது, தமிழ் - மூன்று

மலையாளம் - மூணு

கன்னடம் - மூறு

தெலுங்கு - மூடு

**3. தமிழ்ச்செவ்வியல் நூல்கள் குறித்து கட்டுரை வடிவில் எழுதுக.**

- செம்மொழி என்பது ஒரு மொழியின் இலக்கிய பழமை, பிற தகுதிகள், இலக்கிய படைப்பின் வளம், பிறமொழிகளை சாராது தனித்து இயங்குதல், இலக்கிய தரம் ஆகியனவற்றின் அடிப்படையில் செம்மொழி என்று வகைப்படுத்தப்படுகிறது.
- செம்மொழிக்குரிய இரண்டு சிறப்புப் பண்புகள்: 1. இலக்கிய படைப்புகள் 2. கலைப்படைப்புகள்

1. இலக்கிய படைப்புகள்: ஒரு மொழியின் சிறப்பிற்கு அடையாளமாகத் திகழ்வது அம்மொழியின் பழமை வாய்ந்த இலக்கியங்கள், கருத்துச் செறிவுகள் ஆகும்.

2. கலைப்படைப்புகள்: மொழிசார்ந்து உருவாக்கப்பட்ட கலைப்படைப்புகளே அம்மொழிக்குரிய சான்றாகும். எ.கா.: கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை.

உலகச் செம்மொழிகள்: கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் (ஹீப்ரு), பாரசீகம், அரபு, சமஸ்கிருதம், தமிழ் ஆகிய ஏழும் உலகச்செம்மொழிகள் எனப்படும்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**4. செம்மொழிக்கான தகுதிப்பாட்டை விளக்கி எழுதுக. (அல்லது)**

1. தொன்மை
2. பிறமொழித் தாக்கமின்மை
3. தாய்மை தன்மை
4. தனித்தன்மை
5. இலக்கிய, இலக்கண வளம்
6. பொதுமைப் பண்பு
7. நடுவுநிலைமை
8. பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு
9. உயர் சிந்தனை
10. கலை, இலக்கிய தனித்தன்மை வெளிப்பாடு
11. மொழிக்கோட்பாடு

**தேவநேயப் பாவாணர் குறிப்பிடும் செம்மொழிக்குரிய தகுதிகள் - 16**

1.தொன்மை 2.முன்மை, 3.எண்மை, 4.ஒண்மை 5.இளமை 6.வளமை 7.தாய்மை 8.தூய்மை 9.செம்மை 10.மும்மை 11.இனிமை 12.தனிமை 13.பெருமை 14.திருமை 15.இயன்மை 16.வியன்மை

4. தமிழ்ச் செவ்வியல் நூல்கள் - 41 நூல்களும் கி.பி. 6 - ஆம் நூற்றாண்டிற்கும்

முற்பட்டவை. தொல்காப்பியம், இறையனார் களவியல், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், இரட்டைக்காப்பியங்கள், முத்தொள்ளாயிரம் முதலியவைகள் ஆகும்.

**5. சங்கத் தமிழரின் சமயக் கொள்கைகள்**

- தமிழ்ச்சமூகம், காதல், வீரம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிய உதவுவது சங்க இலக்கியங்கள் ஆகும்.
- தமிழர்களின் பண்பாட்டில் ஒன்றாக இறை வழிபாடு இருந்துள்ளது. சமய உணர்வு சார்ந்த சொற்கள், வாக்கியங்கள் சங்கப் பாடல்களிலும் காணப்படுகின்றன.
- மன்னர்களும் போர்களை எதிர்கொள்ள புலவர்களின் வழிகாட்டுதலையே பின்பற்றியுள்ளனர்.
- உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் வைத்தே தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் இயற்றப்பட்டுள்ளன.
- தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளம் ஆயிரு முதலின் என்று தொல்காப்பியம் பாயிரத்தில் பனம்பரனாரும் குறிப்பிடுகிறார்.
- தமிழர்களின் சமயக் கொள்கைக்கு சான்றாகத் திகழ்வது உலக வழக்கும், செய்யுள் வழக்குமாகும்.
- கடவுள் கொள்கைக்கு அடிப்படையாக இருப்பது உயிர்களும் உலகமுமாகும்.
- சங்ககாலத் தமிழர்கள் முதற்கடவுளை கடவுள், இயவுள் என்று குறித்தனர்.
- உலகு இயற்றியான், உலகு படைத்தோன் என்று நற்றிணை 240 பாடல் வரிகள் சான்றளிக்கின்றன.
- யாதும் ஊரே யாவரும் கேளீர் என்பது கணியன் பூங்குன்றனாரின் உலகியல் சார்ந்த சிந்தனையை எடுத்துக்காட்டுகிறது.

S MARTIN RAJA AP, TAMIL, IGCE

**6. சங்க இலக்கியத்தில் காணப்படும் பகிர்தல் அறம் குறித்து விளக்குக.**

- தமிழர்களின் வாழ்க்கை நெறிமுறைகளை எடுத்துக்காட்டுவது சங்க இலக்கியங்கள்.
- சங்க இலக்கியங்கள் பாடப்பட்டது ஒரு காலம், பாடிய புலவர்கள் வேறுவேறு ஊரினர், எனினும் சங்க இலக்கியங்கள் இன்றைக்கும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய அறத்தை வலியுறுத்துவதாகத் திகழ்கின்றன.

**1. அறத்தின் இயல்பு:**

- மனிதனின் நடத்தையை ஆராய்வது அறவியல் (நுவாiஉ) எனப்படுகிறது.

- தமிழர்களின் வாழ்வில் வடமொழி சிந்தனைகள் ஊடுருவி இருந்துள்ளன.

- சங்க இலக்கியங்கள் காலம் கடந்தும் நிகழ்காலத்திற்கும் பொருந்துவனவாக இருக்கின்றன.

**2. பண்பாட்டு மாற்றங்கள்**

- சங்க இலக்கியங்கள் முழுவதும் பழங்குடி தமிழர்களின் அறிவு, வேளிர் (குறுநில மன்னர்கள்), வேந்தர்களின் எழுச்சி, அரசியல் நிலைமை, பண்பாட்டு மாற்றங்கள் போன்றவற்றை காலக்கண்ணாடியாக காட்சிப்படுத்துகின்றன.
- சமூக மாற்றத்தையும் பண்பாட்டையும் புலவர்கள் கவிதைகளாகப் படைத்துள்ளனர்.
- கவிதைகள் காதல், வீரம் மட்டுமின்றி வாழ்விற்கு தேவையான ஒழுக்கத்தையும் எடுத்துரைக்கின்றன.
- தமிழர்கள் அறத்தை முதன்மையாக போற்றி வந்துள்ளனர்.

**3. அறத்திற்கான வரையறை:**

- அறம் நெகிழ்வுத்தன்மை உடைய பொருளை தருகின்ற சொல்லாகும்.
- ஒரு மனிதன் தன்னைத்தானே தலைவனாக்கிக் கொள்வதற்குரிய நெறிமுறைகள், கொள்கைகள் ஆகியவற்றின் தொகுப்பே அறம் எனப்படுகிறது.

**4. வாழ்வியல் நோக்கத்தில் அறம்:**

- சங்க கால மக்கள் அறத்தை ஒரு கொள்கையாகவோ, கோட்பாடாகவோ, சட்டமாகவோ கருதாமல், வாழ்க்கைக்குரிய நெறியாகவே போற்றி வந்துள்ளனர்.
- ஒழுக்க நெறிகளுக்கான விதிமுறைகளின் தொகுப்பே அறம் எனப்படுகிறது.
- சங்க கால மக்களின் வாழ்க்கை முறைகளே அறத்திற்குரிய சான்றுகளாகும்.

**7. திருக்குறள் காட்டும் மேலாண்மைச் செய்திகளை விளக்குக.**

- உலகப் பொதுமறை என்று போற்றப்படுவது திருக்குறள். இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமை உடைய திருவள்ளுவரின் கருத்துக்கள் இன்றைய நவீன கோட்பாடுகளுக்கும் பொருந்தி வருவதே அதன் தனிச்சிறப்புகளாகும்.

1. **மேலாண்மை:** ஓர் அமைப்பு, துறை, நிறுவனம் முதலியவற்றில் ஊழியர்களை கட்டுப்படுத்துதல், கண்காணித்தல், பராமரித்தல் போன்ற செயல்பாடுகளை கொண்டதாகும்.

2. **திட்டமிடல்:** எந்தவொரு செயலையும் முதலில் திட்டமிட்டு அதன் பிறகே செயல்படுத்த வேண்டும். முதலில் தொடங்கிவிட்டு அதற்கு பின்னர் திட்டமிட்டுக்கொள்ளலாம் என்று கருதினால் இறுதியில் இழப்பும் தோல்வியும் ஏற்படும் என்கிறார் வள்ளுவர்,

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு (467)**

3. **ஒழுங்கமைவு:** நல்ல பணியாட்கள், பொருளாதாரம், நல்ல ஆலோசகர்கள் அமையும் போது அந்நிறுவனம் முன்னேற்றமடையும் என்கிறார் வள்ளுவர்.

4. **பணியமர்தல்:** சிறந்த மேலாண்மை இயக்குநர் என்பர், பணியாளரைத் தேர்வு செய்வதிலும் பணிகளைப் பகிர்ந்து அளிப்பத்திலும் திறமை உடையவராக இருக்க வேண்டும் என்கிறார்.

S.MARTIN RAJA, AP TAMIL, IGCE

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்| (471)**

5. **வழிநடத்துதல்:** ஒரு நிறுவனத்தை வழிநடத்துவதற்கு தலைமைப் பண்பு அசியமாகும். அத்தகைய தலைவன் தனது ஊழியனுக்கு முன்மாதிரியாகவும், நம்பிக்கைக்கு உரியவனாக இருத்தல் வேண்டும். பார்வைக்கு எளியவனாகவும், கடுமையான சொற்களை பயன்படுத்தாதவனாகவும் ஊக்கமுடையவனாகவும் இருக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலன் ஆள் பவர்க்கு (383)**

6. **மனஉறுதி:** நிறுவனத்தில் பணிபுரியும் தலைவன் திட்டமிடுவதோடு பிரச்சனைகளை எதிர்கொண்டு சரிசெய்ய மனஉறுதி படைத்தவனவாக இருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

7. **நுண்ணறிவு:** ஒரு நிறுவனத்தின் தலைவன் பல நூல்களை கற்று தேர்ச்சி பெற்றிருந்தாலும் இயற்கையான நுண்ணறிவு அவசியம் என்கிறார் வள்ளுவர்.

**மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்**
**யாஉள முன் நிற்பவை| (636)**

8. **ஒருங்கிணைத்தல்:** தலைவன் என்பவன் நிறுவனத்தை ஒருங்கிணைப்பதோடு அந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அடிப்ப்யாக இருக்கும் ஊழியனை மகிழ்ச்சியோடு தகுந்த நேரத்தில் சிறப்பித்து ஊக்கப்படுத்தப்படுத்த வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

9. **தொழில் அறம்:** தொழில் முனைவோர்கள் சமூகத்தின் மீது அக்கறை கொண்டிருக்க வேண்டும். முறைதவறிய வழியில் கிடைக்கின்ற செல்வத்தை நல்ல காரியத்திற்கு பயன்படுத்துவதை விட கறைபடிந்த அச்செல்வத்தை உடனே கைவிட்டுவிட வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**8. தமிழ்க்காப்பியங்கள் குறித்து விளக்குக.**

- தமிழில் காப்பிய படைப்பு கி.பி.2 ஆம் நூற்றாண்டிற்கு பின்னர் தொடங்குகிறது.
- தமிழின் முதல் காப்பியம் சிலப்பதிகாரம்
- இரட்டைக்காப்பியங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆகும்.
- இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தை உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று சான்றோர்கள் பாராட்டுவர்.
- நல்வினை, தீவினைகளை அனுபவித்து உலக வாழ்க்கையில் அனுபவித்து நல்லனவற்றை செய்து இறுதியல் இறவாத இன்பமாகிய இறைநிலை அடைதல் பற்றி விரிவாக சிறப்பித்துக் கூறுவதே காப்பியங்கள் எனப்படுகின்றன.

**1. சிலப்பதிகாரம்**

- சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம், இயற்றியவர் இளங்கோவடிகள்
- கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது
- சேரன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகள்
- சோழநாட்டின் தலைநகர் பூம்புகாரைச் சேர்ந்தவன் கோவலன், அவனது மனைவி கண்ணகியின் கதையை கூறுவதே இக்காப்பியம்.
- அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதுஊம்

  உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,

  ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம் என்பது சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகளாகும்.
- முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம், நாடகக்காப்பியம், புதுமைக்காப்பியம், தமிழ்த்தேசிய காப்பியம், மூவேந்தர் காப்பியம், வரலாற்றுக் காப்பியம், புரட்சிக் காப்பியம் என்றும் அழைக்கப்படுகின்றன.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**2. மணிமேகலை**

- 30 காதைகளை உடையது
- கதை அமைப்பு, கதைமாந்தர், காலம், சிலப்பதிகாரத்தை ஒத்திருத்தலே இரட்டைக்காப்பியம் எனப்படுகிறது.
- கோவலனை பிரிந்த மாதவி, பொதுவாழ்க்கை மற்றும் கலைப் பணியிலிருந்து விலகுகின்றாள். கடந்த காலத்தை மறக்க மணிமேகலையை வளர்க்க புத்த சமய மடத்தில் சேர்கின்றாள்.
- மணிமேகலை வாழ்ந்து வந்த நாட்டின் இளவரசன் உதயகுமாரன் அவன் மீது காதல் கொள்கின்றான். அவனிடமிருந்து விடுபட்டு மணிமேகலை மணிப்பள்ளத் தீவுக்கு சென்று புத்தத் துறவி ஆகிறாள். அங்கு அவளுக்கு பசிப்பிணி போக்கும் ஷஅட்சயப்பாத்திரம்| கிடைக்கிறது. அன்றுமுதல் மக்களின் பசிப்பிணியை போக்குவதையே தன் கடமையாகக் கொள்கின்றாள். இறுதியில் மறைந்த பின் மணிமேகலை தெய்வமாகப் போற்றப்படுகின்றாள்.
- அறம் எனப்படுவது யாது எனக்கேட்பின்<br>மறவாது இது கேள் மண் உயிர்க்கெல்லாம்<br>உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல்

**3. சீவக சிந்தாமணி**

- சீவக சிந்தாமணியை இயற்றியவர் திருத்தக்கதேவர், இவர் சமணத்துறவி என மதிக்கப்படுகிறார்.
- இவர் சோழ வம்சத்தில் பிறந்தவர் என நச்சினார்க்கினியர் என்ற உரையாசிரியர் குறிப்பிடுகிறார்.
- சமண புராணங்களில் தொன்று தொட்டு நிலவிவரும் கதைகளை ஜனரஞ்சகமாகவும் இனக்கவர்ச்சியுடனும் கற்பனையுடனும் தமிழில் எழுதியவர் திருத்தக்கதேவர்.

- சீவக சிந்தாமணியின் வேறு பெயர்கள்: மணநூல், முக்தி நூல், காமநூல், மறைநூல், இயற்கை வளம், முதல் விருத்தப்பா காப்பியம்.

**4. வளையாபதி**

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை, சமணக்காப்பயிம், விருத்தப்பாவால் ஆனது,
- கிடைத்தவை 72 பாக்கள் மட்டுமே
- மடலேறுதல் பற்றிக் கூறும் முதல் காப்பியம்

**5. குண்டலகேசி**

- ஆசிரியர் நாதகுத்தனர்
- பௌத்த காப்பியம்
- தமிழ் உரையாசிரியர்கள் அதிகமாக இந்நூலிலிருந்து மேற்கோள்களை எடுத்துப் பயன்படுத்தியுள்ளனர்.
- கி.பி.7 ஆம் நூற்றாண்டு
- குண்டலகேசி என்றால் சுருண்ட தலைமுடியை உடையவள் என்று பொருள்
- குண்டலகேசிக்கு விருத்தம், அகல கவி என்ற வேறு பெயர்களும் உண்டு
- குண்டலகேசியின் வரலாற்றைக் கூறுவது நீலகேசி
- குண்டலகேசியின் இயற்பெயர் பத்திரை
- குண்டலகேசியின் கணவன் காளன், இவன் ஒரு கள்வன்.
- குண்டலகேசி கலைஞரால் 'மந்திரகுமாரி' என்று திரைப்படமாக்கப்பட்டது.

**9. ஐம்பெரும் காப்பியங்கள் பற்றி விவரித்து எழுதுக.**

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

- பெருங்காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்த தண்டியாசிரியரே சிறுங்காப்பியத்திற்கும் இலக்கணம் வகுத்துள்ளார்.
- முதன் முதலில் சி.வை. தாமோதரம்பிள்ளை தமது சூளாமணி முகவுரையில் சிறுகாப்பியம் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார்.

**1. உதயணகுமார காவியம்**

- வத்தவம் என்னும் நாட்டரசன் சதானிகனுக்கும் அவன் மனைவி மிருகாவதிக்கும் பிறந்த உதயணின் கதையை பேசுகிறது இக்காப்பியம்.
- ஆறு காண்டங்கள், 369 விருத்தப்பாக்கள்
- ஆசிரியர் சமணப்பெண் துறவி கந்தியார்.
- உதயணன் நான்கு மனைவிகளை திருமணம் முடித்து இறுதியில் துறவு கொள்வதை அறியமுடிகிறது.

**2. யசோதர காவியம்**

- ஆசிரியர் பெயரில் கருத்து வேறுபாடு நிலவுகிறது
- இந்து சமயத்தில் ஒரு காலத்தில் தெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுப்பது வழக்கமாக இருந்தது. பிற்காலத்தில் உயிர்களுக்குப் பதிலாக மாவினால் செய்த உருவங்களை வைத்து பலி கொடுப்பது போல் பாவனை செய்யும் வழக்கம் ஏற்பட்டது. உயிர்ப்பலியை தீவிரமாக எதிர்த்தது சமண சமணம்.
- இக்காவியம் ஐந்து சருக்கங்களையும் 320 செய்யுட்களையும் உடையதாகும்.

**3. நீலகேசி**

- நீலகேசி என்றால் கருத்தக் கூந்தலை உடையவள் என்று பொருள்.
- ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- சருக்கம் - 10
- பாடல்கள் - 894

- நீலகேசித் தெருட்டு என்ற வேறு பெயர்களும் உண்டு.
- சமண முனிவர் முனிச் சந்திரனை நீலி என்ற பெண் அச்சுறுத்தி மயக்க முயல்கிறாள். மயங்காத முனிவர் அறிவுரை கூற, அவள் திருந்தி சமண மதத்தை ஏற்றுப் பிற சமய வாதிகளை வெற்றி கொள்கிறாள்.
- சமணம் அல்லாத பிற இந்திய சமயங்களின் கோட்பாடுகளைத் தருக்க முறையில் மறுத்துரைக்கும் நூலாகும்.
- குண்டலகேசிக்கு எதிராக எழுதப்பட்ட நூல் நீலகேசி

**4. சூளாமணி**

- சூளாமணியை இயற்றியவர் தோலாமொழித் தேவர்.
- இது சமண காப்பியம்
- 12 சருக்கங்களையும் 2131 பாடல்களையும் உடையதாகும்.
- சூளாமணி, ஸ்ரீபுராணம் என்னும் மகாபுராணத்தைத் தழுவிய கதை என்பர்.
- வாழக்கையே துன்பங்கள் நிறைந்தது. இதில் இடையிடையே கிடைக்கும் இன்பம் சிறிய அளவுடையதாயின் அதைத் துய்க்க விரும்புவதே மனித இயற்கை என்ற உண்மையை எளிமையாக சூளாமணி எடுத்துரைக்கின்றது.

**10. தமிழகத்தில் சமணசமயம் எவ்வாறு இருந்தது என்பதை விளக்குக.**

- சங்க இலக்கியத்திற்கு சமணர்கள் ஆற்றிய பங்கு அளப்பரியதாகும்.
- சீவக சிந்தாமணி, நாலடியார், ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகியன சமண முனிவர்களால் இயற்றப்பட்டவையாகும்.
- சிலப்பதிகாரத்திலும் சமணத்தின் தாக்கம் அதிகம் உள்ளது.

**1. அகராதிகள்**

S.MARTIN RAJA, AP, TAMIL, JGCE

- ஒரு மொழியிலுள்ள சொற்கள் அனைத்தையும் அகர முதலிய எழுத்து வரிசையில் அமையும்படி ஒரு சேரத் தொகுத்து அவற்றின் பொருள்களை அம்மொழியிலோ அல்லது பிறமொழியிலோ விளக்கும் நூல் அகராதி எனப்படும்.
- கி.பி.8 ஆம் நூற்றாண்டில் சமண திவாகர முனிவர் இயற்றியது திவாகர நிகண்டும்
- கி.பி.10 ஆம் நூற்றாண்டில் பிங்கல முனிவர் இயற்றியது பிங்கல நிகண்டு
- கி.பி.16 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது சூடாமணி நிகண்டு முதலியவை தமிழ்மொழிக்கு வளம் சேர்த்துள்ளன.

**2. கோயில்கள்**

- பாண்டிய நாட்டில் 26 சமணக் குடைவரை கோயில்கள், 220 கல் படுக்கைகள், 60 கல்வெட்டுகளும் உள்ளன.
- கி.பி.7 ஆம் நூற்றாண்டின் சித்தன்னவாசல் குகைகள் சமண ஓவியக் கலைக்கும், குடைவரைகளுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் கழுகுமலை சமணர் சிற்பங்கள் மற்றும் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**11. பௌத்த சமயம் தமிழகத்தில் எவ்வாறு தழைத்து மறைந்தது விளக்குக.?**

**1. பௌத்தமும் தமிழும்**

- அசோகர் காலத்தில் தமிழ் நாட்டில் பரவிய மதம் பௌத்தம்
- பௌத்தம் சிறப்புற்றிருந்த நகரங்கள்: பூதமங்கலம், பூம்புகார், போதிமங்கலம், பொன்பற்றி, மதுரை, நாகப்பட்டினம், காஞ்சிபுரம்

**2. பௌத்த நூல்கள்:**

மணிமேகலை - சீத்தலைச் சாத்தனார்
குண்டலகேசி - நாதகுத்தனார்
விம்பிசாரர் கதை - ஆசிரியர் பெயர் தெரியவில்லை
திருப்பதிகம் - ஆசிரியர் பெயர் தெரியவில்லை
அபிதம்மாவதாரம் - புத்த தத்தர்
ஆசிய ஜோதி - கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
வீரசோழியம் - தமிழில் எழுதப்பட்ட முதல் ஐந்திலக்கண நூல், ஆசிரியர் பொன்பற்றி புத்தமித்திரனார்.

**3. புத்தர் கண்ட நான்கு உண்மைகள்**

- **துன்பம்:** மனிதர்களால் துன்பத்தை தவிர்க்க முடியாது. பிறப்பு, நோய், முதுமை, இறப்பு, பசி, பகை, கொலை, வெகுளி இழப்பு, மயக்கம் முதலியவை மனிதனுக்கு துன்பத்தைத் தருபவை.
- **ஆசை:** துன்பத்துக்கான காரணம் ஆசை அல்லது பற்று
- **துன்பம் நீக்கல்:** ஆசையை விட்டுவிடுவதுவே துன்பத்தை நீக்கும் முறைமை.
- **எட்டு நெறிகள்:** எட்டு நெறிகளும் துக்கத்தைப் போக்க உதவும் வழிமுறைகள் ஆகும்.
- நற்காட்சி, நல்லெண்ணம், நன்மொழி, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நற்தியானம் முதலியவை எட்டு நெறிமுறைகளாகும்.

**12. பக்தி இலக்கியம் குறித்து கட்டுரைவடிவில் விளக்கி எழுதுக.**

- சங்க காலத்திற்கு பின் தோன்றிய பக்தி இலக்கியங்கள் சமண, பௌத்த இலக்கியங்களாகும். இவைகள் இன்பத்தை விடுத்து மறுமையை தேடுவதே இறைவனை அடைவதற்கான வழி என்பதை வலியுறுத்தின.
- மக்கள் காதலை விடுத்து துறவத்தை மேற்கொண்டனர். ஆடல், பாடல்கள் இறைவனுக்கு எதிரானது என்று சமண, பௌத்த சமயங்கள் பேசின. இதனால் நாட்டில் கலைகள் தோன்றுவதில் சிக்கல்கள் ஏற்பட்டன.
- இந்நிலையில் சைவ பெரியோர்களும் வைணவ ஆழ்வார்களும் இறைவனுக்கு முன் அனைவரும் சமம் என்ற கருத்தை முன்வைத்தனர். உலக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டே இறைவனை அடையலாம் என்றும் ஆடலும் பாடலும் இறைவனுக்குரியவை என்றும் வலியுறுத்தினர். இதனால் சமயப்புரட்சி ஏற்பட்டது.
- பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்கள் சிறந்தோங்கி இருந்தன. சைவ இலக்கியங்களும் வைணவ இலக்கியங்களும் செல்வாக்கு பெற்றிருந்தன.

**1. பக்தி இலக்கியங்களின் சிறப்பு**

- 63 நாயன்மார்கள் பாடிய பதிகங்களும் பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பிரபந்தங்களும் இசைப்பாடல்கள் என்பதால் மக்களை பெரிதும் கவர்ந்தன.

**2. திருமுறைகளும் பிரபந்தங்களும்**

- சைவ நாயன்மார்கள் பாடியவை பதிகங்கள், பன்னிரு திருமுறைகள் என்றும் பன்னிரு ஆழ்வார்கள் பாடியவை பிரபந்தங்கள், நாலாயிரதிவ்யப் பிரபந்தங்கள் என்றும் தொகுக்கப்பட்டுள்ளன.

**13. ஆழ்வார்களின் பக்தித் திறத்தை விளக்குக.**

**பன்னிரு ஆழ்வார்கள்**

- வைணவ சமயத்தின் கடவுள் திருமால், திருமாலின் மீது பக்திக் கொண்டு தமிழ்ப்பாடல்களை பாடியவர்கள் ஆழ்வார்கள் ஆவர்.
- 4000 பாடல்களை கொண்டது நாலாயிர திவ்விய பிரபந்தம் என்னும் பெயரில் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. தொகுத்தவர் நாதமுனிகள்

- திவ்விய என்ற சொல் திருமாலையும் பிரபந்தம் என்ற சொல் பாடலையும் குறிக்கின்றது.
- தமிழ் மறை, திராவிட வேதம், திராவிட பிரபந்தம் என்னும் பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

**1. பொய்கையாழ்வார்**

- காஞ்சிபுரத்தில் திருவெஃகா என்னுமிடத்தில் உள்ள பொய்கையில் தாமரை மலரில் தோன்றியதால் பொய்கையாழ்வார் எனப்படுகிறார்.
- திருமாலின் (பாஞ்சசன்னியம்) என்ற சங்கின் அவதாரமாகக் கருதப்படுகின்றார்.
- இவர் பாடிய 100 பாடல்கள் முதல் திருவந்தாதி எனப்படும்.

**2. பூதத்தாழ்வார்**

- மாமல்லபுரத்தில் உள்ள குருக்கத்தி மலரில் தோன்றியவர்.
- திருமாலின் (கௌமோதகி) என்ற கதாயுதத்தின் அவதாரமாகக் கருதப்படுகிறார்.
- தனது பாடல்களில் பூதம் என்ற சொல்லை அதிக இடங்களில் பயன்படுத்தியதால் பூதத்தாழ்வார் எனப்படுகிறார்.
- இவர் பாடிய 100 பாடல்கள் இரண்டாம் திருவந்தாதி எனப்படும்.

**3. பேயாழ்வார்**

- இவர் சென்னை, மயிலாப்பூரில் செவ்வல்லி மலரில் பிறந்தவர்.
- திருமாலின் (நந்தகம்) என்ற வாளின் அவதாரமாகக் கருதப்படுகிறார்.
- திருமாலின் மீது கொண்ட பக்தியினால் சோர்ந்து, அழுது, சிரித்து, ஆடிப்பாடி பேய்ப்பிடித்தாற் போல் இறைவனை தொழுது மகிழ்ந்ததால் பேயாழ்வார் எனப்படுகிறார்.
- இவர் பாடிய 100 பாடல்கள் இரண்டாம் திருவந்தாதி எனப்படும்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**4. திருமழிசையாழ்வார்**

- இவரின் ஊர் திருமழிசை
- சக்கரத்தின் அம்சமாகப் பிறந்தவர்.
- சக்கரத்தாழ்வார், பக்திசாரர் என்ற வேறுபெயர்களும் இவருக்கு உண்டு.
- சைவம் முதலிய பல சமயங்களுக்கும் சென்று இறுதியில் வைணவத்திற்கு வந்தவர்.
- திருமாலை தனது நண்பனாக பாவித்து பல பாசுரங்களை இயற்றியுள்ளார்.
- இவர் சொன்னதை கேட்டு செய்த பெருமால் இருக்குமிடம் காஞ்சிபுரம் (திருவெஃகா)
- கோயில் பணி செய்து கொண்டிருந்த மூதாட்டி ஒருவர் முதுமையால் பணிபுரிய முடியாமல் தள்ளாடியதைக் கண்ட இவர். திருமாலிடம் மனமுறுகி வேண்டி அம்மூதாட்டி - இளமை பெறுகின்றாள். இதை அறிந்த அந்த நாட்டு மன்னன் ஆழ்வாரின் சீடன் கணிகண்ணனிடம் ஆழ்வாரை அழைத்து வந்து தன்னையும் இளமையாக்குமாறு கூறுகின்றான். கணிகண்ணன் மறுக்கிறார். உடனே தன்னைப் புகழ்ந்து பாட வேண்டும் என்று மன்னன் ஆணையிடுகிறான். ஷநாரயணனை பாடும் வாயால் நரனை பாடமாட்டேன் என்று கணிகண்ணன் கூறுகின்றான். மன்னன் உடனே நீ ஊரை விட்டு வெளியேற வேண்டும். என்பதை அறிந்து கணிகண்ணனுடன் திருமழிசையாழ்வாரும் திருமாலிடம் சென்று கூறியதை அறிந்து மன்னன் இருவரிடமும் மன்னிப்பு கேட்டான்.

**5. நம்மாழ்வார்**

- ஊர் ஆழ்வார் திருநகரி எனப்படும் திருக்குருகூர்
- இவர் குழந்தையாக இருந்தபோது இவரது பெற்றோர்கள் பெருமாள் கோயில் முன்பு இறக்கிவிட்டபோது தவழ்ந்து சென்று புலியமரத்தடியில் பத்மாசனம் யோகத்தில் அமர்ந்தார். அந்த புலியமரத்தை ஆதிசேடனின் அவதாரமாகக் கொண்டவர்.
- பிறந்தது முதல் ஊமையாக இருந்த நம்மாழ்வார் புலியமரத்தடியில் தவமிருந்து திருமாலின் அருளால் பேசியவர்.
- குழந்தையாக இருக்கும்போதே தவமிருந்ததால் காற்றாகிய சடம் என்னும் வாயுவை தனது கோபத்தால் அடக்கியதால் சடகோபர் எனப்பட்டார்.

- திருமால் இவரை நம்சடகோபன் என்று அழைத்தால் நம்மாழ்வார் எனப்படுகிறார்.

**6. மதுரகவியாழ்வார்**

- ஊர் திருக்கோவிலூர், கி.பி.9 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர்
- கருடாழ்வார் அம்சமாகப் பிறந்தவர்.
- நம்மாழ்வாரின் சீடர்
- திருமாலைப் பாடாமல் நம்மாழ்வாரையே தெய்வமாகப் பாடுகின்றார்.
- வடக்கே அயோத்திவரை சென்ற ஒரே ஆழ்வார் இவரே.
- செவிக்கும் சிந்தனைக்கும் இனிய பாடல்கள் பல பாடியதால் இவர் மதுரகவியாழ்வார் எனப்படுகின்றார்.

**7. குலசேகராழ்வார்**

- இவரின் ஊர் திருவஞ்சைக் களம், இவரும் கி.பி. 9 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர்.
- இவர் திருடவரதன் என்ற மன்னனின் மகன்.
- திருமாலின் மீது கொண்ட பக்தியின் காரணமாக அரச பதவியை வேண்டாமென ஒதுக்கியவர்
- திருமாலின் கௌத்துப மணியின் அவதாரமாகக் கருதப்படுகிறார்.
- இவருடைய வேறுபெயர்கள்: கடல் நாயகன், கோழிக்கோன்.
- இவர் திருவேங்கடமலையில் திருமாலிடம், பறவையாக, மீனாக, ஆறாக, படியாக, கொடிமரமாகப் பிறக்கும் வரம் கேட்டு வேண்டியவர்.

**8. பெரியாழ்வார்**

- இவரின் ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர்
- இவருக்குரிய வேறுபெயர்கள்: வி~;ணுசித்தன், பட்டர்பிரான்
- திருவில்லிப்புத்தூரில் ஒரு நந்தவனத்தை அமைத்துப் பூமாலைக் கட்டி திருமாலுக்கு அணிவித்து வழிபாடு செய்து வந்தார்.
- கண்ணனுடைய பருவத்தை பிள்ளைத்தமிழ் நூலாகப் பாடுகின்றார்.
- ஆண்டாளை தனது மகளாகக் கருதி வளர்க்கின்றார்.
- இவரது இயற்றிய நூல்கள் திருமொழி, திருப்பல்லாண்டு ஆகும்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**9. ஆண்டாள்**

- ஊர் ஸ்ரீவில்லிப்புத்தூர்
- பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்
- பூமகள் அம்சமாகப் பிறந்தவர்.
- துளசி வனத்தில் கண்டெடுக்கப்பட்டவள் ஆண்டாள்
- திருமாலுக்கு மாலைக்கட்டிக் கொடுத்ததால் கோதை எனப்படுகின்றாள்.
- தான் அணிந்த மாலையை மனவிருப்பத்துடன் திருமாலுக்கு அளித்தால் சூடிக்கொடுத்தச் சுடர்கொடி என்றழைக்கப்படுகின்றாள்.
- இவருடைய நூல்கள் திருப்பாவை, திருமொழி

**10. திருப்பாணாழ்வார்**

- இவரின் ஊர் உறையூர்
- இசை வழிபாடு செய்யும் பாணர் குலத்தில் பிறந்தவர்
- யாழ் ஏந்திப் பெருமாளைப் பாடி வந்ததால் திருபாணாழ்வார் எனப்பெயர் பெற்றார்.
- திருமாலின் மார்பில் இருக்கும் மருவின் அவதாரமாக கருதப்படுகின்றார்.
- தீண்டத்தகாத குலத்தில் பிறந்தவர் என்று கருதப்படுகின்றார். காவிரியை கடந்து திருமாலை கண்குளிர காண முடியவில்லையே வருந்தி காவிரியின் கரையில் நின்றபடியே திருவரங்கத்தை நோக்கி தவமிருந்தவர்.

**11. தொண்டரடிப்பொடியாழ்வார்**

- இவருடைய இயற்பெயர் விப்பிர நாரயணன்

- ஸ்ரீரங்கநாதனுக்கு தினந்தோறும் மாலை அணிவிக்க கோயிலில் தோட்டம் அமைத்து மலர்ச்செடிகளை வளர்த்து வந்தவர். அங்கு பரத்தைப் பெண்ணுடன் காதல் ஏற்பட்டு சிறை செல்கின்றார்.
- பின்னர் திருமாலிடம் மன்னிப்பு கேட்டு, தொண்டர்களுக்கெல்லாம் நான் அடியவன் என்ற பொருளில் தொண்டரடிப்பொடியாழ்வார் என அழைக்கப்படுகின்றார்.

**12. திருமங்கையாழ்வார்**

- சோழ நாட்டின் திருக்குறையலூரில் கள்ளர் மரபில் நீலன் என்பவரின் மகனாகப் பிறந்தவராவார்.
- திருவாலி நாட்டின் மன்னனாகவும் சோழக்கு படைத்தலைவனாகவும் பணிபுரிந்துள்ளார்.
- இவருடைய இயற்பெயர் கலியன்
- குமுதவல்லி என்ற வைணவ பெண்ணை திருமணம் முடிக்கின்றார். மனைவியின் விருப்பப்படி 1008 அடியார்களுக்கு உணவு அளிக்கின்றார். சோழ மன்னனுக்கு வரி செலுத்த முடியாமல் வருந்துகின்றார். உணவு அளிக்க வழிப்பறி கொள்ளை தொழிலில் ஈடுபடுகின்றார். ஒருநாள் திருமால் தனது தேவியுடன் மணமக்கள் கோலத்தில் வந்து இவரை ஆட்கொள்கின்றார்.

**14. சைவ இலக்கியங்கள் பற்றி விளக்கி எழுதுக. (அல்லது)**

**15. நாயன்மார்கள் எவ்வாறு தமிழ் மற்றும் பக்தியை வளர்த்தார்கள் என்பதை விளக்குக.**

- தமிழகத்தில் கி.பி.5 மற்றும் கி.பி.6 ஆம் நூற்றாண்டில் சைவ சமயம் வளர்ச்சிக்கு அறுபத்துமூன்று நாயன்மார்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.
- நாயன்மார்கள் என்றால் தலைவன் என்று பொருள்.
- குலோத்துங்க மன்னனின் காலத்தில்தான் சேக்கிழார் பெரியபுராணத்தை இயற்றுகின்றார். அதில் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகள், பாடடிய பதிகங்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**1. திருமுறைகள்**

- திருமுறைகள் என்பது பன்னிரு திருமுறைகளை கொண்டதாகும்.
- முதல் மூன்று திருமுறைகளை கொண்ட தேவாரத்தைப் பாடியவர் திருஞானசம்பந்தர் ஆவார்.
- இவர் குழந்தைப் பருவத்திலேயே பார்வதிதேவியிடம் ஞானப்பால் அருந்தி தோடுடைய செவியன் என்ற தேவாரப் பாடலை பாடியவர் ஆவார்.
- நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளை கொண்ட தேவாரத்தைப் பாடியவர் திருநாவுக்கரசர். இவரை அப்பர் என்று திருஞானசம்பந்தர் அழைக்கின்றார்.
- திருநாவுக்கரசர்க்கு சூலை நோய் ஏற்பட்டு அவதிப்படுகிறார். தனது சகோதரி திலகவதி சிவனை வழிபட்டதால் அந்நோய் குணமாகின்றது. பின்னர் சிவனே திருநாவுக்கரசரை அழைத்து தேவாரம் பாடச் சொன்னதாக புராணங்கள் கூறுகின்றது.
- இவரது பாடலைக் கேட்டு வேதாரண்யத்தில் பூட்டியிருந்த கோயிலின் கதவு திறந்ததாக அவ்வூரின் தலபுராணங்கள் கூறுகின்றன.
- அறுபத்து நாயன்மார்களில் புகழ்பெற்றவர் சுந்தரர். இவர் இயற்றிய திருத்தொண்டர் புராணம் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை அறிய உதவும் கருவூலமாகத் திகழ்கின்றது.
- சுந்தரின் திருமணத்திற்கு சிவபெருமானே தூது சென்றார் என்றும் இவர் தம்பிரான் தோழன் என்றும் அழைக்கப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. திருவாசகம், திருக்கோவையார் ஆகியனவற்றை பாடியவர் மாணிக்கவாசகர் ஆவார்.

**16. சிற்றிலக்கியம் குறித்து விவரித்து எழுதுக.**

- தமிழிலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலத்தில்தான் அதிகளவில் சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன.
- தமிழில் தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்கள் உள்ளன.
- சிற்றிலக்கியத்திற்கு இலக்கணம் கூறும் நூல் பன்னிருபாட்டியல்.

- சிற்றிலக்கியங்கள் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பொருள்கள் நான்கினுள் ஒன்றை பற்றியோ அல்லது சிலவற்றை பற்றியோ பாடுவது சிற்றிலக்கியம் ஆகும்.
- பள்ளு, குறவஞ்சி, உலா போன்ற சிறுசிறு இலக்கியங்கள் தோன்றிய வகையே பிரபந்தங்கள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன.
- படிப்பதற்கு எளிமையாக இருத்தல்.
- இறைவனையே, மன்னனையோ, வள்ளலையோ, குருவையோ எடுத்துக்கொண்டு அவர்களின் சிறப்புகளை எடுத்துரைப்பதாகும்.
- மக்களின் செல்வாக்கு பெற்ற சிற்றிலக்கியங்கள்: கலம்பகம், தூது, உலா, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, பள்ளு, பரணி ஆகியனவாகும்.

**1. கலம்பகம்:**

- கலம் + பகம் = கலம்பகம், கலம் என்பது 12 உறுப்புகளை உடையது. பகம் என்பது 6 உறுப்புகளை உடையது.
- அகப்பொருளும் புறப்பொருளும் கலந்து பாடப்படும் இலக்கியம் கலம்பகமாகும்.
- பல பூக்களைக் கலந்து மாலையாகத் தொடுப்பது போல பல வகையான செய்யுள் உறுப்புகளையும் கலந்து பாடப்படுவது கலம்பகமாகும். தமிழில் தோன்றிய முதல் கலம்பக நூல் நந்திக்கலம்பகம்

**2. தூது**

- தனது கருத்தைப் பிறிதொருவருக்குத் தெரிவிக்குமாறு இடையில் ஒருவரை அனுப்புவதே தூது.
- தூது இரண்டு வகைப்படும்: 1. அகத்தூது 2. புறத்தூது

**3. உலா**

- ஆண்மகனைப் பாட்டுடைத் தலைவானாகக் கொண்டு அவனது குலம், குடிப்பிறப்பு, பெருமை ஆகியனவற்றை விளக்கிக் கூறுவது உலா எனப்படும்.
S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE
- தலைவன் உலா வரும்பொழுது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் உள்ளிட்ட ஏழு பருவத்துப் பெண்கள் அவன் மீது காதல் கொள்வதும் உலா இலக்கியமாகும். எடுத்துக்காட்டு: திருக்கையிலாய ஞான உலா, மூவருலா.

**5. பிள்ளைத்தமிழ்**

- புலவர்கள் தான் விரும்பிய மன்னனையோ, தலைவனையோ, வள்ளலையோ குழந்தையாகப் பாவித்துப் பாடப்படுவது பிள்ளைத்தமிழ் எனப்படும்
- பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி என்றும் அழைக்கப்படுகின்றது.
- குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் 12ஆம் மாதம் வரை ஒவ்வொரு வயதுக்கும் பத்துப்பாடல்கள் வீதம் பத்துப் பருவங்கள் வகுத்துக்கொண்டு பாடப்படுவதாகும்.
- இது இரண்டு வகைப்படும் 1. ஆண்பால் பிள்ளைத்தமிழ் 2. பெண்பால் பிள்ளைத்தமிழ்.
- ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய 12 பருவங்கள்: காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில் சிதைத்தல், சிறுபறை கொட்டல், சிறுதேர் உருட்டல் என்பனவாகும்.
- பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய 10 பருவங்கள்: காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, நீராடல், அம்மானை, ஊசல் முதலியனவாகும்.
- எடுத்துக்காட்டு நூல்: முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்.

**6. பள்ளு**

- பள்ளர்களின் வாழ்க்கையை பாடுவது பள்ளு இலக்கியமாகும்.

- பள்ளன் ஒருவன் இரு மனைவிகளை மணந்து கொண்டு அவ்விரு மனைவிகளிடையே ஏற்படும் சண்டைகள், அதனால் கணவனுக்கு ஏற்படும் துன்பம் குறித்து விளக்குவதாகும். எடுத்துக்காட்டு நூல்: முக்கூடற்பள்ளு.

**7. குறவஞ்சி**

- அரசனையோ, தெய்வத்தையோ தலைவனாகக் கொண்டு பாடப்படுவது குறவஞ்சியாகும்.
- தலைவன் உலா வருதல், தலைவி காதல் கொள்ளும் விதம், குறித்தி குறி கூறுதல், தலைவி குறத்திக்கு பரிசளித்தல், குறவன் குறத்தியைத் தேடி வருதல், குறத்தி அணிந்திருக்கும் அணிகலன்களை பார்த்து குறவன் ஐயப்படுதல், குறத்தி குறவனின் ஐயத்தை தீர்த்தல் ஆகியனவற்றை கொண்டு அமைவது குறிவஞ்சியாகும். எடுத்துக்காட்டு நூல்: குற்றாலக் குறவஞ்சி.

**8. பரணி**

- போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி பெற்ற வீரனைச் சிறப்பித்துப் பாடப்படுவதே பரணியாகும். எடுத்துக்காட்டு நூல்: கலிங்கத்துப்பரணி

**17. தமிழில் நவீன இலக்கியங்கள் பற்றி விளக்குக.**

- அச்சு தொழிற்நுட்பங்கள், உரைநடை நூல்களின் வருகைக்கு பின்பு தோன்றிய இலக்கியம் நவீன இலக்கியம் (Modern Literature) எனப்படுகிறது.
- குறிப்பாக, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியது நவீன இலக்கியமாகும்.
- நவீன இலக்கியங்கள் தமிழ்நாட்டில் அரசியல், மதம், கல்வி போன்றனவற்றில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தின.
- ஆங்கிலேய ஆட்சி, மேலைநாட்டு கலாச்சாரத்தின் பாதிப்பு, ஆங்கில மொழி செல்வாக்கால் தமிழ்மொழி பயன்பாடு குறையத் தொடங்கின. இந்நிலையில், அச்சு இயந்திரங்களின் வருகை, நிலையான ஆங்கிலேய ஆட்சி, இந்திய நாடு சுதந்திரம் பெறுதல், அனைவருக்குமான கல்விமுறைகள், நவீன சிந்தனைகள் போன்றவைகளால் தமிழ்மொழியும் இலக்கியமும் வளர்ச்சி அடைந்தன.
- உரைநடையில் எழுதும் முறை 19ஆம் நூற்றாண்டில் அறிமுகமானது குறிப்பிடத்தக்கதாகும்.
- பண்டிதர்கள் மட்டுமே படிப்பதாக இருந்த மணிப்பிரவாள நடையை மாற்றி, அனைவரும் எழுதவும் படிக்கவும் தோன்றியதே புதுக்கவிதையாகும்.
- ஓலைச்சுவடிகளில் மட்டுமே இருந்த இலக்கியங்களை அச்சு இயந்திரங்களின் வருகைக்கு பின்னர், உ.வே.சாமிநாதர், ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை போன்றோரின் கடின உழைப்பால் அச்சு நூல்களாக வெளிவந்தன.
- நவீன இலக்கியமும் நவீன தொழிற்நுட்பமும் விளைவாக சமூகம் பயனடைய கிடைத்தவைகள்:
    1. பெருந்தொழில் உற்பத்தி முறை (நவீன தொழிற்சாலைகள்)
    2. நவீனப் போக்குவரத்து (சொகுசு கார்கள், பேருந்துகள், விமானம், கப்பல்கள்)
    3. நவீனச் செய்தித்தொடர்பு (முகநூல், வாட்ஸ்அப், டிவிட்டர்)
    4. அச்சுத்தொழில்நுட்பம் (பிரிண்டர்ஸ், காகிதம், நகல் எடுக்கும் முறைகள்)

| பழைய இலக்கியத்தின் பயன்கள் | நவீன இலக்கியத்தின் பயன்கள் |
|---|---|
| 1. மாணவர்களையும் அறிஞர்களையும் குறித்து பேசுகிறது. | 1. பொது வாசகர்களை குறித்து நேரடியாகப் பேசுகிறது. |
| 2. ஆசிரியர் - மாணவர் மரபுசார்ந்த கல்வி அமைப்பு வழி கற்பிக்கப்பட்டது. ஆசிரியர்கள் | 2. மாணவர்கள் நேரடியாக அச்சு வடிவில் நூல்களை கொண்டு கற்கின்றனர். நூல்கள் மாணவர்களை |

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

| | |
|---|---|
| ஓலைச்சுவடிகளை கொண்டு கற்பித்து வந்தனர். மாணவர்கள் நூல்களை தேடிச்சென்றனர் | தேடி வருகின்றது. |
| 3. மன்னராட்சி, நிலவுடைமைச் சமூமாக இருந்தது. அறத்தை வலியுறுத்தின. | 3. ஜனநாயகத்தை உருவாக்கி, மக்களின் கருத்துரிமையை நிலைநாட்டியது தமிழில் நவீன இலக்கியத்தின் உருவாக்கம் |

**தமிழில் நவீன இலக்கியத்தின் உருவாக்கம்**

- ஆங்கிலேயர்கள் உருவாக்கித் தந்த பொதுக்கல்வி முறை அனைவரையும் கல்விக்கற்க செய்தது.
- ஆங்கில கல்வி வழி ஐரோப்பிய இலக்கியங்களை வாசிப்பவர்கள் உருவாகினர்.
- ஜனநாயகத்தில் அனைவரும் எழுதலாம் என்ற நிலை உருவாகியது.
- நவீன இலக்கியம் உருவாக காரணமாக இருந்த மூன்று இயக்கங்கள்:

**1. மீட்பியக்கம்**

அச்சு இயந்திர வருகைக்குப் பின்னர், ஓலைச்சுவடிகளில் இருந்த இலக்கண, இலக்கியங்கள் உரைநடை வடிவில் கொண்டுவர முயற்சித்த இயக்கங்களே மீட்பியக்கம் எனப்படும்.

**2. இதழியல்**

- தமிழ்நாட்டில் தோன்றிய முதல் இதழ் ஆங்கில இதழாகும்.
- அதனை தொடர்ந்து தமிழ்ச் செய்தித்தாள்கள் உருவாகின.
- செய்திகள் மொழிபெயர்க்கப்பட்டு கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டன.
- 1831 இல் தமிழில் கிறிஸ்வ அச்சு இதழ்கள் வெளிவந்தன.
- 1841 இல் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த உதயதாரகை முதல் பொதுச்செய்தி இதழாகும்.

S.MARTIN RAJA, AP TAMIL, IGCE

**3. புனைவெழுத்து**

- மீட்பியக்கம் மற்றும் இதழியலிலிருந்து உருவானது புனைவெழுத்துகள் எனப்படுகிறது.
- தொடக்க கால புனைவெழுத்துகள் மரபிலக்கியத்தைப் பின்பற்றியே உரைநடையில் எழுத்தப்பட்டன. கதைகள் எழுதுவது புனைவுக்கு உயிர்நாடியாக விளங்கியது.
- புனைகதைகளுக்கு ஆதாரமாக இருந்தது நாட்டார்க்கதைகள், மரபிலக்கியக் கதைகள்.
- ஐரோப்பிய புனைவு இலக்கியங்களை முன்னோடியாகக் கொண்டு புனைகதைகள் வெளிவந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**18. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சிக்கு பாரதியார் ஆற்றிய தொண்டினை விளக்குக.**

**1.பாரதியின் தமிழ்த் தொண்டு**

- மகாகவி பாரதியார், மீசைக்கவிஞன், முண்டாசுக்கவிஞன் என்றழைக்கப்படுகிறார்.
- இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வழிகாட்டியர் பாரதியார். இவர் கல்வி, அரசியல், அறிவியல், பொருளாதாரம், சீர்த்திருத்தம், சமூகவியல் போன்ற துறைகளிலும் உரைநடை செல்வாக்கு பெறச்செய்தார்.
- பாரதி எளிய உரைநடையில் படிப்பவர்களின் உள்ளத்தைக் கவரும் வகையில் எழுதினார்.
- சீர்த்திருத்த உணர்வையும் நாட்டுப்பற்றையும் வளர்க்க உணர்ச்சியூட்டும் நடையைக் கையாண்டார். அறிவை விரிவு செய்ய தர்க்க சார்ந்த நடையை பயன்படுத்தினார்.
- கட்டுரைகளில் இலக்கிய அங்காரத்தை அளித்தார்.
- கற்பனைக் கதைகளில் தத்துவக் கருத்துகளை உட்பொருளாக வைத்து எழுதினார்.
- கடினமான கருத்துகளைக்கூட எளிய நடையில் விளக்க முடியும் என்பதை வலியுறுத்தினார்.
- கவிதைகள் வாயிலாக மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டினார்.

- தாய்மொழி மீது பற்று கொண்ட பாரதி, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்கிறார்.
- சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலும் பாரதி தனிப் புலமைப்பெற்று விளங்கினார். 1912 இல் கீதையை தமிழில் மொழிபெயர்த்தார்.
- கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திச்சூடி போன்ற புகழ்பெற்ற கவியங்களையும் பாரதி எழுதியுள்ளார்.
- பாரதி பத்திரிக்கையாரும் ஆவார். அவர் இந்தியா என்ற பத்திரிக்கையின் மூலம் மக்களிடையே விடுதலை உணர்வை தூண்டும் வகையில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.
- ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் அடைவதற்கு முன்பே பாரதி, 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்' என்று தன்னுடைய சுதந்திர தாகத்தை பாட்டின் மூலம் வெளிப்படுத்தினார்.

**19. பாரதிதாசனின் தமிழ்த்தொண்டை விளக்குக.**

**1. பாரதிதாசனின் தமிழ்த் தொண்டு**

- புரட்சிக்கவிஞர், பாவேந்தர் என்று அழைக்கப்படுபவர் பாரதிதாசன்.
- தமிழ் இலக்கியம், இலக்கணங்கள், சைவ சித்தாந்த வேதங்களை முறையாக கற்றவர்.
- தமிழாசிரியர், கவிஞர், அரசியல்வாதி, திரைக்கதை ஆசிரியர், எழுத்தாளர் என பலதுறைகளுக்கு தமிழ்மொழியின் இனிமையை மக்களுக்கு எடுத்துச்சென்றவர்.
- தனது படைப்புகளுக்கு சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.
- பதினாறு வயதில் புதுவையிலுள்ள கல்வே கல்லூரியில் சேர்ந்து மூன்றாண்டுகளில் இளங்கலை பட்டத்தை இரண்டு வருடத்திலேயே முதல் தேர்ச்சிப்பெற்றார்.
- 1919 இல் காரைக்காலில் உள்ள அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராகப் பதவியேற்றார்.
- தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக தனது குருவாக சுப்ரமணிய பாரதியாரைக் கருதினார்.
- பாரதியாரை சந்தித்தப் பின்பே தனது இயற்பெயரான கனகசுப்புரத்தினம் என்பதை பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார்.
- சுதந்திர போராட்டம், திராவிட இயக்க தலைவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். தந்தை பெரியார் போன்ற அரசியல் தலைவர்களுடன் இணைந்து பல போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றுள்ளார்.
- திரைப்படங்களுக்கு கதைகளும் கதை வசனங்களும் எழுதியுள்ளார்.
- அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர் போன்றோர்கள் பாரதிதாசனின் படைப்புகளை பாராட்டி ஊக்கப்படுத்தியுள்ளனர்.
- 1954 ஆம் ஆண்டில் புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பாரதிதாசனின் படைப்புகள்: பாண்டின் பரிசு, எதிர்பாராத முத்தம், குறிஞ்சித் திரட்டு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, தமிழ் இயக்கம், இசையமுது, குயில், தமிழச்சியின் கத்தி, பாண்டியன் பரிசு, பாரதிதாசன் ஆத்திச்சூடி, பெண்கள் விடுதலை, பிசிராந்தையர், மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது, முல்லைக்காடு, கலை மன்றம், விடுதலை வேட்கை போன்றவைகளாகும்.
- தந்தை பெரியார் பாரதிதாசனுக்கு அளித்த பட்டம், 'புரட்சிக்கவிஞர்'
- அறிஞர் அண்ணா பாரதிதாசனுக்கு அளித்த பட்டம், 'புரட்சிக்கவி'
- பாரதிதாசனின் நினைவாக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ஒரு தமிழ்க் கவிஞருக்கு 'பாரதிதாசன் விருதினை' வழங்கி வருகின்றது.

- 'பாரதிதாசன் பல்கலைக்கழகம்' என்ற பெயரில் ஒரு மாநில பல்கலைக்கழத்தையும் திருச்சிராப்பள்ளியில் நிறுவியுள்ளது.

## அலகு - 2

## நடுகல் முதல் நவீன சிற்பங்கள் வரை

**20. நடுகற்கள் குறித்து விவரித்து எழுதுக.**

**1. நடுகல்**

- இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படுவது நடுகல் எனப்படும். இதனை வீரக்கற்கள் என்றும் கூறுவர்.
- நடுகல் எடுக்கும் வழக்கமென்பது கற்கால மனிதனிலிருந்தே தொடங்கின்றது.
- இந்தியாவிலும் நடுகல் எடுக்கும் வழக்கம் வேறுபாடுகள் எதுவுமின்றி நெடுங்காலமாகவே நடுகற்கள் எடுக்கப்பட்டு வந்துள்ளன.
- இறந்தவர்களுக்கும் வைக்கப்படும் நடுகற்களை விட போர்க்களத்தில் வீரமணமடைந்த வீரனுக்கு வைப்பதே பெருமைக்குரியதாக போற்றப்படுகிறது.
- வீரனுக்கு எடுக்கப்படும் நடுகற்களை மக்கள் வணங்கி வந்துள்ளதை இலக்கியங்கள் சான்று காட்டுகின்றன.

**2. இந்திய அளவில் கிடைத்துள்ள நடுகற்கள்**

- இந்தியாவின் வடக்கே இமாச்சலப்பிரதேசம், குஜராத், மகாரா~;டிரம் போன்ற பகுதிகளிலும் தெற்கில் ஆந்திரா, கேரளா, கர்நாடகம், தமிழ்நாடு போன்ற பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- கர்நாடகத்தில் 397 நடுகற்கள், தமிழ்நாட்டில் 202 நடுகற்கள், ஆந்திராவில் 126 நடுகற்கள், கேரளாவில் 1 நடுகல்லும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**3. தமிழ்நாட்டு அளவில் கிடைத்துள்ள நடுகற்கள்**

- தமிழ்நாட்டில் பழங்காலம் முதலே நடுகற்கள் வைக்கும் பழக்கம் இருந்துள்ளதை தொல்லியல் ஆய்வுகள் நிரூபிக்கின்றன.
- சங்க இலக்கியங்கள் மட்டுமின்றி பிற இலக்கியங்களிலும் நடுகற்கள் பற்றிய குறிப்பு காணப்படுகின்றன.
- கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட செங்கம், தேன்கணிக்கோட்டை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் அதிகளவில் நடுகற்கள் காணப்படுகின்றன.
- அதியமான், சேர, சோழ, பாண்டியர் போன்ற மன்னர்கள் காலத்தில்தான் நடுகற்கள் அதிகளவில் எடுக்கப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் வீரனுக்கு நடுகல் எடுப்பது மட்டுமின்றி போர்ச் சேவலுக்கும் சேவல் பொறித்த நடுகல் அமைக்கப்பட்டுள்ளது.

**4. பாறை ஓவியங்கள்**

- ஆதிகால மனிதன் பாறைகளில் செதுக்கிய ஓவியங்கள் அல்லது வரையப்பட்ட வரி-வடிவ ஓவியங்களே பாறை ஓவியங்கள் அல்லது செதுக்கல் ஓவியங்கள் எனப்படும்.
- ஆதிமனிதன் பயன்படுத்திய பொருள்கள், வாழ்விட பாறைகள், குகைகள் போன்றவற்றை ஓவியங்களின் வழி அறியமுடிகின்றது.
- பிரான்சு, ஸ்பெயின், இத்தாலி, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பாறை ஓவியங்கள் கிடைத்துள்ளன.

- உலகின் முதல் பாறை ஓவியங்கள் ஸ்பெயின் நாட்டின் அல்டமிரா என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் பாறை ஓவியங்கள் கிடைத்த இடம் - பீம்பேட்கா
- தமிழ்நாட்டில் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டது - மல்லபாடி இத்தகைய பாறை ஓவியங்களின் வழி பழங்கால மக்கள் ஓவியங்களின் மூலம் தங்களுக்கிடையே கருத்துகளை பரிமாறிக்கொண்டனர் என்பதை அறியமுடிகிறது.

**5. வரலாற்றுக்கு முந்தைய காலம்**

- உலகின் தொன்மையான மனிதனின் எச்சங்கள் கிடைத்தது ஆப்பிரிக்கா என்றும் இந்தியாவில் சோன் பள்ளத்தாக்கு, பீக்கிங், ஜாவா ஆகிய பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**6. ஓவியங்கள்**

- குகைகளில் வாழ்ந்த மனிதன் பாறை ஓவியங்களை வரைந்துள்ளான். குகைகள் இருட்டாக இருந்ததால் அதிகளவில் பாறை ஓவியங்களை வரைந்துள்ளனர். இதுவே குகை ஓவியங்கள் என்றும் பாறை ஓவியங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.
- உணவு தேவைக்காக பாறைகளில் விலங்குகளை வேட்டையாடும் ஓவியங்களை வரைந்தால் அப்பகுதிகளில் வேட்டைக்குரிய விலங்குகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதாகும்.

**7. வகைகள்**

- பாறை ஓவியங்கள் மனித இனத்தின் வாழ்க்கையை பிரதிபலிக்கின்றன.
- அவர்களது நம்பிக்கைகள், மனநிலைகள் முதலியவற்றை எடுத்துக்காட்டுகின்றன.
- ஓவியங்களின் உருவங்களை மூன்றாகப் பிரிக்கலாம்

1. **முதல் நிலை:** தொன்மையான ஓவியங்கள், இவற்றில் விலங்குகளின் வடிவங்கள் அதிகமாக காணப்படுகின்றன. தமிழகத்தில் விலங்குகளின் வடிவ ஓவிங்கள் குறைவாகவே காணப்படுகின்றன.
2. **இரண்டாம் நிலை:** ஓவியங்கள், வேட்டைக் காட்சிகளாகும். இந்திய பாறை ஓவியங்களில் மான், ஆடு, பன்றி, மாடு முதலிய வேட்டைக்குரிய விலங்குகளே அதிகம் காணப்படுகின்றன. காண்டாமிருகம், சிங்கம், புலி போன்ற விலங்குகளின் ஓவியங்கள் இல்லை.
3. **மூன்றாம் நிலை:** ஓவியங்கள் மனித வடிவ ஓவிங்களாகும். போர்க்காட்சிகள், வேட்டைக்காட்சிகள், சடங்கு, நடன நிகழ்ச்சி குறித்த ஓவிங்கள் இடம்பெற்றிருக்கும்.

S MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**8. ஓவியத்திற்கு பயன்படுத்திய வண்ணங்கள்:** கோடுகள், அடர்த்தியான வண்ணப் பூச்சு, செந்நிறம் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. வெள்ளை, கருப்பு ஆகிய வண்ணங்கள் இடம்பெற்றிருக்கும்.

**9. ஓவிங்களை வைத்து காலத்தை கணித்தல்:**

- பாறைகளில் பயன்படுத்தப்பட்டிருந்த வண்ண கலவையை இரசாய சோதனை செய்து காலத்தைக் கணித்தனர்.
- ஓவியங்கள் வரைந்த முறையினை வைத்து காலத்தை கணித்தனர்.
- அடத்தியான வண்ணப்பூச்சு முறையின் வளர்ச்சி நிலையே கோட்டோவியம் எனப்படும். இது பிற்காலத்தை சேர்ந்த ஓவியமாகும்.

**10. ஓவியங்களின் வடிவ அமைப்பு**

- ஓவியங்களின் வடிவ அமைப்பு மூன்று வகைப்படும், அவை, 1. பக்கவாட்டு முறை 2. நேர் வடிவ முறை 3. திரும்பிக் காணும் முறை

  **1. பக்கவாட்டு முறை:** ஓவியத்தில் முகம் மற்றும் உடல் மட்டும் ஒருபக்கம் தெரியும்படி வரைவதாகும்.

  **2. நேர் வடிவ முறை:** ஓவியம் நம்மை நேராகப் பார்ப்பது போல அமைந்திருக்கும்.

  **3. திரும்பிக் காணும் முறை:** உடலைப் பக்கவாட்டு முறையில் அமைத்து முகத்தை மட்டும் திருப்பிக் கொண்டிருப்பது போல் அமைந்திருப்பதைத் திரும்பிக் காணும் முறை என்பர்.

**21. ஐம்பொன்சிலைகள் குறித்து விளக்குக.**

**ஐம்பொன் சிலைகள்**

சில்ப சாஸ்திரம், மானசாரா, அபிலாசித்தார்த்தா சிந்தாமணி ஆகியநூல்களில் பஞ்சலோகம் பற்றியும் சிலை செய்யும் விதிமுறைகளும் கூறப்பட்டுள்ளன. செம்பு, வெள்ளி, தங்கம், துத்தம், ஈயம் (copper, silver, gold, zinc and lead) ஆகிய ஐந்து உலோகங்கள் மிக உயர்ந்தவை என்றும், இவை ஐந்தும் கலந்தது ஐம்பொன்சிலை அல்லதுபஞ்சலோகம் என்றும் இந்நூல்கள் கூறுகின்றன.

**1. சிலைசெய்யும்முறை**

முதலில் எந்த சிலையைச் செய்ய நினைக்கிறார்களோ அந்த சிலையைப் போல மெழுகில் கரு உருவாக்கப்படும். இதற்கென தனியாக மெழுகு உள்ளது. இந்த மெழுகு ஒருவகை மரத்தில் உருகி வழியும் மெழுகாகும். இதை பாலக்காட்டு மெழுகு என்பர்.

இந்த மெழுகில் சம அளவுக்குக் குங்கிலியம் கலந்து உருக்கி வைத்துக்கொண்டு, தேவையான அளவுக்கு மெழுகில் ஒரு சிலை
உருவாக்கப்படும். காவிரிக் கரையோரம் படிந்து கிடக்கும் வண்டல் மண்ணை அள்ளிவந்து, அந்த மெழுகுச் சிலையின் மேல் பூசி வார்ப்பு செய்கிறார்கள். வைக்கப்படுகிறது. வார்ப்பின் கீழ்ப்பகுதியில் ஒரு சிறிய துளை

S.MARTIN RAJA, AP, TAMIL, JCCE

மண் காய்ந்த பிறகு அதை அடுப்பில் வைத்து சூடாக்கி மெழுகை வெளியேற்றிவிடுவர். இந்த உள்ளீடற்ற வார்ப்பில் நன்கு உருக்கப்பட்ட ஐம்பொன்னை வார்ப்பில் உள்ள துளை வழியாக ஊற்றி, ஒருநாள் கழித்து மண்ணைத் தட்டி உடைத்து, உள்ளே உள்ள உலோகச் சிலையை எடுக்கின்றனர்.

பிசிறுகளோடு உள இந்தச்சிலையை அதை அரம் கொண்டு தேய்த்து, சீவிளி கொண்டு சீவி, பின் நகாசு வேலை செய்கின்றனர். எல்லாம் முடிந்த பின்னர் சிலைக்குக் கண் திறக்கப்படுகிறது.

தொழில் சார்ந்த கலைகள் கைவினைக் கலைகள் ஆகும். பெரும்பாலும் இவை கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாடப் பிழைப்புக்காக தங்களுக்கு அருகில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு பயன்பாட்டுப் பொருள்களைத் தயாரிப்பது ஆகும்.

**22. பழங்குடியினரின் கைவினை பொருட்களை கூறி விளக்குக.**

**பழங்குடியினர் கைவினைக் கலைகள்**

மண்பாண்டங்கள் செய்தல், மூங்கில் கூடைகள் வனைதல்,பாய் முடைதல், பட்டு நெசவு செய்தல், பிரம்பு பின்னுதல், மண் பொம்மைகள் தயாரித்தல் மற்றும் பரதநாட்டிய நடன கலைஞர்கள் அணியும் கோவில் நகைத்தொழில் போன்றவை கிராமப்புறக் கைவினைக் கலைகள் ஆகும்.

**1. மட்பாண்டங்கள் தயாரித்தல்**

கிராமப்புறங்களில் வேளார் என்று அழைக்கப்படும் குயவர்களால் களிமண் கொண்டு திருவை மூலம் விதம் விதமான பாண்டங்கள் செய்யப்படுகின்றன.

தற்காலத்தில் மண்பானையில் தண்ணீர் சேகரித்துக் குடித்தால் உடலுக்குக் குளிர்ச்சி என்ற கருத்து மக்களிடையே பரவி இருப்பதால் மண்பானையில் திருகு குழாய் வைத்து செய்யப்பட்ட மண்பானைகள் சாலையோரங்களில் விற்பனைக்கு வைக்கப் படுகின்றன.

**2. மூங்கில் கூடைகள்**

உள்ளூரிலேயே கிடைக்கும் மூங்கில்களைக் கொண்டு வனையப்படும் கூடைகளைக் குறவர் இன மக்கள் அன்றாடம் விற்பனை செய்வதைக் காணலாம். பொருட்களைச் சேகரம் செய்து வைக்கவும், பழக்கூடை, பூஜைக்கூடை, விளையாடடுப் பொருட்கள் எனப் பல்வேறு வடிவங்களில் மூங்கில் தயாரிப்பு பிரசித்து பெற்று விளங்குகிறது. நெகிழி எனப்படும் பிளாஸ்டிக் பைகளுக்குப் பதில் மூங்கில் கூடைகளைப் பயன்படுத்துவது சிறப்பு.

**3. பாய் முடைதல்**

கோரைப்பாய்-இதன் தனிச்சிறப்பு கோடைக்காலத்தில் குளிர்ச்சியையும்,மழைக்காலத்தில் வெப்பத்தையும் தர வல்லது. இது
ஆற்றோரங்களில் கிடைக்கும் தரமான கோரைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. புல் வகையைச் சேர்ந்த கோரைப் பாயில் ஒற்றைப் பல் பாய், இரட்டைப் பல் பாய், பட்டுப் பாய் (திருமணப் பாய்). தடுக்குப் பாய், பந்திப் பாய் எனப் பல்வேறு அமைப்பில் பாய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. திருமணக் காலமான தை, மாசி, பங்குனி, வைகாசி போன்ற மாதங்களில் திருமணப் பாய்கள் அதிகமாக விற்பனையாகின்றன. தைப்பொங்கல் விழாவின் போது புதிய பாய்கள் வாங்கும் வழக்கம் நாட்டுப்புற மக்களிடம் காணப்படுகிறது.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

தமிழ்நாட்டில் பத்தமடை மற்றும் வந்தவாசி பாய் சிறப்பு வாய்ந்தது. பல்வேறு வண்ணங்களில் எழுத்துக்கள், படங்கள் இடம்பெற்ற பாய்களம் விற்பனைக்கு வருகின்றன.

**4. பட்டு நெசவு**

திருமண நிகழ்வுகளில் இன்றியமையாத ஆடையாக விளங்குவது பட்டுத் துணி. தறி கொண்டு கையால் நெசவு செய்யப்படும் பட்டிற்கென தனி மதிப்பு உண்டு. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், திருபுவனம், ஆரணி ஆகிய ஊர்கள் பட்டு நெசவிற்கும் பெயர் பெற்றவை.

**5. பிரம்பு பின்னுதல்**

Calamus Rotang – என்ற தாவரவியல் பெயர் கொண்ட பிரம்பு கொடி வகையைச் சார்ந்தது. பிரம்பை பயன்படுத்தி தொட்டில்,மேசை, பழக்கூடை, நாற்காலி, விதவிதமான கூடைகள் போன்றவை செய்யப்படுகிறது.பிரம்பு குளிர்ச்சியுடையது. அதிக நாட்கள் நீடித்து உழைக்கக் கூடியது. சீர்காழி அருகே கொள்ளிடம் பகுதியில் மக்கள் சுற்றுலாப் பயணிகளை நம்பியே இப்பிரம்பு பொருட்களின் விற்பனையை செய்கின்றனர்.

**6. மண்பொம்மைகள் தயாரித்தல்**

களி மண்ணை அச்சுக்களில் பரப்பி செய்யப்படும் சிறுசிறு மண் பொம்மைகள் பல்வேறு வண்ணங்களில் மக்களால் செய்யப்படும் பொம்மைகள் வீடுகளில் அலங்காரப் பொருட்களாக பயன்படுகின்றன. கைவினைக் கலைகள் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இயந்திரங்களின் ஆதிக்கத்தால் நலிவடைந்து வருகின்றன. இருப்பினும் மக்கள் துயர் துடைக்க கைவினை கலைகளைக் காக்க வேண்டும்.

**7. கரிகிரி மட்பாண்டங்கள்**

வேலூரில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கரிகிரி என்னும் கிராமத்தில் சீனக் களிமண்ணில் செய்யப்படும் புகழ்பெற்ற கரிகிரி மண்பாண்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. சுமார் 400 வருடங்கள் முன்பு ஆற்காடு நவாப்களின் ஆதரவில், அவர்களுக்காக இந்த மட்பாண்டங்கள் தயார் செய்யப்பட்டன. சில குடும்பங்கள் மட்டும் ஈடுபட்ட இந்த தொழில் தற்பொழுது அழியும் தருவாயில் உள்ளது. நீர்க் குவளையின் உள்ளே ஊற்றப்படும் நீர் திரும்ப மேல் வழியாக வருவதில்லை; அதன் நீர் ஊற்றும் துவாரத்தின் வழி மட்டுமே வரும். ஆற்காடு நவாப்களின் உணவுப் பாதுகாப்புக் காரணங்களுக்காக இதைப் போன்ற மண் பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. நீர்குவளைகள் தவிர மாய கிருஷ்ணன் மற்றும் சிவ லிங்கம் போன்ற மண் பாண்டங்கள் செய்யப்பட்டுள்ளன. கிருஷ்ணர் அல்லது சிவலிங்க உருவம் பொறிக்கப்பட்ட மேல் பாகத்தில் ஊற்றப்படும் நீரானது ஒரு குறிப்பிட்ட உயரத்தை அடையும் வரை கீழ் வழி வருவதில்லை என்பதே இதன் சிறப்பு.

**8. பச்சைக் குத்துதல்**

உடலில் பச்சை வண்ணத்தில் ஊசி கொண்டு குத்திப் பல்வேறு வடிவங்களை வரைந்து அழகுபடுத்திக் கொள்வது பச்சை குத்துதல் எனப்படும்.

மார்பு, மேல் கை, முன்னங் கை, கால் போன்ற உடற் பகுதிகளில் பச்சை குத்தப் படுகிறது. குறவர் என்ற இனத்தைச் சேர்ந்தோர் பச்சை குத்தும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மஞ்சள் பொடியுடன் அகத்திக் கீரை சேர்த்து அரைக்கின்றனர். அதனை ஒரு துணியில் கட்டி, தீயிலிட்டு எரித்துக் கரியாக்கிக் கொள்கின்றனர். நீர் கலந்து அதனைப் பசையாக்குகின்றனர்.

கூர்மையான ஊசியினால் அந்தப் பசையைத் தொட்டுத் தோலில் குத்திக் குத்தி எடுத்துத் தேவையான உருவங்களை வரைகின்றனர். பச்சை குத்தப்பட்ட பின் சுடுநீரால் கழுவி அதனைச் சுத்தம் செய்கின்றனர். இப்பொழுது பச்சை குத்திய இடம் அழகாகத் தோற்றம் அளிக்கும். இது எந்நிலையிலும் அழியாது. தெய்வ வடிவங்கள், கோலங்கள், தேள், பாம்பு போன்ற உருவங்கள். பெயர்கள் போன்றவை பச்சை குத்துதலில் இடம் பெறுகின்றன. குறிப்பாகப் பெண்கள் அழகிற்காகவும் அடையாளத்திற்காகவும் இக்கலையைப் பயன்படுத்தி வருகின்றனர். அரசியல் தலைவர்கள், சின்னங்கள், திரைப்பட நடிக, நடிகையர் படங்களைப் பச்சை குத்திக் கொள்ளும்பழக்கம் இன்றைய இளைஞர்களிடம் காணப்படுகிறது. தற்பொழுது மருதாணிப் பசை கொண்டு இத்தகைய உருவங்கள் அச்சினால் உடலில் வரையப் படுகின்றன. இதனால் பச்சை குத்துதல் கலை இன்று வழக்கொழிந்து வருகிறது. இக்கலை தமிழகத்தில் மட்டுமல்லாது ஆசியாவின் பிற பகுதிகளிலும் அமெரிக்கா, நியூசிலாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளிலும் பரவிக் காணப்படுகிறது. ஜப்பானியரின் அக்குபஞ்சர் மருத்துவ முறையானது பச்சை குத்துதல் கலையோடு தொடர்பு படுத்திக் காணத் தக்கதாகும்.

**23. சிற்பங்கள் பற்றி விளக்கி எழுதுக.**

**சுடுமண் சிற்பங்கள்**

தமிழகத்தில் உலோகச் சிற்பங்களுக்கு முன்பிருந்தே சுடுமண் சிற்பங்கள் செய்யப்பட்டு வந்துள்ளன. தமிழகத்தில் மட்டுமல்லாது பிற நாடுகளிலும் சிற்பங்கள் முதல் முதலாக மண்ணினால்தான் செய்யப்பட்டன. இந்தியாவில் சிந்து சமவெளியில் தோண்டி எடுக்கப்பட்ட புதைபொருள் சின்னங்களில் சுடுமண் சிற்பங்கள் கிடைத்துள்ளமை அவற்றின் பழைமையைத் தெளிவுறுத்துவதாக அமைகின்றது.

இன்றைய சுடுமண் சிற்பங்களில் கிராமத்து நடனம், பறையடித்தல், ஜல்லிக் கட்டு என எது சிற்பியின் மனத்தைக் கவர்கிறதோ அது சிற்பமாக உருவாகிறது.

மூக்கையாவின் சுடுமண் சிற்பங்களில் அலங்காரங்கள் அதிக அளவில் காணப்படுவதில்லை. உருவங்களில் அங்க இலக்கணங்கள் மீறப்பட்டிருக்கும். சான்றாக இவரது படைப்பான பறையறையும் மனிதனது சிற்பத்தை எடுத்துக் கொண்டால் அவனது முகம் வெறும் உட்குவிந்த தட்டுப் போன்று இருக்கிறது. கனமான, எடுப்பான மூக்கும், உதடுகளும் தவிரக் கண், காது, தலைமுடி போன்றவை தெளிவின்றியே படைக்கப்பட்டு உள்ளன. கண்கள் இருக்கும் இடத்தில், அமைக்கப்பட்டு உள்ள குழியின் நிழல் கண்கள் இருப்பது போன்ற உணர்வைப் பார்வையாளர்களுக்கு ஏற்படுத்துகிறது.

பறை கொட்டுபவனின் பறையைத் தாங்கியுள்ள விரல்கள்,உடம்பின் பிற உறுப்புகளை விடப் பெரியவையாகப் படைக்கப் பட்டிருக்கின்றன. இடையிலிருந்து மேற்பகுதியானது இடையிலிருந்து கீழ்ப்பகுதியை விடப் பெரிதாக இருக்கிறது.

ஜல்லிக் கட்டு எனும் சிற்பத்தில் காளை மாட்டின் வயிற்றுப் பகுதி பள்ளமாகக் குடைந்து எடுக்கப்பட்ட நிலையில் அமைக்கப்பட்டு உள்ளது.

சண்டையிடும் காளைக்குக் கனமான வயிறு தேவையில்லை என்பதால் தான் அதனை அவ்வாறு படைத்துக் காட்டியுள்ளார் மூக்கையா. எஸ். தனபாலின் ‘தலை’ (Head) என்னும் சுடுமண் சிற்பம் சிறப்புடையதாகும்.

## 24. நாட்டுப்புறத் தெய்வங்கள்

S. MARTIN RAJA, AP, TAMIL, IGCE

நாட்டுப்பறக் கெய்வங்கள் என்பவை நாட்டுப்பற மக்களான கிராமமக்கள் வழிபடுகின்ற தெய்வங்களாகும். இந்தக் தெய்வங்களை நாட்டார் தெய்வங்கள் என்றும், சிறு தெய்வங்கள் என்றும் கூறுகின்றனர். இந்த நாட்டுப்புறக் தெய்வங்களின் வமிபாடு பெருந்தெய்வங்களின் வமிபாடுகளைப் போல் அல்லாமல் மாறுபட்டுள்ளது. இதனை சிறுதெய்வ வழிபாடு என்கின்றனர்.

நாட்டுப்புறத் தெய்வங்கள் பெரும்பாலும் தெலுங்கு, தமிழ் மொழி பேசுகின்றவர்களால் வழிபடப்படுகின்றன.

### 1. வகைப்பாடு

நாட்டுப்புறத் தெய்வங்களை ஊர்த்தெய்வம்,குலத்தெய்வம், இனத்தெய்வம், மாலைத்தெய்வம், சமாதி தெய்வம் என ஐந்து வகையாக வகைப்படுத்துகின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்களை ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், கல்கள் என ரைட் ரெவரேண்ட் கென்றி வகைப்படுத்தியுள்ளார்.

### 2. தெய்வங்களின் தோற்றம்

நாட்டுப்புறத் தெய்வங்கள் தோன்றிய விதத்தினைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார் ஆறு. இராமநாதன். அவை வருமாறு, மனிதர்களின் அகால மரணத்திலிருந்து தோன்றுதல், வேள்விகளிலிருந்து தோன்றுதல், சிவபெருமான் – சக்தி உறவாலும், கேவர்கள் – அரக்கர்கள் கொடர்பாலும் கோன்றுகல் என மூன்று வகையான முறைகளில் நாட்டார் தெய்வங்கள் தோன்றுகின்றன.

இவற்றில் மனிகர்களின் அகால மாணக்கில் கோன்றும் நாட்டுப்பறக் தெய்வங்கள், தற்கொலையிலிருந்து தோன்றுதல், கொலையிலிருந்து தோன்றுதல் என இரு வழிகளிலும், வேள்விகளிலிருந்து

தோன்றும் நாட்டுப் புறத் தெய்வங்கள் சிவபெருமான் ஆணைப்படியும், மனிதர்கள் நடத்தும் வேள்வியிலிருந்தும் 67637 இரு முறைகளில் உருவாகின்றார்கள். பிறவழிகளான உடலுறவிலிருந்து தோன்றுதல் சிவபெருமான் – சக்தி
தம்பதிகளின் மூலமாகவோ, தேவர்- அசுரர்- முனிவர்களின் உடலுறவாலும் தோன்றுகின்றன.

**25. கன்னியாகுமரியில் நிறுவப்பட்டுள்ள திருவள்ளுவர்சிலை பற்றி எழுதுக.**

***குமரி முனையில் திருவள்ளுவர் சிலை***

திருவள்ளுவர் சிலை என்பது திருக்குறள் எழுதிய திருவள்ளுவருக்கு தமிழ்நாடு அரசு குமரிக் கடலில், கடல் நடுவே, நீர் மட்டத்திலிருந்து 30 அடி உயரமுள்ள பாறை மீது அமைத்த 133 அடி உயரச் சிலை ஆகும். இந்த சிலை அமைக்கும் பணி 1990, செப்டம்பர் 6 இல் தொடங்கப்பட்டு 2000, சனவரி 1 இல் திறக்கப்பட்டது.

விவேகானந்தர் நினைவு மண்டபம் நிறுவிய ஏக்நாத் ரானடே அதனருகே உள்ள பாறையில் திருவள்ளுவருக்கு சிலை வைக்கலாம் எனப் பரிந்துரைத்து முழுத் திட்டம், வரைபடம் மற்றும் மதிப்பீட்டை அப்போதைய முதல்வர் மு. கருணாநிதியிடம் கொடுத்தார்.

1975ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்கத் திட்டமும் அறிவிக்கப்பட்டது.1979ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி அப்போதைய ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி, பிரதமர் மொரார்ஜி தேசாய் தலைமையில் எம்.ஜி.ஆர் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்க அடிக்கல் நாட்டினார். 1990-91ல் நிதிநிலையில் சிலை அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1990 செப்டம்பர் 6 ஆம் நாள் சிலை அமைக்கும் பணியை முத்தமிழறிஞர் மு. கருணாநிதி தொடங்கிவைத்தார்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

மாமல்லபுர அரசு கட்டட மற்றும் சிற்ப கலைக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் கணபதி தலைமையில் சிலை செதுக்கும் பணி தொடங்கியது. ஆனால் சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு கட்டுமானப்பணி கிடப்பில் போடப்பட்டது. 1997 இல் மீண்டும் புத்துயிர் பெற்று பணி விரைவு படுத்தப்பட்டது. சிலை அமைக்க கற்களை எடுத்து செல்ல கொச்சியிலிருந்து ‘பாண்டூன்’ என்ற படகு ஒன்று வாங்கப்பட்டது. மொத்தம் 3,681 கற்கள் பயன்படுத்தி ஆதாரப் பீடம் அமைக்கப்பட்டது .முகம் 10 அடி உயரம், 40 அடி உயரத்தில் கழுத்து இடுப்பு பகுதிகள், 40 அடி உயரத்தில் இடுப்பு முதல் கால்பாதம் வரையும், கொண்டை பகுதி 5 அடியிலும் அமைக்கப்பட்டு திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தை எட்டியது.மொத்தம் 6.14 கோடி செலவில் பணியாளர்கள், சிற்பிகள், உதவியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் என 150க்கும் மேற்பட்டவர்கள் நாளொன்றிற்கு 16 மணி நேரம் உழைப்பில் உருவானது.

சிலையின் இடுப்பு வளைவு சற்று சவாலாக இருந்தாலும் நவீன அறிவியல் துணையோடு வாஸ்துசாஸ்திரப்படி இதனை மரமாதிரி உருவாக்கி அதன் எடை மையத்தை அளந்து அதன் பின்னர் கட்டப்பட்டது.

கன்னியாகுமாரி, அம்பாசமுத்திரம் மற்றும் சோழிங்கநல்லூர் என சிலைக்கூடங்களில் பணிகள் நடைபெற்றன. டன் எடை கொண்ட கற்களும், மூன்று அம்பாசமுத்திரத்திலிருந்து 5000 சோழிங்கநல்லூரிலிருந்து 2000 டன் தரமான கருங்கற்களும் வந்தன.

13அடி நீளமும் 15 டன் எடையும் கொண்ட பெரிய கற்கள் மட்டும்3 , 681ஆகும் மற்றவை மூன்றிலிருந்து எட்டு டன் எடை கொண்டவை.காது ,மூக்கு,கண்,வாய்,நெற்றி பகுதிகளுக்கான கற்கள் கையால் செதுக்கப்பட்ட ஒரே கற்களாகும் .பனைமரமும் ,சவுக்கு மரமும்,இரும்புக் கம்பிகளும் ,4சாரங்கட்டப்

பயன்பட்டது .மொத்தம்18 , 000சவுக்கு மரங்கள் இரண்டு சரக்குந்து கொள்ளளவு கொண்ட கயிற்றால் முழு சாரமும் கட்டப்பட்டது .இறுதியாக 2000 ஜனவரி1 ம் தேதி அப்போதைய முதல்வர் மு .கருணாநிதி சிலையைத் திறந்து வைத்தார்.

**1. சிலை அமைப்பு**

திருவள்ளுவர் சிலை பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட பல மாடிக் கட்டிடம் போன்ற அமைப்பு கொண்டதாகும் .உலகில் இதுபோன்ற கருங்கற்களால் ஆன சிலை கிடையாது. சிலையினுள் 130 அடி உயரம் வரை வெற்றிடம் உள்ளது .இந்த வெற்றிடம் சிலையின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தும் நுட்பமுடையது . கல்லால் ஆன உத்திரங்களும் ,கட்டாயங்களும் பரவப்பட்டு சிலை எப்பக்கத்திலும் சாய்ந்து விடாது நேரே நிற்குமாறு உறுதி செய்யப்பட்டுள்ளது.

பீடத்தின் 38 அடி உயரமானது திருக்குறளின் அறத்துப்பாலின் 38 அதிகாரங்களையும் ,பீடத்தின் மேல் நிற்கும் 95 அடி உயரச் சிலையானது திருக்குறளின் பொருள் மற்றும் இன்பத்துப்பாலின் 95 அதிகாரங்களையும் குறிப்பதாகத் திகழ்கின்றது. மண்டபத்தின் உட்புறச் சுவற்றில் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்து ஒரு குறள் வீதம் 133குறட்பாக்கள் தமிழிலும் அவற்றுக்கு நிகராக ஆங்கில மொழி பெயர்ப்பிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

**2. சிலை குறிப்புகள்**

மொத்த சிலையின் உயரம் – 133 அடி

சிலையின் உயரம் 95 அடி

பீடத்தின் உயரம்- 38 அடி

சிலையின் உருவாக்கம் -3 டன் முதல் 8 டன் வரை எடையுள்ள 3681 கருங்கற்களைக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

சிலையின் மொத்த எடை – 7,000 டன்

சிலையின் எடை-2,500 டன்

பீடத்தின் எடை – 1,500 டன்

பீடத்தைச் சுற்றி அமைந்துள்ள மண்டபத்தின் எடை – 3,000 டன்

**3. சிலை அளவுகள்**

முக உயரம் 10 அடி

கொண்டை – 3 அடி

முகத்தின் நீளம் -3 அடி

தோள்பட்டை அகலம் -30 அடி

கைத்தலம் -10 அடி

உடம்பு (மார்பும் வயிறும்) -30 அடி

இடுப்புக்குக் கீழ் தொடை மற்றும் கால் – 45 அடி

கையில் ஏந்திய திருக்குறள் ஏட்டின் நீளம் – 10 அடி

**3. பராமரிப்பு**

2004 டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமியின் போதும் நிலநடுக்கத்தின் போதும் பாதிப்பின்றி இச்சிலை எதிர்கொண்டுள்ளது. உப்புக் காற்றிலிருந்து சிலையைப் பாதுகாக்க எப்போசைட் என்ற ரசாயனக் கலவை நான்காண்டுகளுக்கு ஒருமுறை பூச வேண்டும் என்று ஸ்தபதி கணபதி பரிந்துரைத்தார்.மேலும் சிலை முழுவதும் படிந்துள்ள உப்பை உறிஞ்ச காகிதக்கூழ் பூசப்பட்டது உப்பு நீக்கப்படும். அதன்படி இச்சிலை

பராமரிக்கப்படுகிறது. இவ்வகையில் நான்காவது புதுப்பிக்கும் பணி 2017 அக்டோபர் 15 ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது.

**26. இசைக்கருவிகள் குறித்து விவரித்து எழுதுக.**

- இசைக்கருவிகளை இரண்டு வகைப்படும். ஒன்று மிடற்றிசை மற்றொன்று கருவியிசை. குரலால் பாடப்படுவது குரலிசை ஆகும்.
- கருவிகளால் இசைக்கப்படுவது கருவியிசையாகும். இசையை இசைப்பதற்கும் இசையை செறிவூட்டிக் கேட்பதற்கும் இசைக்கருவிகள் பயன்படுகின்றன. இசையை மேலும் மேலும் செறிவூட்டிக் கேட்பதற்கு துணை இசைக் கருவிகள் பயன்படுகின்றன.
- இசையில் பல புதிய வகைகள் தோன்றுவதற்கு துணை இசைக்கருவிகள் முக்கிய பங்காற்றுகின்றன.
- இந்தியாவில் 500 -க்கும் மேற்பட்ட இசைக்கருவிகள் உள்ளன. தமிழகத்தில் மட்டும் சுமார் 250 -க்கும் மேற்பட்ட இசைக்கருவிகள் உள்ளன.
- இசைக்கருவிகளை தோல்கருவி, துணைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்று வகைப்படுத்தலாம்.

**1. தோல் கருவி**

- இசைக்கே உயிரியாக திகழ்வது தோல்கருவிகள் ஆகும். தோலால் இழுத்துக் கட்டப்பட்ட கருவிகள் தோல் கருவிகள் எனப்படுகிறது.
- ஆதிகாலத்தில் மன்னன் செய்தியை மக்களுக்கு அறிவிக்க தோல்கருவிகளையே பயன்படுத்தி வந்துள்ளான்.
- போரில் பறை அடித்து செய்தியை அறிவிக்கவும், அரசு ஆணைகளை தெரிவிக்கவும், பொழுதுபோக்கு சார்ந்த இசை நிகழ்ச்சிகளுக்கும் இசைக்கருவிகள் பயன்படுத்தியுள்ளனர்.
- உடுக்கை, உறுமி, கஞ்சிரா, கடம், கிணை, தண்ணுமை, தவில், பம்பை, பறை, மிருதங்கம், முரசு போன்ற தோல்கருவிகள் இன்றைக்கும் பயன்படுத்தப்படுகின்றன.
- இவ்வகை இசைக்கருவிகள் கருங்காலி, செங்காலி, வேம்பு, பலா, உலோகம், மண் போன்றவற்றால் செய்யப்படுகின்றன.
- மாட்டுத் தோல், ஆட்டுத் தோல், காளை மாட்டின் தோல் போன்ற தோல்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- தோல்பறைகளை கட்டுவதற்கும் அத்தோல்களே கயிறுகளாகவும் பயன்படுத்தியுள்ளனர்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**2. துளைக்கருவி**

- துளைக்கருவிகள் தொன்மையான இசைக் கருவிகளாகும். துளைக்கருவிகள் இயற்கையாகவே கிடைத்த கருவிகள் என்பர்.
- வண்டு துளைத்த மரத்தின் வழியாக காற்று சென்றதன் விளைவால் ஏற்பட்ட இனிய ஓசையிலிருந்து உருவானதே துளையிசைக் கருவிகள் எனப்படுகிறது.
- முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய கருவி குழல். நாதசுரம், புல்லாங்குழல், கிளாரினெட், ஒத்து, ஆர்மோனியம், கொம்பு, முகவீணை போன்ற கருவிகள் குழல் கருவிகளாகும்.

**3. நரம்புக் கருவி**

- நரம்புக் கருவியே தந்தி வாத்தியம் எனப்படுகிறது. யாழ், வீணை, தம்புரா, பிடில் போன்ற கருவிகள் நரம்புக்கருவிகளாகும்.
- நரம்புக் கருவிகளை அறிமுகம் செய்தவர்கள் வேடுவர்கள்.

**4. கஞ்சக் கருவி**

- உலோகத்தால் செய்யப்பட்ட கருவிகள் கஞ்சக் கருவிகள் எனப்படும். கைத்தாளம், பிரும்மதாளம், எலத்தாளம், குழித்தாளம், சல்லரி போன்ற கருவிகள் கஞ்சக் கருவிகளாகும்.
- இக்கஞ்சக் கருவிகள் வெண்கலம் என்ற உலோகத்தால் செய்யப்படுகின்றன. இக்கருவிகள் மங்கல இசைக்குழு, தேவார இசைக்குழு, ஆடலிசைக் குழு போன்றோர் இன்றும் பயன்படுத்தி வருகின்றனர்.
- மேலும் அரிகதை செய்வோர், பசனைக்குழுவினரும் இக்கஞ்சக் கருவியையே பயன்படுத்துகின்றனர்.

**5. மிருதங்கம்**

- மிருதங்கம் அல்லது தண்ணுமை என்பது தாளக்கருவி. இது தென்னிந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது. மிருந்தங்கமானது கர்நாடக இசை நிகழ்ச்சிகள், வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகள் போன்றவற்றில் முக்கிய இடம்பெறுகிறது.
- மிருதங்கத்திற்கென தொன்மையான வரலாறு உண்டு. மிருதங்க இசைக்கருவி சிந்துவெளி நாகரீக காலத்தை சேர்ந்தது என்தற்கு பல ஆதாரங்கள் கிடைக்கின்றன.

**i. மிருதங்கம் சொல் பெயர்க்காரணம்:** பழந்தமிழில் மதங்கம் என்ற சொல் திரிந்து மிருதங்கம் என்று வடமொழியினர் கருதுகின்றார்கள். எனினும் தமிழில் 'மெது' என்ற சொல்லே 'மிருது' என்று திரிந்துள்ளது.

**ii. மிருதங்கம் செய்ய பயன்படும் முறை:** பலாமரக் கட்டையை (குற்றியை) குடைந்து மிருதங்கம் செய்யப்படுகிறது. இது வட்ட வடிவ முனைகளில் ஒருமுனையை விட மற்றமுனை பெரியதாகவும் இருக்கும். நடுப்பாகும் இவ்விரு முனைகளை விட விட்டம் பெரிதாகவும் உருளை வடிவில் அமைந்திருக்கும். இருபகுதிகளிலும் தோல், தோல்வார்களினால் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். வலது பக்கத்தில் 'சோறு' என்ற ஒரு கருமை நிறப் பதார்த்தம் நிரந்தரமாக ஒட்டப்பட்டிருக்கும். மறுபக்கத்தில் மிருதங்கம் வாசிக்கப்படுவதற்கு சற்று முன்னர், மாவும் நீரும் கலந்த ஒரு கலவை தடவப்பட்டு நிகழ்ச்சி முடிந்ததும் இது நீக்கப்பட்டுவிடும்.

**iii. மிருதங்கம் அமைப்பு:** மிருதங்கம் என்ற வடமொழிச் சொல்லுக்கு 'மண்ணை அங்கமாகக் கொண்டது' என்று பொருள். மிருதங்கத்தின் வலது பக்கத்தை வலந்தலை என்றும் இடது பக்கத்தை இடந்தலை அல்லது தொப்பி எனப்படுகிறது.

**iv. குச்சி மிருதங்கம்:** வலது பக்கத்தில் இரு தோல்களுக்கு நடுவே மெல்லியக் குச்சிகளை சொருகுவர். இதனால் வித்தியாசமான ஒலியினை கேட்க முடிவது குச்சி மிருதங்கம் எனப்படும்.

**6. பறை இசைக் கருவி என்றால் என்ன?**

பறை தொன்மையான கருவி ஆகும். தொல்காப்பியர் திணைக்குரிய கருப்பொருளை குறிப்பிடுகையில் பறை பற்றி பேசுகிறார். தோல்களால் போர்த்தப்பட்டது பறை இசை கருவி. அதே தோல்களை வார்களாக கொண்டு இறுக்கி கட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. பறையானது ஒருமுகமுடையது இருமுகமுடையது என இருவகைப்படுகிறது. பறை அடிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற குச்சிக்கு குறுந்தடி என்று பெயராகும்.

பறை என்பது போர்ப்பறை, வெருப்பறை, வெறியாட்டுப்பறை, பேரோசைப்பறை, தட்டைப்பறை என்று பல பெயர்களில் வழங்கப்படுகிறது. தொல்காப்பியர் திணை அடிப்படையில் குறிஞ்சிப்பறை, முல்லைப்பறை, மருதப்பறை, நெய்தற்பறை, பாலைப்பறை என்று நிலத்தின் படி அழைக்கின்றார். பகை நாட்டின் மீது போர் செய்து வெற்றி பெற்றபின் பறை அடித்து செய்தி அறிவித்தல், வெற்றியை பறையடித்து கொண்டாடுதல் மற்றும் தோல்வியைப் பறையடித்து தெரிவித்தலும் பண்டைய தமிழர்களின் மரபாகும்.

i. வயலில் வேலை பார்க்கும் உழவர்கள் ஊக்கம் பெற வாசிக்கப்பட்டது மருதப்பறை
ii. நெல் அறுக்கும் போது பறை அடிக்கப்படுகிறது.

iii. ஆறலைக் கள்வர் வழிப்பறி செய்யும் பொழுது பறை கொட்டப்படுகிறது
iv. மதம் பிடித்த யானை வரும் பொழுதும் பறை வாசிக்கப்படுகிறது.
v. கழைக் கூத்தாடுபவர்கள் களத்தில் பறை முழங்கப்படுகிறது.
vi. செய்தியை அறிவிக்கவும் பறை முழங்கப்படுகிறது.

**7. வீணை என்றால் என்ன?**

இசைக் கருவிகளின் அரசி என்று வீணை அழைக்கப்படுகிறது. இது மிகச் சிறந்த நரம்புக் கருவியாகும். தற்பொழுது வழக்கில் உள்ள வீணையைத் தஞ்சை ஆண்ட நாயக்க மன்னர் இரகுநாத நாயக்கர் (கி.பி. 17ஆம் நூற்றாண்டில்) உருவாக்கியது என்பர். இதனால் வீணையை இரகுநாத வீணை, தஞ்சை வீணை என்று அழைக்கப்படுகிறது.

குடம், மேற்பலகை, தண்டு, சுரைக்காய், பிரடைகள், யாளி முகம், மேளச்சட்டம், மெழுகுச்சட்டம், 24 மெட்டுக்கள் போன்ற பாகங்களைக் கொண்டது. வீணை பலா மரத்தால் செய்யப்படுகிறது. வலது கையின் ஆள்காட்டி விரலும் நடுவிரலும் கம்பிகளை மீட்டுவதற்கும் இடது கையின் ஆள்காட்டி விரலும் நடுவிரலும் வீணை இசைக்க பயன்படுத்தப்படுகிறது.

**8. யாழ் இசைக் கருவி குறித்து விளக்குக?**

யாழ் என்பது பண்டைய இசைக் கருவிகளுள் ஒன்றாகும். நரம்புகளால் கட்டப்பட்டது யாழ் எனப்படுகிறது. தமிழர் வாசித்த முதல் இசைக்கருவி யாழ் கருவியாகும். நரம்புக் கருவிகளின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்த ஆதி கருவி யாழ். இன்று இக்கருவி முழுவதுமாக மறைந்து நரம்பிசைக் கருவிகளில் வீணையே முதலிடம் பெறுகிறது.

S MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**i. யாழின் வரலாறு:** இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் பல்லவர் காலத்தில் காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயிலில் மட்;டுமே யாழ் இசைக்கும் சிற்பம் உள்ளது. இது கி.பி.8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. குறிஞ்சி நில மக்கள் வேட்டைக்கு பயன்படுத்திய கருவி வில். வில்லில் முறுக்கேற்றிக் கட்டப்பட்ட (நாண்) நரம்புக் கயிறிலிருந்து அம்பு சென்றபோது அதிலிருந்து தோன்றிய இசையே யாழிசை என்று சொல்லப்படுகிறது. இந்த வில்லே பின்னர் யாழ் கருவியாக மாறியது எனப்படுகிறது. யாழின் வரலாற்றை துல்லியமாக அறிய போதிய சிற்பங்களோ, ஓவியங்களோ கிடைக்கவில்லை. புறநானூறு, கலித்தொகை, பரிபாடல், ஆற்றுப்படை நூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், பெருங்கதை, சீவகசிந்தாமணி, பக்தி இலக்கியங்கள் போன்ற நூல்களில் யாழ் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. எனினும் யாழ் குறித்த வடிவத்திற்கு சான்றுகள் கிடைக்கவில்லை.

**ii. யாழ் கருவியின் வளர்ச்சி:** வில்லிலிருந்து தோன்றிய வில்யாழ் முதலில் குறிஞ்சி நிலத்தில் தோன்றி பின்னர் முல்லை, மருதம், நெய்தல், பாலை என நான்கு நிலங்களுக்கும் உரியதாக அமைந்தது. யாழினை இசைத்தவர்கள் பாணர்கள் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. யாழினை இசைப்பதைத் தொழிலாகக் கொண்டவர்களை யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் என்று மூன்று வகைகளாக பிரிப்பர். யாழ்ப்பாணர் என்பர்கள் பெரும்பாணர் என்றும் சிறுபாணர் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டனர். மன்னர்கள் பாணர்களை போற்றியும் பொருள் கொடுத்தும் வந்துள்ளதை சங்க நூல்கள் சான்று அளிக்கின்றன. யாழானது பாடிக்கொண்டே இசைக்கும் கருவியாக இருந்துள்ளது. சாதாரண மக்களிடம் இருந்த யாழ் ஒரு காலத்தில் தெய்வத்தோடு தொடர்பு படுத்தி வணக்கத்திற்குரியதாக மாறியது. தமிழர்கள் யாழிசைக்கே முன்னுரிமை அளித்து வந்துள்ளனர். ஒரு நரம்பில் தொடங்கி 3, 5, 7 என்று ஆயிரம் நரம்புகள் கொண்ட யாழ் உருவாகியது. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை பல யாழ்கள் தோன்றின.

**iii. யாழின் அமைப்பு:** யாழ் தணக்கு எனும் மரத்தால் செய்யப்படுகிறது. யாழின் வடிவத்தை படகு வடிவத்துடன் ஒப்பிடுவர். மேல் பகுதி தோலால் மூடப்பட்டிருக்கும். இதற்கு போர்வைத் தோல் என்று பெயர். போர்வைத்தோலின் நடுவிலுள்ள மெல்லிய குச்சியின் வழியாக நரம்புகள் கிளம்பி மேலே உள்ள தண்டியுடன் சேர்க்கப்பட்டிருக்கும். சிலயாழ்களில் நரம்புக்கட்டு அல்லது வார்க்கட்டு தண்டியில் வரிசையாகக் காணப்படும். வார்க்கட்டுகளை மேலும் கீழுமாக நகர்த்தி நரம்புகளை சுருதி கூட்டினர். சங்க நூல்கள் யாழின் உறுப்புகளை: 1. பத்தல் 2. வறுவாய் 3. யாப்பு 4. பச்சை 5. போர்வை 6. துரப்பமை ஆணி 7. உந்து 8. நரம்பு 9. கவைக்கடை 10. மருப்பு 11. துவவு என்று குறிப்பிடுகின்றன.

**iv. யாழின் வகைள்:**

கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் தோன்றிய கல்லாடம் என்னும் யாழ் வகைகளை குறிப்பிடுகிறது.

- வில் யாழ் (21 நாம்புகளை உடையது)
- பேரியாழ் (21 நரம்புகளை உடையது)
- மகர யாழ் (17 அல்லது 19 நாம்புகளை உடையது)
- சகோட யாழ் (16 நரம்புகளை உடையது)
- சுயாழ் (100 நரம்புகளை உடையது)
- செங்கோட்டி யாழ் (7 நரம்புகளை உடையது)
- சீறி யாழ் (7 நரம்புகளை உடையது)

இவற்றைவிட நாரதயாழ் (1000 நரம்புகளை உடையது). நாரத பெரியாழ். ஆதிகால பெரியாழ் (100 நரம்புகளை உடையது). தும்புருயாழ். மருத்துவயாழ் (தேவ யாழ்). ஆதியாழ் (1000 நாம்புகளை உடையது), கிளி யாழ். வல்லகியாழ். குறிஞ்சி யாழ், பாலை யாழ், மருத யாழ், முல்லை யாழ் எனப்பல வகைகள் இருந்ததாக பண்டைய நூல்கள் கூறுகின்றன. மகர யாழ் யவன தேசத்திலிருந்து எடுத்துவரப்பட்டதாகக் கூறப்படுகிறது. சாத்தான் தம் அ. இராகவன் என்பவர் தனது நூலில் வகையான யாழ்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

**v. யாழ் நூலில் கூறப்பட்டுள்ள யாழ் வகைகள்**

- வில் யாழ்
- சீறி யாழ்
- செங்கோட்டியாழ்
- பேரி யாழ்
- சகோடயாம்
- மகர யாழ் (வேல்கொடி யாழ், காமன் கொடி யாழ், வர்ணர் ஊர்தி யாழ்)

கோவை தமிழ் செம்மொழி மாநாட்டில் நடைபெற்ற கண்காட்சியில் 700 ஆண்டுகள் பழைமையான சில யாழ்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அவை,

- செங்கோட்டு யாழ்
- எருது யாழ்
- மயில் யாழ்
- மயூரி யாழ்

**vi. யாழ் வாசிக்கும் முறை:** யாழில் உள்ள ஒவ்வொரு நரம்பும் ஒவ்வொரு சுரத்துக்குச் சுருழி கூட்டப்பட்டிருக்கும். சுத்தசுரங்களே அதில் வாசிக்கமுடியும். யாமைச் சுத்த மேளமாகிய செம்பாலை அல்லது ஹரிகாம்போஜி மேளத்துக்கு முதலில் கருதி கூட்டி, பின்னர் வேறு இராகங்களைக் கிரகபேதம் செய்து வாசித்தனர்.

**vii. யாழின் வீழ்ச்சி:** வீணையின் வருகையால் யாழ் செல்வாக்கு இழந்தது. மிகவும் நுட்பமாக வாசிக்கக் கூடியது வீணை இருக்கிறது. உலோகத் தந்திகளோடு கூடிய மெட்டுக்களை வாசிக்க வீணை உதவுகிறது. யாழைக்காட்டிலும் வீணை வாசிப்பது எளிது. யாழை விட ஒலிக்கும் நாதம் வீணையில் அழகாக இருப்பதால் வீணையே செல்வாக்கு பெறத்தொடங்கியது. வீணையும் யாழும் பல நூற்றாண்டுகள் சேர்ந்தே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

**9. நாதசுவரம் குறித்து விளக்கி எழுதுக?**

நாதசுவரம் துளைக்கருவிகளுள் ஒன்றாகும். இது நாதசுவரம், நாதசுரம், நாகசுரம், நாகஸ்வரம், நாயனம் என்றழைக்கப்படுகிறது. இலங்கையிலும் தென்னிந்திய மக்கள் வசிக்கின்ற இடங்களில் நாதசுவர இசைக்கருவி வழக்கில் உள்ளது. இக்கருவி திறந்தவெளியில் வாசிப்பதற்கே ஏற்றது. வெகு தூரத்தில் இருந்து கேட்டாலும் இன்பத்தை அளிக்கக்கூடியது நாதசுவரம். இது தென்னிந்தியாவில் மங்கல இசைக்கருவியாக கருதப்படுகிறது. இன்று அனைத்து பொது நிகழ்ச்சிகளிலும் வாசிக்கப்படுகிறது. பெரிய கோயில்களில் தினந்தோறும் வாசிக்கப்படுகிறது. சிறிய கோயில்களில் சிறப்பு வழிபாட்டு நிகழ்வுகளில் மட்டுமே வாசிக்கப்படுகிறது. மேலும், திருமணம், பூப்பு நீராட்டு விழா, பொது நிகழ்ச்சிகளிலும் நாதசுவரம் முக்கியத்துவம் பெறுகிறது. நாகூர், நாகப்பட்டிணம் முதலிய ஊர்களில் நாகசர்ப்பத்தை தெய்வமாக வணங்கிய நாகர் என்ற சாதியினர் வாசித்து வந்தனர். நாகத்தின் உருவத்தை உடையது நாதசுவரம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

**i. நாதசுவரத்தின் தோற்றம்:** பழந்தமிழர்கள் நாதசுவர இசைக்கருவியாக கொள்ளவில்லை. சங்க இலக்கியங்களிலும் இடைக்கால இலக்கியங்களிலும் சான்றுகள் எதுவுமில்லை. இசைக்கல்வெட்டுகளிலும் சான்றுகள் இல்லை. நாதசுவரத்தின் துணை இசைக் கருவி தவில் ஆகும். 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாதசங்கிரகம் என்னும் இசை நூலே துளைக்கருவிகளை குறிப்பிடுகையில் நாகசுரம் என்று குறிப்பிடுகிறது.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**ii. நாதசுவரத்தின் அமைப்பு:** வன்மரத்திலிருந்து நாதசுவரத்தின் உடல் பகுதி செய்யப்படுகிறது. மரம் அல்லது உலோகத்தைக் கொண்டு நாதசுவரத்தின் விரிந்த அடிப்பகுதி செய்யப்படுகிறது. ஆச்சா மரத்திலிருந்தும் நாதசுவரம் செய்யப்படுகிறது.

- வட்டவடிவமாக விரிந்து காணப்படும் அணைசு. உள் கூடான நீண்ட மரக்குழலால் ஆன உடல்
- உடலின் மேற் பொருத்தப்படும் கெண்டை (செப்புத் தகடு) அவ்வப்போது வைத்து இசைக்கப்படும் சீவாளி,

உடலின் மேற்பாகத்தில் 12 துளைகள் உள்ளன. மேலிருந்து வரும் 7 இனைகளும் இசைப்பதற்கு ஏற்றவை. மற்றைய ஐந்தையும் அவ்வப்போது மெழுகால் அடைத்தும் திறந்தும் கொள்வார்கள். நாதகவரத்தின் நீளம் சுமார் 2.5அடி.

**iii. ஒத்து:** நாதகரத்திற்கு சுருதி கருவியாக விளங்குவது ஒத்து என்ற நாதகவாத்தைப் போன்றவடிவமுள்ள ஒரு கருவி. இதிலிருந்து ஆதார சுருதி மட்டும் தான் வெளிவரும். இதனை ஒருவர் வாயில் வைத்து, தொடர்ச்சியான ஒலியை எழுப்பி வருவார். இன்று இந்தக்கருவிக்குப் பதிலாக கருதிப்பெட்டி பயன்படுத்தப்படுகின்றது.

**iv. பெரியமேளம்:** நாதசுவரத்துக்கு தாளக் கருவியாக அமைவது தவில் (அல்லது தவுல்) என்ற தோற்கருவியாகும். இதனால் நாதசுவர இசைக்கலைஞர்கள் பொதுவாகத் தவில் இசைக் கலைஞருடன் சேர்ந்து குழுக்களாகவே செயல்படுவது வழக்கம். நாதசுவரக் கலைஞர், ஒத்து வாசிப்பவர், தவில் வித்துவான், தாளக் கலைஞர் (ஜால்ரா) ஆகிய நால்வரும் ஒன்று சேர்ந்த இசைக்குழுவைப் பெரியமேளம் என அழைப்பர்.

v. **வாசிக்கும் முறை:** நாகசுவர வாசிப்பில் மல்லாரி வாசிப்பது என்ற ஒரு முறை உள்ளது. இது குரு சிஷ்ய பாரம்பரியத்தில் கற்பிக்கப்பட்டு பின்பற்றப்படுகிறது. கோயில்களில் தெய்வத் திருமேனிகளுக்கு அபிடேசம் செய்யும்போது தீர்த்த மல்லாரி, அபிடேகம் முடிந்து அபிடேகம் முடிந்து அலங்கரிக்கப்பட்ட அலங்கரிக்கப்பட்ட பின் திருவமுது படைக்கும்போது தளிகை மல்லாரி. இறைவன் எழுந்தருளும்போது பெரிய மல்லாரி. சின்ன மல்லாரி ஆகியவை நாகசுவரத்தில் வாசிக்கப்படும். மல்லார் வாசிக்கப்படும் ஒழுங்கைக் கொண்டே கோயிலுக்கு வெளியே உள்ளவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

vi. **கட்டுமானம்:** நாதசுவரக் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படும். இம்மரமும் வெட்டப்பட்டு நீண்ட நாட்களுக்குப் பிறகே இக்கருவி செய்யப் பயன்படும். இதனால் பழைமையான வீடுகளில் கட்டடமாக இருந்து, பிரிக்கப்பட்ட பொழுது இம்மரத்தை வாங்கி வந்து, இக்கருவியைச் செய்வர். இக்கருவியின் மேல் பகுதியை உளவு என்றும், கீழ்ப்பகுதியை அணசு என்றும் கூறுவர். உளவுப் பகுதியில் 12 துளைகள் அமைக்கப்படும். இக்கருவியின் அளவிற்கேற்ப, முகவீணை. திமிரி நாயனம், பாரி நாயனம், இடைப்பாரி நாயனம், மத்திம சுருதி நாயனம் என்ற பெயர்களுடன் வழங்கி வருகின்றனர். நாதசுவரம் குழல், திமிரு மற்றும் அனசு எனும் மூன்று பாகங்களைக் கொண்டது. இது ஏறத்தாழ கூம்பு வடிவிலான மரமாகும். கீழ் பகுதியிலிருந்து மேல் நோக்கி சிறிது சிறிதாக குறைந்து இவ் வடிவத்தினை இது பெறுகின்றது. மேல் பகுதி வாய் வைத்து ஊதுவதற்கு ஏற்ற உலோக உருண்டை அமையப்பெற்று இருக்கும். ஓய்வு நாணல்களும் பல நாதஸ்வரத்துடன் இணைக்கப்பட்டு இருக்கும். அவற்றுடன் சிறு தந்ததினாலாள் கூம்பு இருக்கும் இவை நாணலினில் உள்ள எச்சில் மற்றும் தூசு குப்பைகளை நீக்கி சரியான காற்று போகும் அளவுக்கு திருத்த கொடுக்கப்பட்டிருக்கும். இவற்றுடன் ஒரு பொருத்தப்பட்டிருக்கும், பாரம்பரியமாக உலோக நாதஸ்வரத்தின் மணியும் வன்மரத்தினால் செய்யப்பட்டது. ஆனால் தற்போது மூங்கில், சந்தனமரம், உடல் தாமிரம், பித்தளை, கருங்காலி மற்றும் ஐவரி ஆகியவற்றிலும் செய்து பயன்படுத்தப்படுகின்றன. நாதஸ்வரத்தில் ஏழு விரல் துளைகளும், ஐந்து கூடுதல் ஓட்டைகளும் போடப்பட்டிருக்கும். ஐந்து கூடுதல் ஓட்டைகளையும் தேவையானபொழுது பயன்படுத்திக்கொள்ள மெழுகு அடைத்திருப்பர். பான்சூரி புல்லாங்குழல் போன்று இரண்டரை எல்லை ஓட்டைகளும் போடப்பட்டு இருக்கும்.

vii. ***சீவாளி:*** நாதசுவரத்தின் மேல் பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படும். ஜீவ வளி என்பதுதான் சீவாளியாகியிருக்கிறது. ஜீவன் என்றால் உயிர். வளி என்றால் காற்று, உடலாகிய நாதஸ்வரத்திற்கு காற்றின் மூலம் சீவாளி உயிர் கொடுக்கிறது. இது ஒரு வகை நாணல் என்ற புல் வகையால் செய்யப்படும். இந்த நாணலைக் 'கொறுக்கைத் தட்டை என்பர். இதனை ஆற்றங்கரையிலிருந்து கொண்டு வந்து காயப்போட்டு ஒரு வருடம் ஆனதும் நெல் வேகவைக்கும் போது கூட வேக வைத்து. நீராகாரத்தில் ஊறவைத்து மிருதுவாக்கி சுதிக்கு ஏற்ப அதை வெட்டி சீவாளி தயாரிக்கிப்படுகிறது. இச்சீவாளியையும் நாதசுவரத்தையும் இணைக்கும் கெண்டை என்ற பகுதி சீவாளியோடு இணைக்கப்பட்டிருக்கும்.

நாதஸ்வரம் நாதஸ்வரம் ஒரு இசைக்கருவி ஆகும். இதில் இசை உருவாதற்கு சீவாளி, நாதஸ்வரக் குழவில் அமைந்திருக்கும் துளைகள் காரணமாகின்றன. சீவாளியில் அமைந்திருக்கும் மெல்லிய இடைவெளியில் வாயிலிருந்து காற்று அனுப்பப்படுகிறது. இதனால் சீவாளியினால் அடிப்படை சுரம் உருவாக்கப்படுகிறது. நாதஸ்வரக் குழலில் இருக்கும் துறைகளைப் பயன்படுத்தி, நாதஸ்வர குழலினுன் இருக்கும் காற்றின் அளவு மாற்றியமைக்கப்படுகிறது. இதன் விளைவாக காற்று பலவித சுர. நாத வேறுபாடுகளைக் கொண்ட இசையாக மாறுகிறது.

**viii. நாதசுவரத்தின் வகைகள் :** நாதசுவரத்தில் இரண்டு வகைகள் உண்டு. திமிரி, பாரி. திமிரி நாதசுவரம் உயரம் குறைவாகவும், ஆதார சுருதி அதிகமாகவும் இருக்கும். பாரி நாதசுவரம் உயரம் அதிகமாகவும், ஆதார சுருதி குறைவாகவும் இருக்கும்.

**ix. நாதசுவரத்தின் பயன்கள் :** நாதசுவரம் மங்கல இசைக்கருவியாக பயன்படுகிறது. கோவில்கள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு பயன்படுத்த ஏற்ற இசைக்கருவியாகும். நாதசுவரங்கள் உட்புற நிகழ்ச்சிகளை விட திறந்த வெளிகளில் பயன்படுத்த மிகவும் ஏற்றதாகும். எனெனில் இவற்றின் இசை பெருக்கும் திறன் அதிகமாகும்.

**27. தமிழர்களின் சமூக பொருளாதார வாழ்வில் கோயில்களின் பங்கு குறித்து விளக்குக?**

இந்து கோயில்கள் திராவிடக் கட்டிடக்கலையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. வழிபாடு செய்கின்ற இடத்தினை குறிப்பதற்கு சமகாலத்தில் ‘கோயில்’ அல்லது ‘கோவில்’ என்னும் இரண்டு சொற்களுமே பயன்படுத்தப்படுகின்றன. 19ஆம் நூற்றாண்டில் வள்ளலாரின் பக்தர்கள் கோயில் என்பதற்கு ‘அம்பலம்’ என்ற சொல்லை பயன்படுத்துகின்றனர். ‘தளி’ என்றாலும் கோயிலை குறிக்கிறது.

‘கோயில்’ அல்லது ‘மந்திர்’ என்பது கடவுளை வணங்குதல், வேள்விகள் நடத்துகின்ற இடமான கோயிலை குறிக்கிறது. தமிழில் கோ + இல் எனும் இரண்டு சொற்களின் சேர்ப்பு கோயில் எனப்படுகிறது. ‘கோ’என்பது இறைவனையும் ‘இல்’ என்பது இல்லம் என்கின்ற வீட்டையும் குறிக்கிறது. எனவே கோயில் என்பது இறைவன் வாழுமிடத்தைக் குறிப்பதாகும். பொதுவாக மக்கள் கோயில், கோவில் ஆகிய இரண்டு சொற்களையும் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் கோயில் என்பதற்கு தேவஸ்தானம், அம்பலம் போன்ற சொற்களும் இறைவனை வணங்கும் இடத்தினை குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. ‘கோயில்’ என்பதற்கு ‘ஆலயம்’ என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. ஆலயம் என்றால் ‘ஆன்மா லயப்படுகின்ற இடம்’ என்ற பொருளும் உண்டு. பழந்தமிழ் இலக்கியங்களில் கோயில் என்பதற்கு ‘கோட்டம்’ என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

S.MARTIN RAJA, AP, TAMIL, GCE

சைவர்களுக்கு முக்கியமான கோயில்களாக சிதம்பரம் கோயில், திருக்கோணேச்சரம் கோயில் திகழ்கின்றன. திருவரங்கம் அரங்கநாதர் கோயில், திருப்பதி திருமலை வெங்கடாசலபதி கோயில் வைணவர்களுக்கு முக்கியமான கோயில்களாகும். தமிழ்நாட்டு கோயில்களுக்கும் இலங்கை கோயில்களுக்கும் நீண்ட வரலாறுகள் உண்டு. மன்னர்கள் தங்களது ஆட்சியில் கோயில்களை ஆதரித்து வந்துள்ளனர். கோயில்களை நிர்வகிக்க குளங்களையும் கிராமங்களையும் தானமாக அளித்து கோயிலுடன் இணைத்தனர்.

தமிழ்நாட்டில் மட்டும் இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 36,488 கோயில்கள் உள்ளன. கி.பி. 6 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரையிலான கோயில்களை பற்றி சைவ நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் பாடல்கள் வழி அறியமுடிகின்றன. பல கல்வெட்டுகள் மன்னர்கள் கோயில்களுக்கு வழங்கிய ஆதரவை எடுத்துக்காட்டுகின்றன. தொடக்க காலங்களில் பழைமையான கோயில்கள் மரம் மற்றும் செங்கல் போன்றவற்றால் கட்டப்பட்டன. கி.பி. 700 ஆம் நூற்றாண்டில் கோயில்கள் பாறைகளில் வெட்டப்பட்டும் குடையப்பட்டன. பல்லவ மன்னர்கள் கோயில்களை கல்லில் கட்டினர்.

சோழ மன்னர்கள் தஞ்சாவூரில் பெருவுடையார் கோயில் போன்ற பல கோயில்களை கட்டினார்கள். மேலும் சோழர்கள் பல அலங்கரிக்கப்பட்ட மண்டபங்களையும் பெரிய கோபுரங்களையும் கட்டினர். பாண்டிய மன்னர்கள் பெரிய கோபுரங்கள், உயரமான மதில் சுவர்கள், பெரிய கோபுர நுழைவு வாயில்கள் (கோபுரங்கள்)

உள்ள கோயில்களை எழுப்பினர். விஜயநகர மன்னர்கள் ஒற்றைக்கல்லில் தூண்களை அழகாக அமைத்தனர். நாயக்க மன்னர்கள் பெரிய பிரகாரங்களையும் தூண் மண்டபங்களையும் கட்டி எழுப்பினர்.

## அலகு - 3

## நாட்டுப்புறக் கலைகள் மற்றும் வீர விளையாட்டுகள்

**28. தெருக்கூத்து பற்றி விளக்குக?**

- இந்தியாவில் குறிப்பாக, தமிழகத்திலும் இலங்கையில் தமிழ்ப்பேசும் பகுதிகளிலும் காணப்படுவது தெருக்கூத்தாகும்.
- தெருக்கூத்து என்பது ஒருவகையான பொழுதுபோக்கு, சடங்கு, சமூகநிலையைக் கூறும் ஊடகமாகும்.
- தெருவில் நடத்தப்படும் கூத்தே தெருக்கூத்தாகும். இது தமிழர்களின் பழங்கலைகளில் ஒன்றாகும்.
- கதைச்சொல்லல், நாடகம், ஆடல், பாடல் போன்றவற்றை உள்ளடக்கியதே தெருக்கூத்தின் அங்கமாகும்.
- இது தொன்மக்கதை, நாட்டார் கதை, சீர்த்திருத்தக் கதை, விழிப்புணர்வுக் கதை ஆகியனவற்றுள் ஒன்றை மையமாகக் கொண்டு தெருக்கூத்து நிகழ்த்தப்படுகிறது.
- கிராமப்புறங்களிலுள்ள கோயில்களில் திறந்தவெளியில் மேடைகள் அமைத்து மூன்று பக்கமும் மக்கள் சூழ்ந்திருக்க திரைச்சீலைகள் அமைக்கப்படுகிறது.
- ஆண்கள் மட்டுமே உடல் முழுவதும் மரக்கட்டைகளை அணிகலன்களாக உடுத்திக்கொள்வர்.
- இத்தெருக்கூத்தில் கட்டியங்காரனின் மூலம் நடனம், பாடல், வசனம் என கதையை கூத்து வடிவமாக்கப்படுகிறது.
- இரவு பத்து மணிக்கு தொடங்கப்படும் கூத்து மறுநாள் காலை விடியும் வரை தெருக்கூத்தானது நிகழத்தப்படுகிறது.
- பார்வையாளர்கள் தெருக்கூத்துக் கலைஞர்களுக்கு நன்கொடை வழங்குவர்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**i. தெருக்கூத்தின் வரலாறு**

- தெருக்கூத்து என்பதே கடைக்கூத்தாகும். கூத்தின் போது நடிகர்கள் அணியும் சிறப்பு ஆபரணங்களுக்கு பெயர் கட்டாய்.
- சிலப்பதிகாரக் கதை தெருக்கூத்து கலைஞர்களால் நிகழ்த்தப்படுகிறது.
- நடிகர்கள் இடையிடையே உரைநடையுடன் வசனத்திலும் பாடுவர். வசனத்திற்கு பின்னர் உரையாடுவார்கள்.
- சிலப்பதிகாரம் மற்றும் தெருக்கூத்து இரண்டும் பெண்களின் கற்பை மையமாகக் கொண்டே பேசுகிறது.
- தெருக்கூத்தின் வரலாறு இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் இல்லை.
- ஆராய்ச்சியாளர் ரிச்சர்ட் ஏ. ஃப்ராஸ்கா, தெருக்கூத்து முதலில் செஞ்சி காணப்பட்டது என்று எழுதினார். குறிப்பாக, தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு பரவியது பின்னர் யாழ்ப்பாணம், மட்டக்கலப்பு பகுதிகளுக்க பிரபலமானது.
- தெருக்கூத்து நடைபெறும் இடத்திற்கு பெயர் களரி எனப்படும்.
- கூத்து நடத்துவதற்கான முன் தயாரிப்புகள்: ஊரின் புறத்தே இருக்கும் கோயிலில் திறந்தவெளியில் அல்லது நெல் அறுவடை முடிந்த வயல்களின் நடுவில் நடைபெறும்.
- முதலில் கூத்து நடைபெறும் இடம் சுத்தம் செய்யப்படும். இரண்டு கழிகளை (கம்பு) கொண்டு விளக்குகள் அமைக்கப்படும். கழிகளுக்கு இடையில் உள்ள இடமே கூத்து நடைபெறும். மக்கள்

கழிகளை சுற்றி மூன்று புறங்களில் அமர்ந்திருப்பர். கழிகளுக்கு பின்புறத்தில் கீற்றுகளை கொண்டு அறை அமைக்கப்பட்டு அதில் நடிகர்கள் ஒப்பனை செய்து கொள்வர்.

- இன்று தெருக்கூத்தானது ஒரு தொழிலாக செயல்பட்டு வருகின்றன.

**ii. தெருக்கூத்திற்கான மையக் கரு**

- இன்றும் பல தெருக்கூத்து நிகழ்ச்சிகள் மகாபாரதத்திலுள்ள திரவுபதி கதாப்பாத்திரத்தை கொண்டு நடத்தப்படுகிறது.
- மாரியம்மன் திருவிழாக்களில் ராமாயணத்தை மையமாகக் கொண்டு தெருக்கூத்து நாடகங்கள் நிகழ்த்தப்படுகிறது.
- சித்திரை மாத முதல் நாளில் தொடங்கி 21 நாட்கள் கோயில் திருவிழா உள்ளிட்ட சடங்கு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக தெருக்கூத்து நாடகங்கள் நடைபெறுகின்றன.
- தெருக்கூத்துகள் திருவிழாவின் நடுவில் தொடங்கி திருவிழா இறுதி நாள் காலையில் முடிகிறது.

**iii. தெருக்கூத்தின் பாணி**

- பாடல், இசை, நடனம், நாடகம் என தெருக்கூத்து நாடகங்கள் புத்திசாலித்தனமான மேடை தந்திரங்களுடன் நிகழ்த்தப்படுகிறது.
- நடிகர்கள் வண்ணமயமான ஆடைகளை அணிவார்கள். தெருக்கூத்தில் பயன்படுத்தப்படும் கருவிகள் : ஆர்மோனியம், டிரம்ஸ், ஒருமுகவனை, சிம்பல்கள்.
- விநாயகர் வழிபாட்டுடன் தெருக்கூத்து தொடங்குகிறது. கட்டியங்காரன் கதையை அறிமுகப்படுத்துவதோடு காட்சிக்களுக்கிடையில் கேலி செய்து காட்சியை இணைக்கின்றான்.

**29. தமிழர் பாரம்பரிய கரகாட்டம் பற்றி எழுதுக.**

S.MARTIN RAJA, AP TAMIL, IGCE

- தமிழர்களின் பாரம்பரிய ஆட்டம் கரகம். தலையில் கரகம் வைத்து ஆடுகின்ற ஆட்டமாகும்.
- தொல்காப்பியம் 'நூலே கரகம் முக்கோல் மனையே' - நூற்பாவில் கரகம் என்ற சொல் துறவிகள் வைத்திருக்கும் கமண்டலத்தைக் குறிக்கிறது.
- புறநானூற்றில் 'நீரற வறியாக் கரகத்து' என்பது குண்டிகை. (குடத்தைக் குறிக்கிறது)
- சங்க இலக்கியங்களில் கரகாட்டம் என்பது குடக்கூட்டம் எனப்படுகிறது.
- கரகம் வகைவகையாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். சமநிலையில் கரகம் ஆடப்படும்.
- மரியம்மனை புகழ்ந்து பாடுகின்ற பண்டைய நாட்டுப்புற நடனம் ஒன்று, திருச்சி, தஞ்சை, மதுரை, கோவை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் கரகத்துடன் காவடி, பொய்க்கால் குதிரையாட்டம் என நடைபெறுகின்றன.

**i. கரகம் அமைக்கப்படும் முறை**

- அலங்கரிக்கப்பட்ட செம்பு அல்லது பித்தளை குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு நையாண்டி மேள இசைக்கு ஏற்றவாறு குடம் கீழே விழாதவாறு பெண்கள், ஆண்கள் ஆடுவதே கரகாட்டம் எனப்படும்.
- கரகம் என்ற சொல்லுக்கு கமண்டலம், பூக்குடம், கும்பம், செம்பு, நீர்க்குடம் என்று பொருள்.
- **கரகம் கட்டும் முறை :** கரகாட்டத்திற்கு 3கிலோ எடையுள்ள சொம்பினுள் 3 அல்லது 4 கிலோ மண்ணோ அரிசியோ வைத்து ஒரு ரூபா நாணயமும் வைத்து கரக சொம்பு தயாரிக்கப்படுகிறது.
- கரகத்தின் உள்ளே விதைகளை வைத்து வழிபட்டு முளைப்பாடு எடுக்கும் வழக்குமும் உண்டு.
- செம்பின் வாய்ப்பகுதியை தேங்காயால் மூடுவதற்கென்று கட்டை வைத்திருப்பர். பின் டோப்பா என்ற குடையை இதன்மீது பொருத்தி வைப்பர்.
- குடையின் மேல் கிளி, அன்னம், புறா போன்ற தக்கைப்பறவை வைத்திருப்பர்.

- பித்தளையால் செய்யப்படுவது செம்புக்கரகம் - மண்ணால் செய்யப்படுவது தோண்டிக்கரம்
- ஆண்கள் பெண் வேடமிட்டு ஆடியதை இப்பொழுது பெண்களே ஆடுகின்றனர். இதற்கு நையாண்டி மேளம், சிறிய உடுக்கை, பெரிய உடுக்கை, கத்துக்குழல், செண்டை, பறை போன்ற கருவிகள் இசைக்கப்படுகின்றன.

**ii. கரகாட்டத்தின் வகைகள் - 2**

1. சக்தி கரகம் - பக்தி கலந்து கோயில்களில் ஆடுவது
2. ஆட்டக் கரகம் - பொதுமக்கள் முன் (அ) பொது நிகழ்வுகளில் ஆடுவது

**iii. திரைப்படம்**

- கரகாட்டத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம் கரகாட்டக்காரன், 1989 ஜூன் 16.

**30. வில்லுப்பாட்டுப் பற்றி விளக்கி எழுதுக.**

- தென் தமிழகத்தின் தலைசிறந்த நாட்டுப்புற கலை வடிவங்களில் ஒன்று வில்லுப்பாட்டு. இது வில்லின் துணை கொண்டு பாடப்படுவதால் இப்பெயர் பெற்றது. வில்லிசைப்பாட்டில் துணை இசைக் கருவிகளில் வில் முதன்மை பெறுகிறது.
- உடுக்கை, வில்லுக்குடம், தாளம், வீசுகோல், கட்டை முதலியவை வில்லுப்பாட்டுக்குரிய துணைக்கருவிகளாகும்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**i. வில்லுப்பாட்டின் தோற்றம்**

- வில்லுப்பாட்டின் தோற்றக் காலத்தை வரையறுக்க இயலாது. ஆதிமனிதன் வேட்டைக் கருவியாக வில்லை கொண்டிருந்தான். அதில் கட்டப்பட்டிருந்த மணி ஓசையில் மயங்கி வில்லுப்பாட்டிசை உருவாகியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.
- தொடக்கத்தில் வீரர்களின் பொழுதுபோக்குக் கருவியாக இருந்தது. காலப்போக்கில் பொதுமக்களின் பொழுதுபோக்காகவும் சமூகச் சீர்த்திருத்தக் கருத்துகளை சொல்வதற்கும் பயன்பட்டது.

**ii. வில்லுப்பாட்டின் அமைப்பு ஏழு வகைப்படும்:**

1. **காப்பு விருத்தம் :** இறை வணக்கம் செய்தல் தமிழர் மரபாகும். வில்லுப்பாட்டின் முதல் பகுதி காப்பு எனப்படும்.
2. **வருபொருள் உரைத்தல் :** குறிப்பிட்ட கதையை இன்று வில்லில் கூறப்போவதாக ஆசிரியர் முன் கூட்டியே குறிப்பிடுவது வருபொருள் உரைத்தல் எனப்படும்.
3. **குருவடி பாடுதல் :** தனக்கு ஆசிரியனாக இருந்தவரை நினைத்து வணங்கி நன்மை
4. உண்டாக உதவுமாறு வேண்டுவது குருவடி பாடுதல் எனப்படுகிறது.
5. **அவையடக்கம் :** கதை கூறுவோர் தன்னை எளியவனாகவும் கேட்பவர்களை சான்றோராகவும் கருதி கூறப்பெறுவது அவையடக்கம் எனப்படும். பிழை நேருமிடத்து பொருத்துக்கொள்ள வேண்டுவதாக அமையும்.
6. **நாட்டு வளம் :** கதையின் தொடக்கத்தில் கூறப்படுவது நாட்டு வளமாகும்.
7. **கதைக்கூறு :** நாட்டுவளத்தினை அடுத்து கதை முழுமையாகக் கூறப்படும். கதையின் தலைவன், தலைவியின் சிறப்பு புகழ்ந்துரைக்கப்படும்.

8. **வாழிபாடுதல் :** இறுதியாக வாழ்த்துப் பகுதி அமையும். கதை கேட்போர், கதை மாந்தர், கதை கூறுவோர் என அனைவரும் நலம்பெற வாழ்த்துவதாக மங்களமாக முடிவு பெறும் நிலையே வாழிபாடுதல் எனப்படும்.

**4. கணியான் கூத்து குறித்து விரிவாக விளக்குக?**

- கணியான் ஆட்டம், கணியான் கூத்து எனப்படுவது கணியான் சாதியால் நடத்தப்படுவதாகும்.
- மகுடம் என்ற இசைக்கருவி இசைத்து நிகழ்த்தப்படுவதால் இது மகுடாட்டம் என்றழைக்கப்படுகிறது.
- சுடலை மாடன், அம்மன், சாஸ்தா போன்ற கோயில் திருவிழாக்களில் இது நிகழ்த்தப்படுகிறது.
- ஆண்களே இக்கலையை நிகழ்த்துவர். இது 16 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது.
- இரவு முழுவதும் இடைவெளியின்றி தெய்வத்தின் எதிர்புறத்தில் மட்டுமே ஆடப்படும்.
- தமிழகத்தின் தென்மாவட்டங்களில் குறிப்பாக, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கிராமப்புற கோயில் கொடை விழாக்களில் இக்கூத்து நிகழ்த்தப்படுகிறது.

**i. இசை**

- கணியன் கூத்தில் மகுடம், ஜால்டரா போன்றவை முக்கிய இசைக் கருவிகளாகும். இது மகுடம், டேப், தப்பட்டை வாக்கியத்தை ஒத்ததாகும். வேம்பு, பூவரசு மரங்களால் செய்யப்பட்ட வட்டப்பகுதியில் பூம்பசுவின் தோலைக்கட்டி செய்யப்படுகிறது.
- உச்சம், மந்தம் என நுண்ணிய வேறுபாடு மிக்க இரண்டு மகுடங்களை இசைக்கலைஞர்கள் பயன்படுத்துவர்.
- சாமியாடியின் உக்கிரத்தை அதிகரிக்க உச்சம் இசைக்கப்படும். சோகத்தை உணர்ந்த மந்தம் இசைக்கப்படும். முதலில் மகுடம் இசைக்கப்படுகிறது. கூட பாடுபவர் ஜால்ராவில் தாளம் போடுவர். ஆசிரியர் பாடும்போது இடது காதை இடது கையால் பொத்தி வலது கையை வீசிப் பாடுவார். இசை கலந்த உரையாக இது அமைந்திருக்கும். பாடல்கள் ஆங்காங்கே மிகுந்து வரும்.
- கர்நாடக சங்கீதம், கிராமிய இசை போன்ற இசைக்கூறுகளும் கல்யாணி, ஆனந்த பைரவி, முகாரி, பூபாளம், தோடி, நாட்டை, அடாணா, பைரவி போன்ற இராகங்களும் இடம்பெறும். இந்த இசைக்கருவிகளை அடிக்கடி நெருப்பில் வாட்டி உரமேற்ற வேண்டும்.

**ii. கணியான் கூத்துக்காரர்கள் ஒப்பனை செய்யும் விதம்**

- சுடலைமாடன் கோயிலில் கணியான் கூத்து குழுவினர் வேதாள ஆட்டத்தின் போது விகாரமான தலைப்பாகைகளை அணிந்து கொண்டு மெய்சிலிர்க்க ஆடுவர்.
- இரண்டு கணியான்கள் பெண் வேடமிட்டு ஆடும்போது பெண்களுக்கான ஒப்பனை செய்திருப்பர். நீளமான கூந்தல், கொண்டையும் கழுத்தில் ஆபரணமும் பார்வையாளர்களின் சோம்பலை கலைக்கும் வண்ணம் கால்களில் சலங்கைகளையும் கட்டியிருப்பர்.

**iii. கதை**

- கணியான் கூத்தில் சிறுதெய்வக்கதை குறித்து பாடி ஆடப்படுகிறது. சுடலை மாடனுக்கும் கணியானுக்கும் தொடர்பு இருப்பதாக கதையில் கூறப்படுகிறது. சிவபெருமான் இரண்டு முரடர்களை படைத்து பூமிக்கு அனுப்புகிறார். அதில் ஒருவன் சுடலை மாடன் மற்றொருவன் கணியான் என அழைக்கப்பெறுகிறான்.
- சுடலை மாடனுக்கு பல வழிகளில் உதவியாக இருப்பவன் கணியான். கணியான் கூத்தின் ஒரு பகுதியாக, சுடலையை நோக்கி ஓடும் சுடலை மாடனுக்கு கணியான் தனது விரல், நாக்கை அறுத்து குருதியை இலையில் படைக்கின்றான். வெட்டிய இடத்தில் திருநீறு பூசப்படுகிறது. அவ்வாறு கணியான் குருதி கொடுத்து சுடலை மாடனுக்கு உறுதுணையாக இருந்ததை இறுதிவரை வாழ்க

வாழ்கவே என்று கூத்து நடக்கும் கோயிலின் தெய்வ கதை முதலில் பாடி பின் மக்கள்; விரும்பும் கதை பாடப்படுகிறது.

- நீலி அம்மன் கதை, சுடலை மாடன் கதை, பன்றி மாடன் கதை, வண்ணாரமாடன் கதை, கருப்பசாமி கதை, இசக்கியம்மன் கதை போன்றவை குறிப்பிடத்தக்க கணியான் கூத்து கதைகளாகும். இராமாயணம், மகாபாரதம் கதைகளும் வாய்மொழியாக பாடி ஆடுகின்றனர்.
- வில்லுப்பாட்டில் எழுதி வைத்துப் பாடப்படும் கதைகள் கணியான் கூத்தில் வாய்போன போக்கில் மனதில் தோன்றியதை பாடப்படுகிறது. இது வழிவழியாக தொடர்கிறதே தவிர முறையாக பயிற்றுவிக்கவோ, ஆட்டுவிக்கவோ முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

**iv. கணியான் கூத்தின் நோக்கங்கள்**

- சிறுதெய்வ வழிபாட்டில் சிறுதெய்வ கதைகளை முதன்மைப்படுத்துதல்.
- பேயோட்டம், அம்மன் கூத்து போன்ற நிகழ்ச்சிகளில் நாடகக் கூறுகள் அதிகம் காணப்படுதல்.
- சடங்குகளை கதை நிகழ்ச்சியாக செய்து காட்டுதல்

**v. கணியான் கூத்தின் கால அளவு**

- சுடலைமாடன் கோயிலில் வெள்ளிக்கிழமை இரவிலும் செவ்வாய்க்கிழமை இரவில் அம்மன் கோயிலிலும் கூத்து நடைபெறுகிறது. இக்கூத்து இரவு ஒன்பது மணிக்கு தொடங்கப்படுகிறது.
- நடு இரவு நேரத்தில் சாமியாடி கணியானை கூப்பிடுவார் அப்பொழுது வழிபாட்டு தெய்வம் சாமியாடி மீது இறங்கும். தன்னை மறந்த நிலையில் ஆடுவார். அவரது பேச்சு தெய்வத்தின் பேச்சாக இருக்கும். இரத்தப் பலிக்காக வேண்டுகோள் விடுவார். சாமியாடி ஆட்டத்தை நிறுத்தி கணியான் குழு ஆடுவதற்குரிய சூழல் உருவாக்கப்படுகிறது.
- இவ்வாறு கணியான் கூத்து தெய்வ வழிபாட்டோடு தொடர்புடையதாக இருப்பதால் கால அளவு கிடையாது.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**vi. கணியான் கூத்து நடத்தப்படும் முறை**

- ஏழு கலைஞர்கள் இருப்பார்கள், இருவர் மட்டும் பெண் வேடமிட்டு ஆடுவார்கள். கதை கூறிப்பாடும் ஆசிரியர் அண்ணாவி எனப்படுவார். இவரே குழுவின் தலைவர் ஆவார்.
- ஒரு துணைப்பாடகர், ஜால்ரா, மகுடம் இசைப்பவர்கள் இருவர்.
- அண்ணாவின் பாட்டை பின்பற்றி பாடுவதற்கு ஒருவர். ஆட்டம், பேயாட்டம் ஆடுபவர் மற்றும் திரளை போடுபவர் என துணை ஆட்டக்குழுக்களும் இடம்பெறும்.
- கணியான் கூத்தின் மேடையில் முதன்மைக் கலைஞர் (திறமையானவர்) மேடையில் நிற்பார்.
- கூத்தின் போது ஆசிரியர் இடுப்பு வேட்டியின் மீது துண்டை கட்டியிருப்பார். அண்ணாவி முதலில் பாட அப்போது பேண்வேடமிட்ட ஆண்கள் ஆடுவர். மகுட இசை, பக்கவாத்திய மேளக்காரர்களின் குரல்கள், ஜால்ரா இசையென பின்னணி குரல்களுடன் கூத்து நடைபெறும்.

**vii. சடங்குகள்**

- இரத்தபலியிடுதலில் கைவெட்டு என்ற நிகழ்ச்சி கணியான் கூத்தில் சடங்காக காட்சிப்படுத்தப்படுகிறது. கூத்து சடங்கு என்ற இருவகை படிநிலைகள் கோயில் திருவிழாவில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## 31. ஒயிலாட்டம் குறித்து எழுதுக?

- ஒயிலாட்டம் என்பது ஒரே நிறத்துணியைத் தலையில் கட்டிக்கொண்டும் ஒரே நிறத்துணியை கையில் வைத்துக் கொண்டும் இசைக்கேற்ப வீசி ஆடுகின்ற குழுவிற்கு பெயர் ஒயிலாட்டமாகும்.

- அழகு, அலங்காரம், சாயல், ஒய்யாராம் என்ற பொருள்களை உடையதால் ஒயிலாட்டம் என பெயர் பெறுகிறது. இது முற்றிலும் ஆண்களே கம்பீரமாக ஆடுகின்ற ஆட்டம் என்பதால் பெண்கள் இதில் பங்கேற்பதில்லை.
- இதில் பத்து முதல் பன்னிரெண்டு பேர் கலந்து கொண்டு எதிரெதிர் திசையிலோ அல்லது நேர்திசையிலோ நின்று கொண்டு ஆடுவார்கள். சிறகை விரித்தால் மயிலாட்டம், சேர்ந்து குதித்தால் மயிலாட்டம் என்று இக்கலை வர்ணிக்கப்படுகிறது.
- பானைத்தாளம் (குடத்தில் மாட்டுத்தோல் கட்டப்பட்டு இசைக்கப்படும் வல்லிசைக் கருவியாகும்), தவில், சிங்கி, சோலக் போன்ற இசைக்கருவிகள் ஒயிலாட்டத்தில் பயன்படுத்தப்படுகிறது. கலைஞர்கள் காலில் சலங்கை அணிந்திருப்பார்கள். பாடத்தெரிந்தவருக்கு ஆடத்தெரிந்திருக்கத் தேவையில்லை. பாடலுக்குத் தகுந்தவாறு அடவு வைத்து கலைஞர்கள் ஆடுவார்கள்.
- இராமாயணக் கதை பாடல்கள் பாடப்படுகின்றன. பவளக்கொடி கதை, மதுரைவீரன் கதை, முருகன் கதை, சிறுத்தொண்டர் கதை, வள்ளி திருமணக்கதை போன்ற கதைகள் பாடி ஆடப்படுகின்றன. ரெட்டியார் மற்றும் முக்குலத்தைச் சேர்ந்த இனத்தவர்கள் இக்கலையை மரபு ரீதியாக நிகழ்த்துகின்றனர்.
- கிறித்தவர்கள் அண்மைக்காலமாக ஆலயங்களில் பைபிள் கதைகளை ஒயிலாட்டமாக பாடி ஆடி வருகின்றனர்.

**i. ஒயிலாட்ட முறைகள்**

1. ஒயிலாட்டத்திற்கென தனித்த ஒப்பனைகள் உண்டு. ஒழுங்காக தலை வாரியிருப்பர்.
2. கால்களில் சலங்கை கட்டிக்கொண்டு வலது கையில் ஒரே வண்ணத்திலான கைக்குட்டை பிடித்திருப்பதும், தலையில் ஒரே வண்ணத்தில் துணிகளைக் கட்டியிருப்பதும் கையில் சிவப்பு துணி பிடித்திருப்பதும் அவசியம். தலைமையாளர் பச்சை நிறத்தில் பிடித்திருப்பார். வெள்ளை வேட்டியை தார்ப் பாய்ச்சியிருப்பதும் மரபாகும்.
3. தொடக்கத்தில் கைக் கூப்பி, ஒரு காலை மட்டும் தட்டி கடவுள் வணக்கம் செய்து, அடுத்து தரையைத் தொட்டு அவை வணக்கம் செய்து விட்டு அடவுகளைத் தொடங்குவர். இடையிடையே களைப்பைப் போக்கக் கொள்ள பாடல் பாடும் அண்ணாவி விசிலடித்து ஆட்டத்தை நிறுத்திக் கொள்வர்.
4. ஒயிலாட்டக்குழுவின் தலைவரோ அல்லது வாத்தியார் தான் அண்ணாவியாக செயல்படுவார். கடைசிப்பாடலுக்கு முன் பார்வையாளர்களுக்கு வாத்தியார் நன்றி சொல்வார். கடைசி அடவு முடிந்ததும் அனைத்து கலைஞர்களும் பூமியைத் தொட்டு வணங்கிவிட்டு நிறைவு செய்வார்கள்.
5. ஆதிகாலத்தில் குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் ஒயிலாட்டத்தில் சிறந்த ஆண்களையே பெண்கள் திருமணம் முடிக்க விரும்பியதற்கு சான்றுகள் உண்டு.

**ii. ஒயிலாட்டத்திற்கான இலக்கணங்கள்**

1. ஆட்டத்தின் வேகத்தை தீர்மானிக்க ஒயிலாட்ட இலக்கணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆட்டத்தின் வேகத்தைப் பொறுத்து தக்கு (மெதுவாக ஆடுவதற்குரிய இலக்கணமாகும்), காலம் (வேகமாக ஆடுவதற்குரிய இலக்கணமாகும்) என்றும் அடவுகளின் வேகத்தைப் பொறுத்து அடி, சாரி, தட்டு என்று வகைப்படுத்தியுள்ளனர்.
2. வாத்தியார் பாடலை பாட, குழுவினர் அதே வரிகளைப் பாடி ஆடுவார்கள். அடவுகள் மெதுவாக தொடங்கப்பட்டு மெல்ல மெல்ல வேகம் பெறும். தொடக்கம் முதல் இறுதிவரை கலைஞர்களின் அடவுகள் கம்பீரம் குறையாமல் இருக்கும்.

3. ஆட்டத்தின் எந்த இடத்திலும் கலைஞர்கள் கழுத்துக்கு கீழே, இடுப்புக்கு மேலே உள்ள உடற்பகுதிகள் வளையக்கூடாது. ஒயிலாட்டம் ஆடும்போது காலில் கட்டிய சலங்கை 'கெம்பீரமாக சத்தமிட வேண்டும்' என்பது விதி.

4. மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, திண்டுக்கல், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் இன்றும் ஒயிலாட்டம் நடந்து வருகிறது.

**6. தோல்பாவைக் கூத்து என்றால் என்ன?**

- தோல்பாவைக்கூத்து அல்லது பாவைக்கூத்து என்பது உயிரற்ற பாவைகளை கொண்டு உயிருள்ள பாத்திரங்களை போல் நடத்தப்படுகின்ற கூத்தாகும்.
- பதப்படுத்தப்பட்ட ஆட்டுத் தோலில் வரையப்பட்ட வண்ணப்படங்களை விளக்கின் ஒளி மூலம் திரைச்சீலையில் அதன் நிழல் தெரியுமாறு ஆட்டி நிகழ்த்துவது தோல்பாவைக் கூத்து எனப்படும்.
- இக்கூத்தானது தோல்பாவைக் கூத்து, தோல்பாவை நிழல் கூத்து, நிழலாட்டம், தோல் பொம்மலாட்டம் என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது.
- இந்தியாவில் ஆந்திரா, கர்நாடகம், கேரளம், ஒரிசா, தமிழிநாடு போன்ற மாநிலங்களில் இக்கூத்து உள்ளன. குறிப்பாக தமிழகத்தில், மதுரை, தூத்துக்குடி, கன்னியாக்குமரி, விருதுநகர் பகுதிகளில் நடைபெற்று வருகிறது.
- சரபோஜி மன்னர் காலத்தில் தஞ்சை அரண்மனையில் இத்தோல்பாவைக் கூத்தானது செல்வாக்கு பெற்றிருந்தது. பின்னர் இக்கலைஞர்கள் பிழைப்புக்காக பல பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

S.MARTIN RAJA AP TAMIL IGCE

**i. தோல்பாவைக் கூத்திற்கான கதையை தெரிவு செய்யும் முறை**

1. பாவை என்பது அழகிய பொம்மையாகும். திருமாலின் மோகினி வடிவமே பாவை எனப்படுகிறது. தேவர்களும் அசுரர்களும் அமிழ்தம் கடைந்த பொழுது தோன்றிய நஞ்சை சிவபெருமான் உண்டு அனைவரையும் காப்பாற்றினார். கடைசியில் இருந்த அமிழ்தத்தை உண்ண இருவருமிடையே சண்டை ஏற்படுகிறது. திருமால் பாவை வடிவில் தோன்றி வழங்கிய அமிழ்தத்தை தேவர்களும் முனிவர்களும் வாங்கி உண்டனர். அசுரர்களோ பாவையின் அழகையே பார்த்துக் கொண்டிருந்தார்களாம். அசுரர்களுக்கு அமிழ்தம் தீர்ந்து விடுகிறது. அமிழ்தம் உண்ட தேவர்களும் முனிவர்களும் இளமையோடும் சாகாமலும் வாழ்கின்றனர். அசுரர்களோ நோய்வாய்ப்பட்டு வயது முதிர்ந்து இறந்து போகின்றார்களாம் என்ற கதையை விளக்கி ஆடுகின்ற ஆட்டமே பாவை ஆட்டம் எனப்படும்.

2. கட்டையாலும் தோலாலும் செய்யப்பட்ட பொம்மையை ஆட்டிக் காட்டிக் கதை சொல்வதே பொம்மலாட்டம் எனப்படும். இதுவும் பாவை எனப்படுகிறது.

**ii. கூத்துமுறை**

1. ஓலை அல்லது துணியால் வேயப்பட்ட சிறிய அறையே தோல்பாவைக் கூத்தின் அரங்கமாகும். அறையின் முன்பகுதியில் மெல்லிய வெள்ளைத் திரைச்சீலை கட்டப்பட்டிருக்கும். பாவைகளை இயக்கிக் கூத்தினை நிகழ்த்துபவர் அறையின் உள்ளே இருப்பார். அரங்கின் உள்ளே உள்ள வெண்திரையை ஒட்டி ஆட்டப்படும். அப்போது பாவைகளின் மீது விளக்கின் ஒளி பாயும் போது பார்வையாளர்களுக்கு பாவைகள் தெளிவாகத் தெரியும்.

2. பார்வையாளர்கள் மண் தரையில் அமர்ந்திருப்பர். கூத்தரங்கின் முன்பகுதியில் இசைக்கருவிகளை இசைப்பவர்களும் பின்பாட்டு பாடுபவர்களும் அமர்ந்திருப்பர்.

3. பாவைக் கூத்தானது குடும்பமாக நடத்தப்படுகிறது. அவர்களே கூத்தை நடத்தி பலகுரலில் பேசிபவர்களாகவும் இசைக்கருவிகளை வாசிப்பவர்களாகவும் உள்ளனர்.

4. இவர்கள் சொந்த ஊர்களிலிருந்து கிளம்பி ஆறு மாதங்கள் முடிந்த பின்னரே வீடு திரும்புகின்றனர். இவர்கள் நாடோடிக் கலைஞர்களாகக் கருதப்படுகின்றனர்.

**32. தமிழர்களின் சிலம்பாட்டம் குறித்து விளக்குக?**

- சிலம்பம் என்பது தமிழர்களின் தற்காப்பு கலையாகவும் வீர விளையாட்டுகளுள் ஒன்றாகும். இது தடியடி எனப்படுகிறது. பேச்சு வழக்கில் சிலம்ப விளையாட்டு 'கம்பு சுற்றுதல்' எனப்படுகிறது.
- தடியை கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்து கொள்ளுதல் என பல கூறுகளை உள்ளடக்கியதே தற்காப்பு கலை ஆகும்.
- எதிராளி வீசுகின்ற கம்பினைத் தடுத்தல், எதிராளி மீது சிலம்பினால் தொடுதல் என்பதே சிலம்பாட்டத்தில் தொடு புள்ளி போன்ற அடிப்படைகளாகக் கொள்ளப்படுகிறது.
- சிலம்பம் கற்றுக்கொள்வதற்கு குறைந்தது ஆறு மாதங்கள் தேவைப்படுகிறது. தமிழகத்தில் சிலம்பம் கற்றுத் தருவதற்கு பல பல்கலைக்கழகங்கள் உள்ளன.
- சிலம்பாட்டம் ஆடுவதற்கு குறைந்தது இருவர் தேவை. நன்கு பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களே சிலம்பாட்டப் போட்டிகளில் விளையாடுவர். இன்றைக்கு ஆண்கள், பெண்கள் இருவருமே சிலம்பம் கற்று விளையாடி வருகின்றனர்.
- கோயில் திருவிழாக்கள், ஊர்வலங்களில் சிலம்பாட்டம் முக்கிய இடம்பெறுகிறது. திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாக்குமரி போன்ற மாவட்டங்களில் சிலம்பாட்டம் பெருமளவில் நடத்தப்படுகிறது.

**i. சிலம்பாட்ட வரலாறு**

- ஆதிமனிதன் தன்னை சிங்கம், புலி போன்ற விலங்குகளிடமிருந்து தற்காத்து கொள்ள கையாண்ட முறையே சிலம்பம் எனப்படுகிறது. மேலும் ஈட்டி,
- தமிழர்கள் கம்பையே ஆயுதமாகக் கொண்டு போராடப் பயன்டுத்தி உள்ளனர். இதுவே பிற்காலங்களில் சிலம்புக்கலையாக வளர்ச்சி பெறுகிறது.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**ii. சிலம்பாட்டத்தில் ஆயுதப்பிரிவுகள்**

ஒத்தைச் சுவடு, பிரிவு சுவடு, ரெட்டு வீச்சு, பூட்டுப்பரிவு, மடு சிரமம், எடுத்தெறிதல், நெடுங்கம்படி, கோபட்டா, வாள் வீச்சு, பிச்சுவா, சுருள்பட்டா, லேசம், செண்டாயுதம், வளரி, இடிகட்டை, கட்டாரி, கண்டக்கோடாரி, வீச்சரிவாள், வெட்டரிவாள், கல்துணி

**iii. சிலம்பப் போட்டிகள்**

சிலம்பாட்டமானது தனி ஒருவராகவோ அல்லது இருவராகவோ அல்லது பலருடனோ ஆடப்படுகிறது. தனி ஒருவர் ஆடிக்காட்டுவது 'தனிச்சுற்று' எனப்படும். இருவர் போட்டியிட்டு விளையாடுவதற்கு பெயர் தற்காப்புக்கலை எனப்படும்.

**iv. சிலம்பக்கலை பயிற்றுவிக்கும் முறை**

இந்தியாவில் தமிழ்நாடு, கேரளாவிலும் இலங்கை, மலேசியா, பிரான்சு, கனடா போன்ற நாடுகளிலும் சிலம்பம் பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு சிலம்பத்தைப் பள்ளி விளையாட்டாக அறிவித்துள்ளது.

1. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அங்கீகாரத்துடன் வெங்காடம்பட்டி சமுதாயக் கல்லூரியில் சிலம்பம் பட்டயப்படிப்பாக (Diploma Certificate Course) நடத்தப்படுகிறது.

2. பாளைங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சி கல்லூரியின் நாட்டார் வரலாற்றியல் ஆய்வு மையம், தென்பாண்டி தமிழரின் ‘சிலம்ப வரலாறும் அடிமுறைகளும்’ என்ற நூலை வெளியிட்டுள்ளது.

**v. *சிலம்பாட்டத்தின் பயன்கள்***

*சிறந்த உடற்பயிற்சிக்கானது சிலம்பாட்டம். கம்பு சுற்றும் போது உடம்பிலுள்ள ஒவ்வொரு நாடி நரம்பும் தசைகளும் இயக்கப்படுகின்றன. தன்னை சுற்றி வேலி போன்ற அமைப்பை உருவாக்கிட முடியும். எதிரி வேறு ஆயுதங்களை கொண்டு தாக்கினாலும் அதனை கம்பால் தடுத்திட முடியும். உடலின் வலிமை, ஆற்றல், விரைவுத்திறன், உடல் நெகிழ்வுத்தன்மை ஆகியனவற்றை அடைய சிலம்ப பயிற்சி உதவுகிறது.*

**8. வளரி பற்றி விளக்குக?**

வளரி என்பது ஓடித் தப்பிப்பவர்களை பிடிப்பதற்கும் கால்நடைகளை திருடிச்செல்லும் திருடர்களை பிடிப்பதற்கும் பண்டைய தமிழர்கள் பயன்படுத்திய வளைதடி போன்ற ஆயுதமாகும். இதனை ஒத்த ஆயுதங்களை வளைதடி, திகிரி, பாறாவனை, சுழல்படை, கள்ளர்தடி, படைவட்டம் என அழைக்கப்படுகின்றன.

**i. வளரியின் அமைப்பு**

- ஆஸ்திரேலிய ஆதிவாசிகளால் பயன்படுத்தப்பட்ட பூமராங் வகை ஆயுத வடிவமைப்பை உடையதாகும்.
- பூமராங் என்பது எறிந்தவனுக்கே திரும்பி வந்துவிடும். ஆனால் தமிழர்கள் பயன்படுத்திய வளரி பூமராங் போன்றது அல்ல. வளரி பல்வேறு அமைப்பில் அமைந்திருக்கும்.
- சாதாரணமாக வளைந்த மரத்தில் இருந்து செய்யப்பட்ட துண்டாகும். சில வளரிகளின் விளிம்புகள் பட்டையாகக் கூறாக இருக்கும்.
- ஓடுபவர்களை உயிருடன் பிடிக்க மரத்தால் ஆன வளரியைப் பயன்படுத்துவர்.
- கால்களுக்கு குறிவைத்து சுழற்றி விசிறி வீசி விடவேண்டும். பட்டையான கூரான வளரியை வீசினால் சுழன்று கொண்டே சென்று வெட்டுப்படக்கூடிய இலக்காக இருந்தால் சீவித்தள்ளிவிடும்.

**ii. வளரி எறியப்படும் முறைகள்**

- வளரிகள் குறி வைத்து எறிவதற்குப் பல முறைகள் உண்டு. பொதுவாக வளரிகள் சுழற்றப்பட்டே எறியப்படும். இப்படி எறிப்படுகின்ற வளரியானது செங்குத்தாக அல்லது கிடை மட்டமாக சுழலும் அல்லது சுழலாமலே செல்லக்கூடும். அதன் சுழற்சி வேகத்தில் தங்கியுள்ளது.
- ஒருவரின் கழுத்தைக் குறிவைத்து எறியப்படும் போது உயிரை எடுத்துவிடும். வளரியானது பொதுவாக கால்களை தாக்குதவற்கே எறியப்படும்.

**iii. வளரியின் பயன்கள்**

- மான் வேட்டைக்கு வளரி பயன்படுத்தப்படுகிறது.
- பண்டைய தமிழர்கள் போருக்கு பயன்படுத்தியுள்ளனர்.
- தமிழ்நாட்டில் சிவகங்கை, பட்டுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன.
- சிவகங்கையில் ஆட்சியிலிருந்த மருது சகோதரர்கள் மற்றும் அவர்களது படைத்தளபதிகள் வைத்திலிங்க தொண்டைமான் ஆகியோர் வளரியை ஆயுதமாகக் கொண்டு ஆங்கிலேயர்களுடன் சண்டையிட்டுள்ளனர்.
- கள்ளர்கள், மறவர்கள், வலையர்கள் வேட்டைக்கருவியாக வளரியை பயன்படுத்தியுள்ளனர்.
- நாட்டார் கள்ளர்கள் திருமணத்தின் போது இருவீட்டார்களும் அவர்களின் பண்பாட்டின் அடையாளமாக வளரியை மாற்றிக் கொள்ளும் வழக்கமும் காணப்படுகிறது. வளரியை அனுப்பி மணமகளை அழைத்து வருங்கள் என்று கூறப்படுகிறது.

- புதுக்கோட்டை மன்னர்கள் எப்போதும் தங்களது ஆயுதக் கிடங்கில் வளரியை ஆயுதங்களை இருப்பு வைத்திருந்தனர்.

**9. புலியாட்டம் என்றால் என்ன?**

- புலி வேடமிட்டு ஆடப்படுகின்ற ஆட்டம் புலியாட்டம் ஆகும். வரிப்புலியை போல் மஞ்சள், கறுப்பு, இளஞ்சிவப்பு வண்ணங்களை கொண்டு உடலில் பூசி வேடமிட்டுக்கொள்வர். புலி முகமூடி, புலிக்காது, புலிவால், புலி நகங்கள் ஆகியவற்றை அணிந்து கொண்டு காலில் சலங்கையும் கட்டியிருப்பர்.
- புலி ஆட்டமென்பது தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் போன்ற பிற மாநிலங்களிலும் ஆடப்படுகிறது.
- புலி ஆட்டத்தை ஒத்தது, கரடி ஆட்டம், மாடு ஆட்டம், கிளி ஆட்டம் போன்றவை.
- புலி ஆட்டமானது பரணி என்ற பெயரில் கார்த்திகை ஒளி விளக்குத் திருநாளுக்கு முதல் நாளில் (பரணி நாளில்) விளையாடுவர்.
- புலியின் நீண்ட வாலினை பிடித்துக் கொண்டு அங்குமிங்கும் ஓட விளையாடுவதால் இது நாட்டுப்புற விளையாட்டாகும்.

**33. தமிழர்களின் விளையாட்டை வகைப்படுத்தி விளக்குக.**

தமிழர்கள் தொன்றுதொட்டு விளையாடி வருகின்ற விளையாட்டுகள் தமிழர்களின் விளையாட்டுகள் ஆகும். குறிப்பாக தமிழர்களின் விளையாட்டுகள் தென்னிந்தியாவை சார்ந்தவையாகும்.

**i. உலகம் முழுவதும் விளையாடப்படும் விளையாட்டுகள் - 6**

S.MARTIN RAJA. AP. TAMIL. IGCE

1. **புனல் விளையாட்டு :** புனல் என்றால் ஓடும் நீர் (நல்ல நீர்) என்று பொருள். இவ்விளையாட்டுக்கு ஆற்று நீர் என்றும் பெயருண்டு. புனல் விளையாட்டு பற்றி சங்க இலக்கியங்களிலும் பல சான்றுகள் காணப்படுகின்றன.
2. **பொழில் விளையாட்டு :** நகரவாணர், இளவேனிற் காலத்தில் ஊருக்கு சற்று தொலைவிலுள்ள சோலைக்கு சென்று தனித்தனியாகவும் கூட்டங்கூட்டமாகவும் ஒரு பகல் சமைத்து உண்டு மகிழும் விழா பொழில் விளையாட்டு எனப்படுகிறது.
3. **பந்தாட்டம் :** கால் பந்து, கூடைப்பந்து, மட்டைப்பந்து போன்றவை.
4. **மல்லாடல் :** இவ்விளையாட்டு தமிழில் மற்போர் எனப்படுகிறது. மல் என்றால் வலிமை என்று பொருள். தமிழ் இலக்கியங்களில் மல்லாடல் என்ற சொல் வருகின்றது. ஓர் அரங்க கலையாக சொல்லித்தரப்படுகிறது. ஒலிம்பிக் விளையாட்டாக திகழ்கிறது.
5. **கழைக் கூத்து :** கம்பியின் மீது நடக்கின்ற விளையாட்டு ஆகும்.
6. **வல்லாட்டம் :** இருவர் விளையாடும் ஒரு பலகை விளையாட்டு வல்லாட்டம் அல்லது வல்லுப்போர் எனப்படுகிறது. சங்க கால பலகை விளையாட்டுகளில் ஒன்றாக வல்லு விளையாட்டு திகழ்கிறது. இது சதுரங்க விளையாட்டின் தாய் ஆகும். பழந்தமிழர்கள் பொது மன்றங்களில் ஆடும் விளையாட்டு வல்லாட்டம் எனப்படுகிறது. தமிழர்களின் சதுரங்கம் (Chess of the Tamils) என்றழைக்கப்படுகிறது. சங்க இலக்கியங்களில் வல்லாட்டத்திற்கு சான்றுகள் காணப்படுகின்றன. இவ்விளையாட்டு கி.மு.3 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தோன்றியதாகும்.

**ii. வெளிக்கள விளையாட்டுக்கள்**

| | |
|---|---|
| ஓணப்பந்து விளையாட்டு | எட்டுக்கோடு |
| கிட்டிப் புள்ளு | வழுக்கு மரம் எறுதல் |

| | |
|---|---|
| கிளித்தட்டு, தாச்சி | கயிறு இழுத்தல் |
| சடுகுடு/கபடி | முட்டி உடைத்தல்/உறியடி |
| பாரிவேட்டை | கீச்சு மச்சுத் தம்பலம் |
| சங்கீதக் கதிரை | போளையடி |
| கிளி கோடு பாய்தல் | வெள்ளமடித்தல் |
| போர்த்தேங்காய் | சிற்றில், வீடு கட்டி விளையாடுதல் |
| பல்லாங்குழி | கயிறடித்தல் |
| ஒப்பு | கப்பல் விடுதல் |
| இரட்டை மாட்டுப் பந்தயம் | தோணி விடுதல் |
| மோடி விளையாட்டு கண்ணாமூச்சி | குலை குலையாய் முந்திரிக்காய் |
| குழை எடு | தேர்கட்டி விளையாட்டு |
| பேணி அடித்தல் | உப்பு மூட்டை |
| பேணிப்பந்து | எறி பந்து |
| தகரப்பந்து | தும்பி விளையாட்டு |
| அம்பெறிதல் | தொப்ப விளையாட்டு எல்லே எல்லே |
| கோழிச்சண்டை வண்டிச்சவாரி | ஆடு வீடு ஊஞ்சல் |
| சில்லிக்கோடு | தணையடி அடி |
| இளவட்டக் கல் | புளியடி புளியடி |
| சாக்கு ஓட்டம் | ஒப்பு விளையாட்டு |
| பளிச்சல் | மரமேறல் |
| தலையணைச் சண்டை கள்ளன் | நீந்தல் |
| காவலன் பச்சைக் குதிரை | ஆறுதல் ஈருருளி ஓட்டம் |
| காற்றாடி | கயிறு பாய்தல் |
| எலியும் பூனையும் தட்டா மாலை | சமநிலை பேணுதல் கிடுகு பின்னுதல் |
| சில்லுக் கோடு | ஊசி நூல் கோர்த்தல் |
| கொழுக்கட்டை | மரம் ஏறுதல் |
| பட்டம் | தேங்காய் துருவுதல் |
| பூசணிக்காய் விளையாட்டு ஓடிப் பிடித்தல் | தட்டாங்கல் |
| அடிச்சுப் பிடித்தல் | பாட்டி பேத்தி அல்லி மல்லி தாமரை |
| ஒளித்துப் பிடித்தல் | வீடு கட்டல் |
| கண்கட்டிப் பிடித்தல் | வளையல் விளையாட்டு |
| கண் பொத்தி விளையாட்டு | ஊஞ்சல் |
| கண்கட்டி ஓட்டம் | சோளக்கதிர் |
| கயிறு பாய்தல் | ஊஞ்சல் |
| சமநிலை பேணுதல் கிடுகு பின்னுதல் | சோளக்கதிர் |
| ஊசி நூல் கோர்த்தல் | சிறுவீடு |
| மரம் ஏறுதல் | குத்து விளையாட்டு |
| தேங்காய் துருவுதல் | குண்டு விளையாட்டு |
| தட்டாங்கல் | வண்டியுருட்டுதல் பூச்சி விளையாட்டு |
| பாட்டி பேத்தி அல்லி மல்லி தாமரை | மரங்கொத்தி விளையாட்டு |
| வீடு கட்டல் | வளையல் விளையாட்டு |

**iii. உள்ளக விளையாட்டுக்கள்**

| | |
|---|---|
| தாயக் கட்டை | சங்கு சக்கரம் |
| சொக்கட்டான் | பருப்புக்கட |

| | |
|---|---|
| கொக்கான் பல்லாங்குழி | கிச்சு கிச்சு தாம்பலம் |
| ஆடும் புலியும் | ஒந்தையா, ரெட்டையா! கைத் துடுப்பாட்டம் |
| பாம்பும் ஏணியும் | கரகர வண்டி |
| பாண்டி | சீதைப் பாண்டி |
| பம்பரம் | ஒருகுடம் தண்ணி ஊத்தி |
| ஆடுபுலி ஆட்டம் | குலைகுலையா முந்திரிக்காய் |
| மூன்றுகல் ஆட்டம் | கால்தூக்கிக் கணக்குப் பின்னை |
| செப்புசாமான் | நொண்டி |
| உப்புத் தூக்கள் | தத்தைக்கா.. |
| கூட்டாஞ்சோறாக்க | |

### iv. ஆடவர்கள் விளையாட்டுக்கள்

பெரும்பாலும் ஆண்கள் விரும்பி விளையாடுகின்ற விளையாட்டுகள் புறவிளையாட்டுகள் எனப்படும்.

| | |
|---|---|
| ஜல்லிக்கட்டு | உரியாம் எறுதல் |
| பாரிவேட்டை | பானை உடைத்தல் |
| சிலம்பம் | உறிப்பானை விளையாட்டு குதுதாயம் |
| புலிவேடம் சடுகுடு | வாய்ப்புநிலை விளையாட்டுகள் |
| இளவட்டக்கல் | அறிவுத் திறன் விளையாட்டுகள் |
| ஓட்டம் | மோடி விளையாட்டு |
| இரட்டை மாட்டுப் பந்தயம் | |

### v. மகளிர் விளையாட்டுக்கள்

மகளிர் விளையாட்டுகள் பெரும்பாலும் அக விளையாட்டுகளாகவே மகளிர் விளையாட்டுகள் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| தாயம் | பல்லாங்குழி | தட்டாங்கல் | மஞ்சள் நீர் தெளித்தல் |

### vi. சிறுவர், சிறுமியர் விளையாட்டுக்கள்

சிறுவர், சிறுமியர் சேர்ந்து விளையாடுகின்ற விளையாட்டுகளாவன

| | | | |
|---|---|---|---|
| எலியும் பூனையும் | சோளக்கதிர் | சிறுவீடு | குலைகுலையாய் முந்திரிக்காய் |

### vii. சிறுவர் விளையாட்டுக்கள்

சிறுவரின் முக்கிய விளையாட்டுகளாவன

| | |
|---|---|
| கிட்டிப்புள் | காற்றாடி |
| குத்து விளையாட்டு பச்சைக் குதிரை | பட்டம் |
| குத்துப் பம்பரம் | வண்டியுருட்டுதல் |

| | |
|---|---|
| குண்டு விளையாட்டு | பூச்சி விளையாட்டு |
| எறிபந்து | மரங்கொத்தி |

**viii. சிறுமியர் விளையாட்டுக்கள்**

சிறுமியரின் முக்கிய விளையாட்டுகளாவன

| | |
|---|---|
| சில்லி | கண்கட்டி விளையாடுதல் மலையிலே தீப்பிடிக்குது |
| சோற்றுப்பானை | தாயம் |
| கும்மி | பல்லாங்குழி |
| திரிதிரி | தட்டாங்கல் |

**ix. குழந்தை விளையாட்டுகள்**

1. **உச்சரிப்பு விளையாட்டு**
2. **விளா விடைச் சங்கிலி**
3. **பருப்புக் கடைதல்**

ஆகியன கிராமபுற குழந்தைகள் பங்கு பெறும் முக்கிய விளையாட்டுகள் ஆகும்.

1. **பந்து :** பழங்காலத்தில் ஆண்கள் தேங்காய் நார், பஞ்சு, சிறிய அளவிலான இரும்பு களிமண் முதலியவற்றில் ஆடினர். பெண்கள் பூக்களைக் கொண்டு ஆடினர். குதிரையில் பயணம் செய்தும் பந்து விளையாடினர். இப்போது விளையாடும் போலோ என்கிற விளையாட்டு இந்த வகையைச் சார்ந்தது.
2. **அசதியாடல் :** ஒருவரை ஒருவர் பரிகாசம் செய்து விளையாடுவது
3. **அம்மானை :** பெண்கள் குழுக்களாக வினா, விடைகளை பாடல்களாகப் பாடப்படுவது அம்மானை. பாடலின் முடிவில் அம்மானை என்ற சொல் இடம் பெற வேண்டும்.
4. **ஊஞ்சல் :** ஊஞ்சல் விளையாட்டு, ஆலம் விழுது முதல் அம்பொன் வரை விளையாட்டுக் கருவிகளாக பயன்பட்டன.
5. **கழங்கு :** ஒரு காயைத் தூக்கி போட்டு பிடித்தாடும் ஆட்டம், புளியங்காய், சிறு கற்கள் முதலியன கொண்டு ஆடப்படுவது. கூழாங்கற்களைத்தூக்கி போட்டு பிடித்தாடும் ஆட்டம் 5,7,9,11 கற்களை பயனபடுத்துவர்.
6. **கண் புதைந்து ஆடுதல் :** இன்று கண்ணாமூச்சி என்று இவ்விளையாட்டு அழைக்கப்படுகிறது.
7. **கறங்கு :** கறங்கு என்றால் சுழற்சி. பனை ஓலையை சீவி வெட்டி காற்றாடி போல செய்து காற்று வரும் திசையை நோக்கி ஓடினால் விசிறியைப் போல சுழற்றிக் கொண்டு விளையாடுவது.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**x. குரவை என்றால் என்ன? அவற்றின் வகைகளை குறிப்பிடுக?**

பெண்கள் வட்டமாக கை கோர்த்து பாடி ஆடுவது குரவை எனப்படும்.

1. **சிறு சோறாக்கல் :** கூட்டாஞ் சோறு ஆக்கல்
2. **சிற்றில் செய்தல் :** கடல் அல்லது ஆற்று மணலில் வீடு சுட்டி விளையாடுதல்
3. **வட்டு :** பொருளை உருட்டி விளையாடும் ஆட்டம் ( தாயம் போல)
4. **ஏறுகோள் :** ஜல்லிக்கட்டு
5. **வள்ளை :** உரலில் ஒரு பொருளைக் குத்திக் கொண்டு பாடும் ஒரு விளையாட்டு

**6.** **சதவி :** பட்டம் விளையாடுதல் போன்ற ஒரு விளையாட்டு

## அலகு - 4

# தமிழர்களின் திணைக்கோட்பாடுகள்

**34. சங்க இலக்கியத்தில் தாவரங்கள் குறித்த செய்திகளை விவரித்து எழுதுக.**

- பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் சான்று அளிக்கின்றன. காடு, மலை, கடல், விலங்கு, பறவை, வானம் என இயற்கையின் அனைத்து நிலைகளையும் ஆராய்ந்து அறிந்து வாழ்ந்துள்ளனர்.
- 19ஆம் நூற்றாண்டில் மேலைநாட்டு அறிஞர்களின் உயிர்க்கொள்கை தாவரம் சார்ந்த கொள்கைகளை பதிவு செய்துள்ளனர்.
- ஆனால் 5000 ஆண்டுகளுக்கும் முன்பே இலக்கண, இலக்கியங்களின் மூலமாக அறிவியல் சிந்தனைகளை தமிழர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.
- என்று தொல்காப்பியர் உயிர்களை அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்துகின்றார்.
- கரோலஸ் லின்னேயஸ் என்பவர் உலக உயிர்களை இரண்டாகப் பிரிக்கிறார். 1. தாவர உலகம் 2. விலங்கு உலகம்.
- தொல்காப்பியர் ஓரறிவு உள்ள உயிர்களை தாவர உலகம் என்றும் ஏனைய நான்கு உயிர்களையும் விலங்கு உலகம் என்கிறார்.
- மெய் (உடல் - உயிர்), வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களின் அறிவுகளை வைத்து உயிர்களை வகைப்படுத்துகின்றார் தொல்காப்பியர்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

| வ. எண் | தொல்காப்பியர் | வ. எண் | மேலைநாட்டு அறிஞர்கள் |
|---|---|---|---|
| 1. | மனிதனை தவிர்த்து ஏனைய உயிர்களை அல்திணை என்கிறார். | 1. | ஹிப்போகிரேட்டஸ், அரிஸ்டாட்டில், தியோஃபரஸ்டஸீம், ப்ளைனி த எல்டர், ஜான்ரே, கரோலஸ் லின்னேயஸ், அகஸ்டின் பாரமஸ்டின் கண்டோல் முதலியோர் உயிரினங்கள் மற்றும் தாவரத்தின் வகைப்பாடுகள் தொடர்பாக விதியை உருவாக்கினர். |
| 2. | மனிதின் புலன் அறிவை வைத்துப் பேசுகிறார். | 2. | உயிர் இயங்குதல் அல்லது திசுக்களின் அடிப்படையில் பிரிக்கின்றனர். |
| 3. | | 3. | 19 ஆம் நூற்றாண்டில் வார்மிங் என்பவர், நீர்வாழ்தாவரங்கள், இடைநிலைத் தாவரங்கள், வறல்நிலத் தாவரங்கள் என்று மூன்றாகப் பிரிக்கின்றனர். தாவரங்கள் வளரும் இடம், சூழல் வைத்துப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரிக்கப்படுகிறது. |
| 4. | தமிழில் இத்தகு செயல்முறை அறிவியல் வளர்ச்சி இல்லை | 4. | 18 ஆம் நூற்றாண்டில் நுண்ணோக்கிக் கருவி கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாகத் தாவரங்கள் இனப்பெருக்க உறுப்பு அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டது. |
| 5. | தமிழில் 1. தகட்டுத்தாவரங்கள் 2. பாசத்தாவரங்கள் 3. குழாய்த்தாவரங்கள் | 5. | 1. தாலோபைட்டா 2. பிரையோபட்டா 3. டெரிடோபைட்டா |
| 6. | குழாய்த்தாவரங்கள்: புல், மரம், செடி, கொடி | 6. | விதை மூடிய தாவரங்கள் - ஆஞ்சியோஸ்பெர்ம், விதை மூடாதத் தாவரங்கள் - ஜிம்னோஸ்பெர்ம் (குளிர் பிரதேசங்களில் மட்டுமே வளரும்) |
| 7. | 5000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இவர் தாவரங்களை ஓரறிவு உடையது என்கின்றார். | 7. | |
| 8. | 'புல்லும் மரனும் ஓரறிவு வினவே' என்றும் புல், மரம் இரண்டுமே தாவரத்தை குறிப்பவை என்கின்றார். | 8. | |
| 9. | புறக்காழ் உடையது - புல்<br>அகக்காழ் உடையது - மரம்<br>காழ் என்றால் மரத்தின் நடுப்பகுதியில் உள்ள வைரம் பாய்ந்த பகுதியை குறிப்பவை. | 9. | |

**புல்லின வகைத் தாவரத்தின் உறுப்புகள்:**

1. தோடு
2. மடல்
3. ஓலை
4. ஏடு
5. இதழ்
6. பாளை (பூ - உறுப்பு)
7. ஈர்க்கு (இலையின் நடுவிலுள்ள நரம்புகள்)
8. குலை (பழம் கொத்துக் கொத்தாக)

**அகவயிர்ப்புடைய மர வகைத் தாவரத்தின் உறுப்புகள்:**

1. இலை
2. முறி
3. தளிர்
4. தோடு
5. சினை
6. குழை
7. பூ
8. அரும்பு
9. நனை

**புல்லினத்திற்கும் மரயினத்திற்கும் பொதுவான உறுப்புகள்:**

1. காய் 2. பழம் 3. தோல் 4. செதில் 5. வீழ்

- தென்னை மரமும் (தேங்காய்) பாக்கு மரமும் (கமுகு - கமுகங்காய்) - புல்வகையை சார்ந்தவை.
- பனை - புல் வகையை சார்ந்தவை

- வேம்பு - மர வகையை சார்ந்தவை - இரண்டிற்கும் பொதுவான பெயர்கள் பனந்தோல் - வேப்பந்தோல் - பனஞ்செதில் - வேப்பஞ்செதில்.
- தமிழில் தாவரங்கள் வளரும் இயல்பின் அடிப்படையில் வகைப்படுத்துகின்றார்.

1. மரத்தாவரம் - மரத்தில் பூக்கக்கூடியது - கோட்டுப்பூ, கொடிப்பூ, செடி
2. நிலத்தாவரம்
3. கொடித்தாவரம்
4. நீர்த்தாவரம் - புல்லினங்களில் பூக்கக்கூடியது - நிலப்பூ, நீர்ப்பூ

**கோங்கமரம்**

கோங்க மரத்தின் பூந்தாதினைக் குறிப்பிடும்பொழுது அகநானூற்றுப் பாடலொன்று

**'சினைப் பூங் கோங்கின் நுண் தாது' (அகம் - 25-10)**

என்கிறது. சினை என்பது மரத்தாவரத்தின் உறுப்புப்பெயர் வண்டுகள் கூம்பும் இயல்பினை உடைய நீர்ப்பூக்களில் இருந்து விலகி மரத்தின் பூக்களைப் போய் சேர்ந்தன என்ற செய்தியை அகநானூறு,

**'வண்டினம் சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர' (அகம். 71-4)**

என்று குறிப்பிடுகிறது. புதலில் பூக்கள் பூத்திருந்ததைப் புறநானூற்று பாடலொன்று,

**'வயலகம் நிறைய புதல்பூ மலர' (புறம் - 117-3)** என்று குறிப்பிடுகிறது.

**சங்க இலக்கியங்களில் தாவரங்களின் வகைகள்:**

- மரம், கொடி, புதல், செடி, பூண்டு, பயிர், நீர்த்தாவரம், புல், பாசி, காளான், நார், புலன், உணர்வுத் தாவரங்கள் எனப்படும்.
- பொதுவாக, மரங்கள் அதன் வளரும் தன்மையை பொறுத்து எடுத்தாளப்படுகிறது. மரம் என்ற சொல் - திராவிட மொழிகளில் மரம், மரனு, மர, மேன், மர்ம், மாஜ், மக் என்ற சொற்கள் ஒரே பொருளை உணர்த்துகிறது. இங்கு சொல் மட்டுமே ஒலித்திரிபு ஏற்பட்டிருக்கிறது. தமிழர்களின் மிகப்பழமையான வழிபாட்டு குறியீடுகளில் ஒன்றாக மரம் இருந்துள்ளது.

S.MARTIN RAJA AP, TAMIL, JGCE

**சங்க இலக்கியங்களில் மரம்**

- வாவல் பழுமரம் (குறுந்தொகை - 172)
- காடே நிழல் கவின் அழல் கவர் மரத்த (நற்.256)
- மரம் தலை மணந்த நனைந்தலை கானத்து (நற்.246)
- பராரை (அகம்.69) வலிமையுடைய வைரம் பாய்ந்த மரமென்று அகநானூறு குறிப்பிடுகிறது.
- மீமிசைச் சாந்து (நற்.1) மரம் என்பது நீண்டு வளரக்கூடியது என்று பொருள்
- வான் பொரு நெடுஞ்சினை (நற்.3) மரம் நீண்டநாட்கள் வளரக்கூடியது என்கிறது.
- தொல் மூதாலம் (குறுந்தொகை.15)
- வெளிறு இல் காழ்வேலம் (நற்.302)
- நறுங்காழ் ஆரம் (நற்.5) சந்தன மரம் எனப்படுகிறது.
- முளிவெதிர் நோன்காழ் (குறுந்தொகை.304) புறக்காழ் உடைய புல்லின் வகைகளுள் ஒன்று மூங்கிலை குறிப்பிடுகிறது.

**அரைப்புல்லிருவி:** குறுந்தொகை அரைப்புல்லுருவி என சந்தனத்தைக் குறிப்பிடுகிறது. இது தனக்குரிய உணவைத் தயாரித்துக் கொண்டு மீதமுள்ள உணவுக்கு ஏனைய தாவரங்களிலிருந்து எடுத்துக் கொள்கிறது.

**புல்லுருவி வகை என்பது,** இது தனக்குரிய உணவை தானே தயாரித்துக் கொள்கின்ற ஆற்றல் இல்லாமல் பிற தாவரங்கள் அல்லது பிற உயிர்களை சார்ந்து அவற்றிலிருந்து உணவை பெற்றுக் கொள்கிறது. இதை புல்லுருவி அல்லது சாருண்ணி என்று அழைப்பர்.

**சங்க இலக்கியங்களில் வரும் கொடி வகைகள்**

- கொடிகள் நீண்டு கூடியவை.
- தானாக தனித்து நிற்க முடியாமல் பிறவற்றை சார்ந்து பற்றிக் கொண்டு வளரும்.
- கொடியின் தண்டு மிக மென்மையானவை. கயிறு போன்றது.

**கொடியின் வகைகள் - 5**

1. வேர்க்கொடி
2. படர்க்கொடி
3. பற்றுக் கம்பிக்கொடி
4. சுற்றுக்கொடி
5. பெருங்கொடி

1. நுண்கொடி: கொடியின் மெலிந்த தன்மையை குறிப்பிடுமிடத்து, அகநானூறு, (அகம்.237)
2. புன்கொடி (மலைபடுகடாம்.101)
3. மென்கொடி (குறுந்தொகை.186)

(2–3) தண்டின் தடித்த (பருத்த) தன்மை குறிப்பிடுகிறது.

4. பரூக்கொடி (மலைபடு. 216)
5. வெண்கொடி (ஐங்.456)
6. கருங்கொடி (மலைபடு. 521)
7. செங்கொடி (ஐங்.25)
8. பைங்கொடி (பெரும்பாண.337)

(4–8) கொடியின் நிறத்தைக் குறிக்கிறது.

9. நறுங்கொடி தாமலம் (நற்.292) - மணம் வீசுவதை குறிக்கிறது.
10. கொடிப்பீரம் (ஐங்.464)
11. இவர்ந்த அதர்கொடி அதிரம் (அகம்.159)
12. இவர்ந்த பைங்கொடி (குறுந்தொகை.240)
13. தவழ்கொடி (கலித்தொகை. 102)
14. நெடுங்கண் ஆரத்து அலங்குசினை
    வலந்த பசுங்கேழ் இலைய நறுங்கொடி தமாலம் (நற்.292)
15. குறவர் கொன்ற குறைக்கொடி நறைப்பவர்
    நறுங்காழ் ஆரம் சுற்றுவன (நற்.5)

(10–15) படரும் இயல்பினை உடைய கொடிகள் ஆங்கிலத்தில் 'கிரீப்பர்' ஏறுகொடி என்பது ஆங்கிலத்தில் 'கிளைம்பர்' என்பர். கொடிக்கு 'பவர்' என்ற பெயருமுண்டு.

**செடி வகைகள்**

- செடி என்றால் புதல் எனப்படும். நிலத்தில் புதர், புதராய் மண்டி வளர்ந்திருப்பவை. சிறிய செடிகளையும் குறுகிய மரங்களையும் செடி வகைகளையும் சார்ந்தவை.
- செடியை அதன் வாழ்நாளின் அடிப்படையில் மூன்றாகப் பிரிப்பர்.

1. ஒரு பருவச் செடிகள்:
2. இருபருவச் செடிகள்
3. பலபருவச் செடிகள்

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**35. தமிழர்கள் வாழ்வியலில் விலங்குகள் எவ்வாறு பங்கு பெறுகிறது விளக்குக.**

- தமிழர்களை போலவே உலக நாடுகளிலும் விலங்குகள் குறித்த சிந்தித்து வந்துள்ளனர். குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்பதற்கு பல அறிவியல் உண்மைகள் நிறுவப்பட்டுள்ளன. Zoology என்னும் கிரேக்கச் சொல்லுக்கு விலங்கியலை குறிக்கிறது. ஐரோப்பிய நாடுகளிலும் விலங்கியலை குறிக்க Zoology என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.
- சிந்து சமவெளி நாகரிகத்திலிருந்து விலங்கின் வடிவங்களும் முத்திரைகளும் கிடைக்கின்றன. பழந்தமிழர்களும் விலங்குகள் குறித்து நுட்பமாகச் சிந்தித்துள்ளனர் என்பதற்கு தொல்காப்பிய மரபியல் சான்றளிக்கிறது.

**1. குரங்குகள் பாம்புகள்**

- விலங்குகளில் இருந்து பல பழமொழிகள் தோன்றியுள்ளன. பாம்புகள் என்றால் படையும் நடுங்கும் என்பர். குரங்கிலிருந்துதான் மனிதன் தோன்றினான் என்றும் கூறுவர்.
- பொதுவாக குரங்குகளுக்கு பாம்பை கண்டால் அச்சம். மலைப்பாம்புகள் ஆலமரத்தின் விழுதுகளை போன்று தொங்கி குரங்குகளை பிடித்து உண்ணும் என்பர். இதனால் குரங்குகளுக்கு பாம்பைக் கண்டால் அச்சமும் நடுக்கமும் ஏற்படுகின்றன. இதனை, சிறுபாணாற்றுப்படை பாடலொன்று,

**'பைங்கண் ஊகம் பாம்புபிடித் தன்ன**
**அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்துவீங்கு திவவின்'**

- ஊகக் குரங்கு ஒன்று பாம்பிற்கு பயந்து அஞ்சிப் பாம்பை பிடித்துக் கொண்டு விட்டுவிட்டால் கடித்து விடுமோ என்று அச்சத்தில் பிடியை விடாமல் இருக்கும். இதை உணர்த்துகின்ற சிற்பம் விசயநகர மன்னர்களின் தலைநகரம் அம்பியில் உள்ளது.
- இவ்வாறு இலக்கிய காட்சிகள், செய்திகள், ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் கலைச்சின்னங்களாகவும் தமிழர்கள் வடித்திருப்பது தமிழர்களின் பெருமையை எடுத்துக்காட்டுகிறது.
- குரங்கு பயந்து நடுங்கி பாம்பை இறுக்கமாக பிடித்திருப்பதை குரங்குப்பிடி என்பர்.
- பாம்பை போன்றுள்ள நீண்ட செடியை கண்டு குரங்கு பயந்து துன்புற்றது என்பதை அகநானூற்று பாடலொன்று குறிப்பிடுகிறது.

S. MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**2. சங்க இலக்கியங்களில் விலங்குகளின் தோற்றம்**

- சங்க இலக்கிய பல பாடல்கள் விலங்கின் தோற்ற வடிவத்தை எடுத்துக் கூறுகின்றன.

**1. மான்கள்**

- இரலை, நவ்வி, மரையான் என மூன்று வகை மான்கள் இருந்ததை குறிப்பிடுகின்றன.
- இரலை மான் மிகவும் அழகானது. கருமை நிறமுடையது. கழுத்து கருமையாகவும் அடிப்பகுதி வெண்மையாகவும் இருக்கும். இந்த வெண்மை மற்றும் கருமை நிறமானது ஆண் இரலை மட்டுமே காணப்படும். பெண் இரலை மானுக்கு இந்நிறங்கள் இருப்பதில்லை. என்பதை அகநானூற்று பாடலொன்று,

**'இருங்கேழ் இரலை சேக்கும்பலுயர் பதுக்கை'**

என்பதில் **இருங்கேழ்** என்ற சொல் அழகான இரலை மானின் கருமையைக் குறிக்கிறது.

- கார்காலத்தின் மழைநீரை குடித்து விட்டு ஆண்மான் பிடவ மரத்தின் நிழலில் தனது துணையுடன் தங்கி ஓய்வெடுக்கும் அது மாடு அசைபோடுவது போன்று இருக்கும். அதேபோல ஆண் இரலை மானின் வயிற்றுப்புறம் வெண்மையாகவும் முதுகுப்புறம் கருமையாகவும் இருந்தது என்று அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

**2. பன்றிகள்**

- பெண் காட்டுப்பன்றிக்கு நான்கு மடிக்காம்புகள் இருப்பதையும் தோல் போன்ற முலையொன்று தோற்றமளித்ததையும் விளக்கப்பட்டுள்ளது.

- காட்டுப்பன்றியின் தலை கீழே கவிழ்ந்திருந்தது பார்ப்பதற்கு உரல் போன்று காட்சியளித்தது என்று மதுரைக்காஞ்சியும் புறநானூறும் குறிப்பிடுகிறது.
- பன்றியின் முகத்தை 'வீழ்முகம்' என்றும் உரல் போன்ற தலை என்றும் விளக்கப்பட்டுள்ளது. உரல் ஒருபக்கம் அகன்றும் மறுபக்கம் குவிந்தும் சிறியதாகவும் இருப்பதைபோல காட்டுப் பன்றியின் தலை காணப்படும் என்று உவமையாக சொல்லப்படுகிறது.

**3. புலியும் யானையும்**

- புலியும் யானையும் இயல்பாகவே வலிமை மிக்க விலங்கினங்கள். இவ்விரண்டுமே காட்டில் ஒன்றாக சேர்ந்து இருக்காது. உணவுக்காக ஒன்றுக்கொன்று சண்டைப் போட்டுக் கொள்ளும். சங்க இலக்கியங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன.
- இரவு நேரங்களில் உலாவரும் புலி யானையை எளிதாக தாக்கிக் கொன்றுவிடும். அதேபோல தனியாக வரும் கர்ப்பிணிப் பெண் யானையையும் குட்டியானையையும் புலி தாக்கிக் கொண்டுவிடும் என்பர். ஆனால் புலி யானையை கொள்வது குறைவு.
- சங்க இலக்கிய பாடல்களில் புலியை யானை கொல்வதும், யானையை புலி கொல்வதும், யானையும் புலியும் போரிட்டு ஒன்றுக்கொன்று வெல்ல முடியாது வலிமையை இழந்து புன்களுடன் பிரிந்து செல்வதை சங்கப் பாடல்களில் காணலாம்.

**i. ஆண் யானைகள் புலியிடமிருந்து கன்றைக் காத்தல்**

"அருவி ஆர்க்கும் பெருவரைச் சிலம்பின்
ஈன்றணி இரும்பிடி தழீஇக் களிறுதன்
தூங்குநடைக் குழவி துயில்புறங் காப்ப
ஓடுங்களை புலம்பப் போகிக் கடுங்கண்
வாள்வரி வயப்புலி கன்முழை உரறக்"

என்ற அகநானூற்றுப் பாடல் விளக்குகின்றது.

S.MARTIN RAJA AP TAMIL, IGCE

**ii. புலி பாய்ந்ததற்குப் பயந்து பெண்யானை தன்னுடைய கன்றை விட்டுவிட்டு ஓடுதல்**

"ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் குவவடி
வெண்கோட் டியானை முழக்கிசை வெரீஇக்
கன்றொழித் தோடிய புன்றலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடுமகப் பெண்டிரிற் றேரும்"

என்ற அகநானூற்றுப் பாடல் விளக்குகின்றது.

**iii. பெண்யானையின் கன்றைத் தூக்கிக் கொண்டு புலி ஓடுதல்**

**"குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை
நெடும்புதற் கானத்து மடப்பிடி யீன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழந்தூங்கு கொழுநிழ லொளிக்கு நாடற்கு" (216)**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் விளக்குகின்றது.

**iv. யானை புலியைக் கொன்று வெற்றி பெறுதல;**

"வயங்குவெள் ளருவிய குன்றத்துக் கவாஅன்
கயந்தலை மடப்பிடி இனனே மார்ப்பப்
புலிப்பகை வென்ற புண்கூர் யானை
கல்லகச் சிலம்பிற் கையெடுத் துயிர்ப்பின்"

என்றும் கூறப்பட்டுள்ள செய்திகளைக் காணும் போது புலி யானையைக் கொல்வது மட்டுமல்ல யானையும் புலியைக் கொல்லும் என்ற கருத்தை வலியுறுத்தச் செய்கிறது.

**v. புலியின் குணங்கள்**

- புலி பசித்தாலும் புல்லைத் திண்ணாது. யானை பசித்தாலும் மாமிசம் உண்ணாது, புலி தனது இரையாக மான்களையும் பன்றிகளையும் கொன்று உண்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கும். புலி தான் கொன்ற விலங்குகளை நெடுந்தொலைவு இழுத்துச் சென்று அல்லது கல்விச் சென்று பதுக்கி வைத்து உண்ணும், கொன்ற இடத்தில் உண்ணாது இழுத்துச் சென்று பதுக்கி உண்ணும் குணம் புலிக்கு உண்டு. புலி தான் உண்டது போக எஞ்சிய உணவைத் தனது குகையிலோ முழையிலோ பதுக்கி வைத்துக் கெட்ட நாற்றம் அடித்துப் புழுத்துப் போனாலும் மீண்டும் மீண்டும் அதையே உண்ணும் இயல்புடையது. புலியின் இக்குணங்களை,

  **‘ஆடுகழை நாலும் அணங்குடைக் கவாஅன்**
  **ஈருயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய’** என்னும் அகநானூற்றுப் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

**vi. யானையின் குணங்கள்**

- காடுகளின் அருகேயுள்ள விளைநிலங்களில் புகுந்து பயிரை உண்டு அழிப்பதையும், தினைப்புனத்தில் இரவுக் காலத்தில் யானை மேய்வதையும், யானை காடுகளில் உள்ள மூங்கிலையும் மூங்கில் முளையையும் விரும்பி உணவாகக் கொள்வதையும் பல சங்கப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. குறிப்பாக, குட்டியீன்ற பெண் யானைக்கு முற்றாத மூங்கில் முளையை ஆண்யானை தருவதை,

  **"ஈன்றுநா ளுலந்த மென்னடை மடப்பிடி**
  **கன்றுபசி களைஅய பைங்கண் யானை**
  **முற்றா மூங்கில் முளைதகு பூட்டும்**
  **வென்வேற் றிரையன் வேங்கட நெடுவரை”**

  என்ற அகநானூற்றுப் பாடல் விளக்குகிறது.
- வேழம் என்பது பேய்க்கரும்பைக் குறிக்கும். இதனை வேழக்கரும்பை என்றும் அழைப்பர். யானைகள் பேய்க்கரும்பை விரும்பி உண்பதால் வேழம் என்ற பெயர் யானைக்கு ஆகுபெயராக வழங்கிற்று என்பர்.

  **"காம்பு கண்டன்ன தூம்புடை வேழத்து"**

  என்ற ஐங்குறுநூற்று வரி கூறுவதால் மூங்கில் போன்றது வேழம் என்றாகிறது. மூங்கில், பேய்க்கரும்பு, கொறுக்காத் தட்டை ஆகிய மூன்றும் யானைக்கு விருப்பமான உணவாகும்.
- இதுபோன்று சங்க இலக்கியத்தில் காணப்படக் கூடிய விலங்குகளின் பல்வேறு விதமான குணங்களையும், உருவ அமைப்புகளையும், பழக்க வழக்கங்களையும் கண்டறிந்து தமிழரின் பண்பாட்டுக் கூறுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மனித மனத்தோடு விலங்கினக் கூறுகள் மணம் வீசுவதைக் காணலாம்.

**36. தொல்காப்பிய அகப்பொருள் கோட்பாட்டை விவரித்து எழுதுக.**

**ஐவகை நிலங்கள் யாவை**

| ஐவகை நிலங்கள் | |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலைசார்ந்த இடமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | கடலும் கடல்சார்ந்த இடமும் |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த இடமும். |

**ஐந்திணை பொழுதுகள்**

| திணையும் பொழுதும் | | |
|---|---|---|
| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

**கருப்பொருள் அட்டவணை**

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல் ஆயர். ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

**37. சங்க இலக்கிய புறப்பொருள் பற்றி விளக்கி எழுதுக.**

- நெய்தல் வஞ்சிப் பாவைக் கொண்டது. வஞ்சி, படகு என்பதையும் குறிக்கும். இன்றும் கேரளத்தில் நெய்தல் சார்ந்த படகுப் பாட்டுகள் வஞ்சிப்பாட்டுகள் என்றே அழைக்கப்படுவது நோக்கத் தக்கது.

**1. குறிஞ்சி -** வேட்டைச் சமூகம், சுரண்டல் உருவாகா நிலை இயற்கைக் காதல், பெருமளவு தாய்வழிச் சமூகம். வெட்சி - வேட்டைச்சமூகம், சிறிய தலைவர்கள், ஆநிரை கவர்தல்

**2. முல்லை-** ஆடுமாடுகள் சொந்தமாதல் தனியுடைமையின் தொடக்கம் மேய்த்தல் சமூகம், தந்தைவழிச் சமூகமாதல், கற்புக் கோட்பாடு வஞ்சி - சிறிய தலைவர்கள், நேருக்கு நேர் போரிடல்

**3. மருதம் -** பெருமளவில் நிலத்தைச் சொந்தமாக்குதல், இயற்கை அழிவு, சுரண்டல் நிலவுடைமைச் சமூகம், பெண்ணுடைமைச் சமூகம், ஆண்கள் நெறிதவறுதல் நொச்சி - அரணமைத்துக் காத்தல், பெரும் அரசர்கள் தோற்றம்

**4.நெய்தல் -** இயற்கைக்குத் திரும்புதல், சுரண்டலற்றநிலை கலப்புக்காதல், சிரமம்/ துன்பம்/ இரங்கல்/ புலம்பல், நிச்சயமற்ற பிரிவு காஞ்சி - நிலையாமை/ நிலையின்மை, புலவர்கள் பேரரசை விட்டு சிறிய புரவலர்களை அணுகுதல்

**5. பாலை -** களவுசெய்யும் சமூகம், மனிதனை மனிதன் அழித்தல் தற்காலிகப் பிரிவு, வெம்மை, பிரிவும் பிரிவின்மையும் வாகை - பெருவேந்தர் குறுநில மன்னர்களை வெற்றிகொண்ட தன்மை, இரக்கம் எனத் தமிழ்இலக்கிய மரபு உருவாக்கப்பட்டது. இதில் பாலைத் திணை பற்றி இன்னும் சிறிது நோக்கலாம்.

- பழங்காலத்தில் இயல்பான சமூக வாழ்க்கைக்குக் கட்டுப் படாத அதன் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படாத மக்கள் சிலர் இருந்திருக்க இயலும். சங்ககாலத்தில் வாழ்ந்த சட்டத்திற்குப் புறம்பான மக்கள் பாலை நிலங்களில் தங்கள் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்க இயலும். எனவே பாலை நிலத்தினரை அக்காலச் சட்டதிட்டங்களுக்குப் புறம்பான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் என்று கருதலாம்.
- கைக்கிளை பெருந்திணை இரண்டும் முறையே சமூகத்தில் குறிப்பிட்ட பருவத்தில் ஆண்களிடையே பெரும்பான்மை நிகழும் உள்ள நிகழ்வையும் சமூகத்தில் பெருமளவு நிகழும் திருமண முறையையும் (சமூகநிகழ்வையும்) குறிக்கின்றன. இரண்டுமே பெரும்பான்மையில் நிகழ்வன ஆயினும் சங்க இலக்கியத்தில் எடுத்துக்காட்டும் இலட்சியபூர்வமான வாழ்க்கை முறைக்குத் தொடர்பற்றவை.
- பெருந்திணை பற்றி அறிஞர் வ.சுப. மாணிக்கம் **"எல்லை மீறிய உணர்ச்சிப் பெருக்கினை எடுத்துக்காட்டும் திணை"** என்பார். சங்க இலக்கியங்களில் அகத்திணைக்கு ஒருவிதமாகவும், புறத்திணைக்கு இன்னொரு விதமாகவும் திணை முதலியன வகுக்கப்பட்டதால் வ.சுப. மாணிக்கனார் கருத்து புறத்திணைக்குப் பொருந்துவதாக இல்லை.
- புறத்திணைகள் காட்டும் சமூகநிலை அகத்திணைகள் காட்டும் சமூகத்தோடு ஒப்பவைத்து நோக்க அதிர்ச்சியைத் தருவதாக உள்ளது. களவு- கற்பு என அகத்திணைக்குள் திட்டவட்டமான ஒழுக்கம், அதன் சமூக வெளிப்பாடான கரணம் என்பவை போலப் புறத்திணைக்கென ஒழுக்க அடிப்படை ஏதுமில்லை.
- வெட்சி ஆநிரை கவர்தல் என்று மட்டும் சொல்லப்படுகிறதே தவிர, எந்தச் சூழலில், எந்த ஒழுக்க அடிப்படை கொண்ட ஆணை அடிப்படையில் என்ன முறைப்படி அது செய்யப்பட வேண்டும் என்ற வரையறை எதுவும் தொல்காப்பியத்திலும் சொல்லப்படவில்லை. சங்க இலக்கியத்திலும் தெளிவாக இல்லை.
- மேலும், தொல்காப்பிய நூற்பாக்கள் பெருமளவு போர் நிகழ்வுகளையே (போர்க்களத்தில் காணப்படும் சில அபூர்வமான சம்பவங்கள் அல்லது நிலைகள்) துறைகளாக வருணிக்க, சங்கப் பாடல்களுள் பெருமளவு அவ்வாறில்லை.
- புறநானூற்றில் பல்வேறு செய்திகள் கலந்து வருகின்றன. பதிற்றுப்பத்தில் போர்வருணனை - பகைப்புலத்தை அழித்தல் - அவ்வாறு அழித்தலின் வாயிலாகப் பெற்ற செல்வத்தைப் புலவர்களுக்கு அளித்தல்- யாகத்திற்குச் செலவிடல் ஆகிய செய்திகளே திரும்பத்திரும்ப வருகின்றன.
- தனது நாட்டைப் பகைவர் தாக்காமல் தற்காத்துப் பகைவர் நாட்டை அழித்துக் கொள்ளை கொள்வதை அகத்தில் மருதத்திணையுடன் மட்டுமே ஒப்பிட முடியும்.
- நெட்டிமையார் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடும் பொழுது,

**'அறனோ மற்றிது விறல்மாண் குடுமி**
**இன்னாவாக பிறர்மண் கொண்டு**
**இனிய செய்தி நின் ஆர்வலர் முகத்தே'** எனப்பாடுவது நோக்கத்தக்கது.

- சிலப்பதிகாரக் கானல்வரி **"கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி"** என்று வெளிப்படையாகவே இதனைச் சொல்லிவிடுகிறது. காவிரியின் தலைவன் கங்கையைப் புணரலாம். ஆனால் காவிரி நெறிபிறழக்கூடாது; பிறருக்கு உரிமையும் ஆகக்கூடாது.
- பூம்புகார் போன்ற நகர மக்களும் போரினால் பாதிக்கப்படாமல் **"பதியெழு அறியாப் பழங்குடி மூதூர் மக்கள்"**ஆக வாழ்ந்த நிலை நாட்டுடைமை-தன்சொத்துடைமை ஆகியவற்றை அரசர்கள் போற்றியதைக் காட்டுகிறது. அதேபோல் தன் கொழுநன் - பதி தவிரப் பிறர் அறியாக் குலமகளிர் போலப் பிறபதி அறியா- பதியெழு அறியா மக்களாக இருத்தல் என்ற கற்புநிலை போற்றப் படுகிறது. இப்படி புறத்திணையில் போர்ச்செய்திகளில் எந்த ஒழுக்க அடிப்படையும் தரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- வீரம் தவிர, பிற புறப்பாடல்களை வகைப்படுத்தினால், அவை கடவுளைப் போற்றுதல், மன்னரைப் போற்றுதல், மகட்பாற்காஞ்சி போன்ற சில தலைப்புகளில் அமையும். குறிப்பாக மகட்பாற் காஞ்சித் துறை பெண்ணின் காரணமாகப் பெருமன்னர்க்கும் சிறு தலைவர்களுக்கும் போர் ஏற்படுவதையும் அப்போர்களில் சிறுதலைவர்களின் அழிவுநேரிடுவதையும் வருணிக்கிறது.
- இப்படித்தான் இனக்குழு மக்களும் அவர்களது சிறு தலைவர்களும் வாழ்ந்த தமிழகம், மூவேந்தர் வயப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய தமிழகத்தில் தோற்றுப்போகும் எளிய நிலத் தலைவர்களை அல்லது மக்களை ஆறுதல் படுத்த வேண்டி.

**"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்**
**புதுவதன்று இவ்வுலக்தது இயற்கை"**

S.MARTINRAJA, AP, TAMIL, ICCE

- என்று சமூக நிகழ்வை இருத்தலியப் படுத்துவதையும், **"கான்யாற்றில் அடித்துச் செல்லும் புணை"** போல வாழ்க்கை செல்கிறது. எனவே பெருமன்னரும் - சிறு தலைவர்களும் ஒன்று தான், **"யாதும் ஊர் யாவரும் கேளிர்"** என விதியை நம்பவைப்பதும், **"இன்னாதம்ம இல்வுலக்ம் இனிய காண்க இதன் இயல் புணர்ந்தோரே"** எனத் துன்பத்தை இயற்கை நிகழ்வு இயல்பு என ஆக்குவதையும் காணமுடிகிறது.
- இத்தகைய நோக்கிற்கு சமண பௌத்த மதங்களின் ஆதிக்கம் ஓரளவு காரணமாகலாம் என்றாலும் இனக்குழுச் சமூகத்திலிருந்து மூவேந்தர்களால் ஆளப்படும் பெருநாட்டு நாகரிகத்திற்கு மக்கள் மாறிக்கொண்டிருந்ததே அடிப்படைக் காரணம். எவ்வாறாயினும் சங்கப்பாடல்களை இன்னும் ஆழமாக நோக்கினால் பலவிதத் தொடர்புகள், புதியதாக கிடைக்கக்கூடும். சமூக வியல், சமூக உளவியல், மானிடவியல் நோக்குகளில் ஆராயும் போது திணை அமைப்புப் பற்றிய செய்திகள் புலப்படும்.

**38. தமிழர் அறம் பற்றி விளக்குக. (my;yJ) தமிழர்களின் அறக்கோட்பாடு குறித்து விளக்குக?**

- சங்க காலத்தில் மன்னராட்சி முறைமை இருந்தது. மன்னன் வழித்தே மலர்தலை உலகம் சென்றது. மன்னன் தான் நினைத்ததை எல்லாம் செய்தான். மன்னன் மக்களுக்கு வழிகாட்ட வேண்டும். மன்னன் சொந்த விருப்பங்களை சமத்துவ நடுநிலைமையோடு செயல்பட வேண்டுமென ஒரு கருத்துநிலை உருவாக்கப்படுகிறது.
- இக்கருத்துநிலையிலிருந்து உருவானதே அறம். அரசனை நல்வழிப்படுத்த உருவாக்கப்பட்டதே அறக்கோட்பாடு. மன்னன் அறத்தின் பக்கம் நின்று நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்பதை புலவர்களும் வலியுறுத்தி வந்துள்ளனர்.
- செங்கோலாட்சி அமைவதற்கு அடிப்படை காரணமாக அமைவது அறநெறி. சங்க இலக்கியங்களும் அறக் கோட்பாடுகளை வலியுறுத்துகின்றன.

- மன்னன் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை போன்ற படைகளை வைத்திருந்ததால் அதிகாரம் மிக்கவனாக இருந்துள்ளான். எனவே தனக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்று பாகுபாடுகள் பார்க்காமல் நடுநிலையோடு செயல்பட அறக்கோட்பாடுகள் வலியுறுத்தின.
- அரசன் என்பவன் ஞாயிறு போன்று வெம்மையும், திங்கம் போன்று மென்மையும், மழை போன்;று வள்ளல் தன்மையும் உடையவனாக வாழ வேண்டும் புலவர்கள் வாழ்த்தினர்.
- சங்க கால அரசியல் தூய்மைக்கு அடிப்படை அறக்கருத்துக்கள் என்பதை அறியமுடிகிறது.

**1. அறத்தை வலியுறுத்தியதில் நீதி நூல்களின் பங்கு**

- சங்க இலக்கியங்களை அடுத்து நீதி நூல்கள் அறத்தை வலியுறுத்துகின்றன. சிறுபஞ்சமூலம் என்னும் நீதிநூலில் அதன் ஆசிரியர் காரியாசான் பின்வரும் செய்திகளை பதிவு செய்கிறார்.
- தீயச் சொற்களை சொல்லாமல் இருத்தல். வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபடாமல் இருத்தல். பிறர் பொருளை களவு செய்யாமல் இருத்தல், உண்மை தவறாமல் இருத்தல், அறிவுரைகளை கேட்டு நடத்தல் ஆகிய ஐந்து பண்புகளை ஆராய்ந்து விட்டுவடுதல் அறம் என்று குறிப்பிடுகிறார் காரியாசான்.
- மேற்கண்ட ஐந்து செயல்பாடுகளும் அரசனுக்கும் சாதாரண மனிதனுக்கும் பொருந்தும். திருக்குறள் அறத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில் அறத்தை பேசுகிறது. **'மனத்துக்கண் மாசிலன் ஆதல்'** என்று குறிப்பிடுகிறது.
- அறவாழ்க்கை இரண்டு வகைப்படுகிறது. 1. இல்வாழ்வில் மற்றவர்களுக்கு தர்மம் செய்வது. 2. துறவறத்தில் இல்வாழ்க்கையில் உள்ளவர்களை காப்பது.

**39. பழந்தமிழர் கல்வி முறையை விளக்குக.**

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

- மனிதனுக்கு நல்ல ஒழுக்கம், மனவலிமை, பரந்த அறிவு, சுயவலிமை போன்றவை அளிப்பதே கல்வி எனப்படும்.
- 'குழந்தைகளின் உடல், உள்ளம், ஆன்ம உணர்வு ஆகியவற்றை வெளிக்கொணருவது கல்வி என்று மகாத்மா காந்தி அடிகள் குறிப்பிடுகிறார்.
- வாழ்க்கையின் அணியாகவும் தாழ்வின் துணையாகவும் விளங்குவது கல்வி என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார்.
- நுண்ணறி பயிற்சி, மனத்தூய்மை, ஆன்மீக நெறி ஆகியவற்றை கற்பிப்பது கல்வி என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் விளக்குகின்றார்.
- ஆதிகாலத்தில் மனிதன் விலங்குகளிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள ஒலி எழுப்பியுள்ளான். மற்றவரின் துணையை தேடியதன் மூலம் சேர்ந்து வாழும் முறை உருவாகியது. இதனால் மொழிப் பயன்பாடு உருவாகிறது.
- இயற்கையை எதிர்த்து வாழ மனிதனுக்கு கூர்மையான அறிவும் உணர்வும் தேவைப்படுகிறது. எனவே இயற்கையை தனக்கு தகுந்தவாறு பயன்படுத்திக் கொள்கின்றான். மனிதனின் முதல் ஆசிரியர் இயற்கை என்பர்.

**1. சங்க காலத்தில் மன்றங்கள் (பள்ளிகள்)**

- சங்க இலக்கியங்களில் கல்வி நிறுவனங்கள் மன்றங்கள் என்றழைக்கப்பட்டன. சான்றாக, குறுந்தொகை பாடலொன்று,

  **'அன்னாய் யிவனோ ரிளமா ணாக்கன்**
  **தன்னூர் மன்றம் தென்னன், செம்மலன்'**

  என்று மாணவர்கள் மன்றத்தில் கல்வி பயின்றதைக் குறிப்பிடுகிறது.
- சங்க காலத்தில் ஊர்ப்பொது மன்றங்களில்தான் அனைத்து நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பொது மன்றங்களில் பலா, மேப்பமரங்கள் இருக்கும். அதன் நிழலில் பாணர், பொருநர் போன்றவர்கள் வந்து

தங்குவர். அம்மரங்களில் தங்களது இசைக் கருவிகளையும் தொங்கவிட்டு இருப்பர் என்பதை புறநானூற்றுப் பாடல்கள் சான்றளிக்கின்றன.

- பெருங்கண்ணன், குலபதி நக்கண்ணனார், மதுரை கோடங்கொண்டனார், மதுரை இளம் பாலாசிரியன் போன்றோர் சங்க காலத்தில் புலவர்களாகவும் ஆசிரியர்களாகவும் திகழ்ந்துள்ளனர்.
- ஊதியமில்லாதக் கல்வி உருப்படாது என்பது பழமொழி என்பர். இன்றைக்குள்ள இலவசக் கல்வி போன்று சங்க காலத்தில் கிடையாது. ஆசிரியருக்குப் பெரிய அளவில் பொருட்களை கொடுத்தே கல்வி கற்க வேண்டியிருந்தது. ஆசிரியருக்கு மாணவர்கள் வேண்டிய உதவிகளை செய்து கொடுத்து கல்வி கற்க வேண்டும். ஆசிரியரை மாணவர்கள் கோபப்படுத்தவாறு நடந்து கொள்ள வேண்டும். அடக்கத்துடன் கல்வி கேட்க வேண்டும் என்பதை,

  **'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
  **பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே'**

  என்று புறநானூறு குறிப்பிடுகிறது.
- கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பர். ஒருவன் இறக்கும் வரையில் கல்வி கற்காமல் காலத்தை வீணாக்கக் கூடாது என்பதை,

  **'யாதானும் நாடாமல் ஊராமல் எனொருவன்**
  **சாந்துனையும் கல்லாத வாறு (குறள், 397) மேலும்,**
  **'யாதும் ஊரே யாவரும் கேளீர்' (புறம், 192, 1)**

  என்று கனியன் பூங்குன்றனார் கற்றவர்களை குறிப்பிடுகிறார்.

**2. கல்வியால் பெற்றோருக்கு கிடைக்கும் பெருமை**

- தாய் தான் பெற்றெடுத்த குழந்தைகளிடம் எந்த வேறுபாடுகளும் பார்ப்பதில்லை. இதனால்தான் தாய் உயர்வாக போற்றி மதிக்கப்படுகிறார். தாய்க்கு எது மகிழ்ச்சி என்றால் தன் பிள்ளை கல்வியால் உயர்ந்து விளங்குவதையே பெரிதும் விரும்புவார் என்பதை புறநானூற்றுப் பாடலொன்று,

  **'பிறப்போரன்ன வுடன் வயிற்றுள்ளும்**
  **சிறப்பின் பாலாற் தாயுதனந் திரியும்' என்று குறிப்பிடுகிறது. திருக்குறள்,**
  **'ஈன்ற பொழிதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
  **சான்றோன் எனக்கேட்ட தாய்'** (குறள் - 69) என்று குறிப்பிடுகிறது.
- பெற்றோர்களை பெருமைப்படுத்தும் தகுதி கல்விக்கு மட்டுமே உண்டு. ஒருவன் கல்வி கற்க பணமில்லை என்று வீணாக இருந்துவிடக் கூடாது. பிச்சை எடுத்தாவது கல்வி கற்க வேண்டும் என்பதை அதிவீரராம பாண்டியன்,

  **'கற்கை நன்றே கற்கை நன்றே**
  **பிச்சை புகினும் கற்கை நன்றே**
  **கொடுக்கக் குறையாத செல்வம்' (வெற்றிவேட்கை - 15)**

  செல்வத்தை பிறருக்குக் கொடுக்கும் போது குறைந்து விடும். ஆனால் கல்வி செல்வம் குறையாதது. நெருப்பினாலும் அழியாதது. எடுக்க எடுக்க கிணறுபோல் ஊறிக்கொண்டே இருக்கும். திருடர்களால் திருட முடியாது. நீண்டநாள் உயிர்வாழவும் கல்வி வழிகாட்டும் என்று விவேக சிந்தாமணி நூல் குறிப்பிடுகிறது.
- கல்வியின் சிறப்பு சொல்ல சொல்ல விரிந்து கொண்டே செல்லும், கற்றவர்களே கண்ணுடையவர்கள், படிக்காதவர்கள் முகம் புண்ணுடையது. கல்வியை ஒருவன் கண்ணெனக் கருதி கற்க வேண்டும். கற்றவர்கள் தெய்வத்திற்கு நிகரானவர்கள் என்று இலக்கியங்கள் பாராட்டுகின்றன.
- ஒரு நாடு நிலவளம், நீர்வளம், காடு வளம் பெற்றிருந்தாலும் கற்றறிந்த சான்றோர்கள் இல்லை என்றால் அந்தநாடு மதிக்கப்படாது. கற்றறிந்த சான்றோர்களால் மட்டுமே அந்த நாடு மதிக்கப்படும் என்பதை,

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**‘நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்ல வராடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே’ (புறம் - 187)** என்று ஔவையார் குறிப்பிடுகிறார்.

- கற்றவர்களின் பெருமையை அறியாத படிக்காதவர்களின் இழிவு அறிய வேண்டும். தமிழர்கள் கற்றவர்களை பெருமைப்படுத்தி உள்ளனர். அதேவேலையில் படிக்காதவர்களை இகழ்ந்து ஒதுக்கி வைத்துள்ளனர்.
- நூல்கள் பல கற்றவர்களை சான்றோர்களாக போற்றினர். படிக்காதவர்களை விலங்கென கருதினர் என்பதை திருவள்ளுவர்,

**‘விலங்கொரு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றா ரோடேனை யவர்’ (குறள் - 410)**

- திருமந்திரம் எழுதிய திருமூலர்,

**‘கல்லாத மூடரைக் காணவும் ஆகாது**
**கல்லாத மூடர்ச்சொல் கேட்கக் கடனன்று’** என்று குறிப்பிடுகிறார்.

**3. கேள்விக் கேட்பதால் வரும் நன்மைகள்**

- ஒருவன் சிறிய அளவிலாவது படித்தவர்களிடமிருந்து கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். அக்கேள்வி மூலம் அவனுக்கு அறிவு நிறைந்த பெருமையை பெற்று தரும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.
- பால் கெட்டுப்போனாலும், பகல் இருள் ஆனாலும், நான்கு வேதங்களும் வேறுபட்டாலும் சூழ்ச்சியான உறவினர்களிடையே மனஉறுதியுடன் கல்வி நிற்க செய்யும் என்று வாழ்த்துகின்றார். முரஞ்சியூர் முடிநாகனார் குறிப்பிடுகிறார்.

**‘பால் புளிப்பினும் பகல் இருளினும்**
**நால் வேதநெறி திரியினும்**
**திரியாச் சுற்றம்’ (புறம், 2:17-19)**

S.MARTIN BALA, AP, TAMIL, IGCE

**4. கேள்வியின் வகைகள்**

- பரஞ்சோதி முனிவர் கேள்விகளை நான்காக வகைப்படுத்துகிறார்.

‘நன்றும் தீதுணர் நால்வகைக் கேள்வியர் (திருவிளையாடற் புராணம்)

- மாசறு கேள்வி, வயங்கு கேள்வி, உணர்ந்த கேள்வி, ஆற்றல்மிகு கேள்வி, அறமலி கேள்வி, ஓங்கிய கேள்வி, வெறுத்த கேள்வி என கேள்விக்கு பல அடைமொழிகள் வழங்கப்படுகின்றன. மாசறு கேள்வி பற்றி இளங்கோவடிகள்,

**‘மறவுரை நீத்த மாசறு கேள்வி**
**அறவுரை கேட்டாங் காரிடை கழிந்து’** என்று குறிப்பிடுகிறார்.

- அறத்தை மேற்கொள்ளாமல் இருத்தல், பொறாமை, கோபம், பிறர் மனதை புண்படுத்துகின்ற சொல் என்னும் நான்கினையும் நீக்கிவிட்டு மனதில் கெட்ட எண்ணங்கள் இல்லாமல் இருப்பதற்கு நூற் கேள்வி அவசியம் என்பதை உணர்த்துகிறது.

**‘கேள்வியால் முற்றிய வேள்வியந் தணர்** (புறம், 361. 3-4)

**5. கல்வியின் பயன்கள்**

- கல்வியின் பயன்களை இலக்கியங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. சங்க காலத்திற்குப் பின்னர் கல்வி சமயம் சார்ந்த கல்வியாக இருந்தது. சமயக் கல்வி என்பது சமய ஒழுக்கத்தையும் நல்ல ஒழுக்கத்தையும் ஏற்படுத்தியது.
- சமூகத்தில் காணப்படுகின்ற அறியாமை இருளை அகற்றி நல்வழிப்படுத்துவதே கல்வியின் முக்கிய பயனாகும்.
- பிறரும் நலமுடன் வாழ வேண்டும் என்ற பண்பினை ஒவ்வொரு மனிதனுக்கும் அளிப்பதே கல்வி.

- உண்டால் அம்ம இவ்வுலகம் என்று புறநானூறு சுட்டிக்காட்டுவது, கல்வி கற்பதன் மூலம் மனிதன் சகமனிதனை மதிக்கும் பண்பினைக் கற்றுகொள்கின்றான் என்று குறிப்பிடுகிறது.
- கல்வி கற்றவர்கள் தேவர்களின் அமிழ்தம் கிடைத்தாலும் அதை மற்றவர்களுக்கும் கொடுத்து தானும் உண்பர். எளிதில் கோபப்படமாட்டார்கள்.
- பிறர் துன்பப்படுவதைப் பார்த்து தானும் மனம் வருந்துவர். புகழுக்காக உயிரையே கொடுப்பர். உலகமே தனக்கு கிடைத்தாலும் ஒரு பழிச்செயலுக்காக அஞ்சுவர். சுயநலமுடன் வாழமாட்டார்கள். பிறருக்கென வாழ்வர் என்பதை,

  **'சாதிக் கொடுமை அகல,**
  **கல்வி ஒன்றே உயர்ந்த கல்வி என்பதை,**
  **கீழ்பா லொருவன் கற்பின்**
  **மேற்பா லொருவன் அவன்கட் படுமே'** என்ற புறநானூறு பாடல் குறிப்பிடுகிறது.
- சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள் என காலந்தோறும் இலக்கியங்களில் கல்வியின் சிறப்புகளை காணமுடிகின்றன.

## 40. சங்ககால நகரங்களைப் பற்றி விவரித்து எழுதுக.

சங்க காலத்தில் தோன்றிய நகரங்களை, நகர அரசுகளின் காலம், நகர அரசுகளின் சிறப்பு என இரண்டாக வகைப்படுத்திக் காணலாம்.

### 1. நகர அரசுகளின் காலம்

- சங்க காலத்தை நகர அரசுகளின் காலம் என்பர். உலகம் முழுவதிலும் நகர அரசுகள் தோன்றியதை போலவே தமிழகத்திலும் நகர அரசுகள் தோன்றியுள்ளன.
- தமிழகத்தில் 1000 வருடங்களுக்கு முன்பே நகர அரசுகள் இருந்தன என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. நமது மன்னர்கள் அரசுரிமை முறையை பின்பற்றி வந்துள்ளனர்.
- தந்தைக்குப் பின் அவனது மகன், மகனுக்கு பின் அவனது மகன் என்று அரசுரிமை முறை பின்பற்றப்படவில்லை. தந்தை ஒரு நகரத்தின் வேந்தனாக இருப்பின் அவனுடைய தம்பிகள் பின் அவர்களது மகன்கள் பிற நகரத்தின் அரசர்களாக இருந்தார்கள். அரசக் குடும்பத்தில் பிறந்த அனைவருமே ஒரு கட்டத்தில் அரசர்களாக பதவி வகித்துள்ளனர். மூத்தவனுக்கு மட்டுமே அரசுரிமைப் பதவி அளிக்கப்பட்டுள்ளது.
- ஒரே சமயத்தில் 5 அல்லது 6 சேர, சோழ, பாண்டியர்கள் அரசர்களாக ஆட்சிப் புரிந்துள்ளனர்.
- முதுகுடியைச் சேர்ந்தவர்கள் வேளிர்கள் என்றும் குறிஞ்சி நிலத்தில் ஆட்சிப் புரிந்தவர்கள் குறுநில மன்னர்கள் என்றும் முல்லை நிலத்தில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் சிற்றூர் மன்னர்கள் என்றும் மருத நில மன்னர்கள் மூதூர் மன்னர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள்தான் நகர நகர் மைய அரசுகளை ஆண்டு வந்தனர். எனவே சங்க காலத்தில் நூறுக்கும் மேற்பட்ட நகர, நகர்மைய அரசுகள் இருந்தன என்பது நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.
- கி.மு. 1500 இல் தமிழகத்தில் அதிகமாக சிறிய, குறுகிய நகர அரசுகள் உருவாகி இருந்தன. சான்றாக, ஆதிச்ச நல்லூர் ஒரு தொழில் நகராக இருந்துள்ளது.

### 2. நகர அரசுகளின் சிறப்பு

- நகர அரசுகள் தோன்றிய பின்னரே சுய சிந்தனைகள், சுதந்திர சிந்தனைகள், பொருள்முதல்வாதக் கருத்துக்கள், மெய்யியல் கருத்துக்கள், முற்போக்குச் சிந்தனைகள் உருவாகின.
- மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக, மறுமலர்ச்சிக் காலத்தில் வெனிசு, நேபில்சு போன்ற இத்தாலிய நகர அரசுகளில்தான் முதன் முதலில் முற்போக்குச் சிந்தனைகள் உருவான என்று வரலாறுகள் கூறுகின்றன.

S.MARTIN RAJU, AP, TAMIL, IGCE

- நகர அரசுகளின் உருவாக்கத்திற்கு பின் பேரரசுகள் தோன்றின. பேரரசுகள் மக்களை அடிமைப்படுத்தி மதங்கள், மூட நம்பிக்கைகள் மூலம் பிற்போக்கான சிந்தனைகளை கொண்டு வந்தன. சான்றாக கிரேக்க நகர அரசுகளில் தத்துவார்த்த அறிவியல் தொழிற்நுட்ப வளர்ச்சி உரோமப் பேரரசில் இல்லை.
- தமிழகத்தில் கபிலர், கௌதமனார் போன்ற புலவர்கள் போன்றோர் பொருள்முதல்வாத மெய்யியல் சிந்தனைகளை உடையவர்களாக இருந்துள்ளனர். இதனால் எழுத்தறிவு பெற்றவர்களாகவும் சாதாரண மக்களும் சங்க இலக்கியங்களை படைக்கும் அளவிற்கு எழுத்தறிவு பெற்றிருந்தனர்.
- தமிழக நகர அரசுகளை மக்களின் பிரதிநிதிகள் தான் நிர்வாகம் செய்தனர் என்று மெகத்தனிசு கூறுவதாக நேரு குறிப்பிடுகிறார்.
- தமிழகத்தில் நகர்மைய அரசு என்பது பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மக்களாட்சி கருத்துக்கள் தோன்றிவிட்டன. சங்க புலவர் மருதன் இளநாகனார் அகநானூற்றில் 77வது பாடலில் மக்கள் பிரதிநிதிகளுக்கான தேர்தல் நடைபெற்றன என்பதை உறுதிசெய்கிறது.
- தமிழக நகர அரசுகளில் சுதந்திரச் சிந்தனைகள் இருந்தன. நகர அரசுகளின் வளர்ச்சிக்கு தொழில் சார்ந்த வணிகம் முக்கிய பங்காற்றியுள்ளது.

**41. பழந்தமிழகத்தின் துறைமுகங்கள் குறித்து விளக்குக?**

- கடல் வழி வணிகத்தில் துறைமுகங்கள், கலங்கரை விளக்கு, பொருட்களை சேமிக்கின்ற கிடங்குகள், கப்பல்கள் நிறுத்துமிடங்கள், பயணிகள், வணிகர்கள் தங்குவதற்குரிய கட்டிடங்கள் போன்ற கட்டமைப்புகளை தமிழர்கள் உருவாக்கியிருந்தனர்.
- சோழப் பேரரசுகளின் தலைநகராகவும் துறைமுகமாகவும் இருந்தது - காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்) இந்த பூம்புகாரை பற்றி பட்டினப்பாலை, அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங்களில் பூம்புகார் நகரம் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன.
- படகுத்துறைகள் சிறிய அளவிலும் பெரிய அளவிலும் இருந்துள்ளன. ஏற்றுமதி, இறக்குமதி தொழில் சிறப்பாக நடைபெற்றன என்பதை பட்டினப்பாலை நூல் குறிப்பிடுகிறது.
- சோழர்களின் நகர துறைமுகங்களில் குறிப்பிடத்தக்கது நாகப்பட்டினம் துறைமுகமாகும். இத்துறைமுகத்திற்கு பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து சென்றுள்ளனர். பல வணிக தொழில் நிறுவனர்களும் வந்து சென்றுள்ளனர். பண்டைய ரோமர்களின் கப்பல்களும் இத்துறைமுகங்களுக்கு வந்து சென்றுள்ளன. கிறித்துவ ரோமாபுரி நாணங்கள் பல காவிரியின் கரையோரங்களில கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- சோழர்களின் காலத்தில் அரிக்கமேடு என்பது மீன கிராமமாகும். இக்கிராமத்திலிருந்து ரோம் நகருக்கு வணிகம் நடைபெற்றது என்று அகழ்வாராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

S.MARTIN RAJA, AP/TAMIL, JGCE

**43. சங்ககால ஏற்றுமதி-இறக்குமதி பற்றி விவரித்து எழுதுக.**

சங்க காலத்தில் நடைபெற்று வந்துள்ள ஏற்றுமதி, இறக்குமதி என்பது தரை வழி வணிகம், கடல்வழி வணிகம், கரையோர வணிகம் என மூன்றாகப் பகுத்துக் காணலாம்.

**1. தரைவழி வணிகம்:**

- வணிகச் சாத்தர்கள் அயல்நாடுகளுக்கு தரைவழியாக பொருட்களை கழுதைகள், எருதுகள், வண்டிகள் மூலமாக ஏற்றிக்கொண்டு கூட்டமாகச் சென்றுள்ளனர்.
- பாலை நிலங்களின் வழியாகப் பயணம் என்பதால் வழிப்பறிக் கொள்ளையர்கள் வந்து கொள்ளையடித்துள்ளனர். அவர்களிடமிருந்து பொருட்களை பாதுகாக்க வணிக சாத்தர்கள் தங்களுடன் வில் வீரர்களையும் உடன் அழைத்துச் சென்றனர்.
- தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் அக்காலங்களில் வழிப்பறி மேற்கொண்;டவர்கள் வேடர்கள் என்றழைக்கப்பட்டனர். இதன் காரணமாக வணிகர்கள் அயல்நாடுகளுக்கு செல்லும் கூட்டங் கூட்டமாக சென்றுள்ளனர். குறிப்பாக, வில்படை வீரர்களையும் பாதுகாப்புக்காக கூட

அழைத்துச் சென்றுள்ளனர். வணிகச் சாத்தர்கள் கொள்ளையடிக்கப்பட்ட செய்திகள் சங்க இலக்கியங்களில் அதிகமாக காணப்படுகின்றன.

- சங்க புலவர் மருதன் இளநாகனார், பாலை நிலத்தின் வழியாக சென்ற வணிகச் சாத்தைக் கொள்ளையிட்ட வேடர்களை குறிப்பிடும்பொழுது,

**'மழைபெயல் மறந்த கழைதிரங்கு இயவில்**
**செல்சாத்து எறியும் பண்பில் வாழ்க்கை**
**வல்வில் இளையர்' (அகம், 245, 5-7)**

- இதேபோன்று கடியலூர் உருத்திருங் கண்ணனாரும் வழிப்பறிக் கொள்ளையிட்ட வில் வேடரைப் பற்றிக் கூறுகிறார்.

**'சாத்தெறிந்து**
**அதர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்**
**கொடுவில் ஆடவர்' (அகம். 167, 7-9)**

- பலாப்பழ அளவில் மிளகு (மிரியல்) மூட்டைகளை கழுதைகளின் மீது ஏற்றிக்கொண்டு வணிகச் சாத்தர் தங்களுடைய வில்வீரர்களோடு சென்றனர். வழியில் சுங்கச்சாவடிகளில் சாலை வரியும் செலுத்தியுள்ளனர். சுங்கச்சாவடிகளில் அரசனுடைய அலுவலர்கள் சுங்கம் வசூலித்துள்ளனர் என்பது பற்றி கடியலூர் உருத்திரக் கண்ணனார் கூறுகிறார்.
- பிறநாடுகளிலும் வணிகச் சாத்தர்களின் உயிர்க்கும் பொருளுக்கும் ஆபத்து இருந்தது. அவர்கள் ஆபத்தையும் பெரிதாக கருதாமல் வணிகம் செய்து வந்துள்ளனர். வணிகச் சாத்துக்களின் தலைவனுக்கு மாசாத்துவன் என்றுபெயர்.
- காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த மாசாத்துவன்களில் ஒருவன் கோவலின் தந்தை மாசாத்துவன். இவன் சோழ மன்னனுக்கு நிகரான பெருங்குடி மக்களில் முதல் குடிமகனாக இருந்துள்ளான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

S. MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**2. கடல் வணிகம்**

- கரிகாலச்சோழ மன்னன், கடலில் வீசுகின்ற காற்றின் உதவியுடன் மரக்கலங்களை (நாவாய்) ஓட்டினான் என்று புறநானூற்று பாடல் 66 குறிப்பிடுகிறது.

**'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!'**

- ஆதிகாலத்திலிருந்தே தமிழர்கள் கடல்வழிப் பயணம் மேற்கொண்டு வந்துள்ளனர். கடலில் கப்பல் ஓட்டுவது தமிழருக்கு கைவந்த கலையாக இருந்துள்ளது. இதனால் தமிழர்கள் கடல் கடந்து சென்று வணிகம் செய்துள்ளனர்.
- கடல் வழியாக அயல்நாடுகளுக்கு சென்று வணிகம் செய்தது மட்டுமின்றி தரைவழியாகவும் பல நாடுகளுக்கு சென்று தமிழர்கள் வணிகம் செய்துள்ளனர்.
- தமிழகம் மட்டுமின்றி வடஇந்தியாவிலும் வணிகம் செய்துள்ளனர். பெரிய வணிகம் செய்தவர்களுக்கு பெருங்குடிச் சாத்தர்கள் என்றும் அயல்நாடுகளுக்கு கூட்டமாகச் சென்று வணிகம் செய்தவர்களுக்கு வணிகச் சாத்து என்று பெயர்.
- உள்நாட்டுச் சரக்குகளை மரக்கலங்களில் எடுத்துச் சென்று அயல்நாடுகளில் விற்றனர். அங்குள்ள பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்தனர். கடற்கரையோர ஊர்களில் தங்கி பொருட்களை இறக்குமதி ஏற்றுமதி செய்துள்ளனர்.
- தமிழகத்தின் கிழக்கு தீவுகளில் ஒன்று சாவகம், காழகம் (பர்மா), கடாரம் போன்ற கடல்கடந்த நாடுகளுக்கு நாவாய் பயன்படுத்திச் சென்றுள்ளனர்.
- தமிழர்கள் கடல் பயணத்தில் பெண்களை உடன் அழைத்துச் செல்லக்கூடாது என்பதை கொள்கையாகக் கொண்டிருந்தனர். தொல்காப்பியரும் தனது இலக்கண நூலில் அவ்வழக்கத்தை 'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை' என்று குறிப்பிடுகிறார்.

**3. கரையோர வணிகம்**

- தமிழ்நாட்டில் இருந்த கரையோர துறைமுகங்கள்: கொற்கை, தொண்டி, பூம்புகார், சோபட்டினம் முதலியவையாகும்.
- தமிழர்கள் கிழக்குக் கடல் ஓரத்திலிருந்து கட்டுமரங்களை பயன்படுத்தி நெல்லூர், கலிங்கப்பட்டினம், தம்ரலிப்தி (வங்காள தேச துறைமுகப்பட்டினம்) போன்ற பட்டினங்களுக்கு சென்றுள்ளனர்.
- கங்கையாறு கடலில் கலக்கின்ற 'புகர்' வழியாக கங்கையில் நுழைந்து பாடலிபுரம், காசி (வாரணாசி) போன்ற ஊர்களில் வணிகம் செய்து திரும்பியுள்ளனர். நற்றிணை நூல் 'கங்கை வங்கம் போகுவர் கொல்லோ' என்று கூறுகின்றது.
- இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வெளிநாடுகளுக்குச் சென்று தமிழர்கள் ஏற்றுமதி செய்து அங்கிருந்து இறக்குமதி செய்திருக்கின்றனர்.

**43. சோழர்களின் ஆட்சி சிறப்பை விளக்குக.**

**(மிக முக்கிய வினா புத்தகத்தில்தான் படிக்க வேண்டும்)**

## அலகு - 5

## இந்திய தேசிய இயக்கம் மற்றும் இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழர்களின் பங்களிப்பு

**44. இந்திய விடுதலைப் போரில் தமிழர்களின் பங்களிப்பை விவரித்து எழுதுக?**

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

- கி.பி. 1600 இல் இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனி அமைக்கப்பட்டது. சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டை 1639இல் கட்டப்பட்டது. பிளாசிப் போர் நடந்தது 1757. இதில் இராபர்ட் கிளைவ் வெற்றி பெற்றார்.
- ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்தது வணிகம் செய்யவதற்கான ஆனால் இங்குள்ள அரசியலை அவர்கள் கையில் எடுத்துக் கொண்டு அதிகாரம் செலுத்தினர்.

**1. பூலித்தேவன்**

- வரி கேட்டு இடையூறு செய்த ஆங்கிலேயர்களை புலியாக எதிர்க்கிறார்.
- இந்திய சுதந்திர வரலாற்றில் இவரது போராட்டங்கள் மறைக்கப்படுகின்றன.
- 1755இல் நெல்லையில் நெற்கட்டும் சேவல் கோட்டையை முற்றுகையிட்டு வரி வசூலித்த கர்னல் ஹெரோனையும் அவனது படையையும் விரட்டி அடிக்கிறார்.

**2. வேலு நாச்சியார், மருது சகோதரர்கள்**

- 1780 இல் சிவகங்கையில் முப்படைகளையும் திரட்டி வெள்ளையர்களும் போரிடுகிறார்.
- இவருக்கு துணையாக ஆட்சியாளர்கள் மற்றும் மருது சகோதரர்கள் கிழக்கிந்திய கம்பெனியை அடித்து நொறுக்கி வெற்றி பெறுகின்றனர்.

**3. கட்டபொம்மன்**

- பாஞ்சாலங்குறிச்சி, பாளையங்கோட்டை மன்னனாக திகழ்ந்தவர். வரி கேட்ட வெள்ளையர்களை விரட்டி அடிக்கிறார்.
- பீரங்கி, குண்டுகளுக்கு நிகராக வாள், வேல் கருவிகள் பயன்படாததால் தோல்வி அடைகிறார்.
- வெள்ளையனுக்கு அடிபணிய மாட்டேன் என்று தூக்கில் போடப்படுகிறார். இவருடைய தம்பி ஊமத்துறையும் வீரமரணம் அடைகிறார்.

**4. தீரன் சின்னமலை**

- வெள்ளையர்களை எதிர்த்து நின்ற திப்பு சுல்தானுக்கு துணையாக தோள் கொடுத்தவர் தீரன் சின்னமலை.

**5. சி. இராஜகோபாலாச்சாரி**

- சேலத்தில் பிறந்தவர். சுதந்திர போராட்ட வீரர். காந்தியுடன் பல போராட்டங்களில் பங்கெடுத்தவர். உப்பு சத்தியாகிரகத்தில் பங்கு கொள்கிறார்.
- இந்திய தேசிய காங்கிரஸில் பங்கு பெறுகிறார்.
- 1952 தமிழகத்துடன் கேரளா, ஆந்திரா, கர்நாடகா இணைந்திருந்த போது சென்னை மகாணத்தின் முதலமைச்சராக பணியாற்றினார்.
- சுதந்திரத்திற்கு பின் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக பொறுபேற்றவர்.
- பெரியாருடன் கருத்துவேறு ஏற்பட்டாலும் நட்பு கொண்டிருந்தார்.

**6. வ. உ. சிதம்பரனார்**

- இளமையிலேயே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்.
- 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் சுதேச இயக்கத்தை வலுப்படுத்த சுதேச கப்பல் கம்பெனியை ஆரம்பித்தர்.
- வ. உ. சிதம்பரனாருக்கு துணையாக திலகரும் அரவிந்தரும் இருந்துள்ளனர்.
- 36 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று செக்கிழுத்து, கல்லுடைத்தார். 1912 இல் விடுதலையாகி 1936 இல் மறைந்தார்.

**7. தந்தை பெரியார்**

- மக்களின் அறியாமை அகலவும் ஏற்றத்தாழ்வுகள் நீங்கவும் பாடுபட்டார்.
- 1924 இல் கேரளத்தில் வைக்கம் மகா தேவர் கோயில் போராட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு சத்தியாகிரகம் நடத்தி வெற்றி பெற்று வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டார். கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு சிறை சென்றார்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCSE

**8. சுப்ரமணிய பாரதி**

- இந்திய சுதந்திர போராட்டத்தில் பாரதியின் பங்கு அளப்பறியதாகும்.
- நொந்தே போயினும் வெந்தே மாயினும் நம்தேசத்தவர் உவந்தே சொல்வது வந்தே மாதரம் என்று பாரதி தனது கனல் போன்ற கவிதை வரிகளால் இந்திய மக்களிடையே விடுதலை உணர்வை ஏற்படுத்தியவர்.
- பெண் விடுதலைக்காகவும் போராடியவர் பாரதியார்.

**9. வரகனேரி வேங்கடேச சுப்பிரமணிய ஐயர்**

- திருச்சியில் பிறந்தவர். இந்திய சுதந்திர போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்.
- திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.
- இலண்டனில் உள்ள இந்திய விடுதியில் தன்னுடன் தங்கியிருந்த 30 பேருடன் சேர்ந்து விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டவர். துப்பாக்கிப் பயிற்சி பெற்றவர்.

**10. சுப்ரமணிய சிவா**

- இளமைப்பருவத்திலேயே அரசியலில் ஈடுபட்டவர்.
- தேச விடுதலைப் போராட்டத்தில் தொடர் பிரச்சாரங்களில் ஈடுபட்டவர்.
- திலகரின் விடுதலை பற்றை பின்பற்றியவர்.
- முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.
- ஆங்கிலேயர்களின் அடக்குமுறைக்கு உட்பட்டு கடைசிவரை அவர்களுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர்.

**11. மாவீரன் வாஞ்சிநாதன்**

- ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழ்நாட்டில் தோன்றிய புரட்சியாளர்.

- வ.உ.சி, சுப்பிரமணிய சிவா ஆகியோரின் மேடைப்பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு இவரும் விடுதலை போராட்டத்தில் தீவிரமாக செயல்பட்டவர்.

**12. திருப்பூர் குமரன்**

- 1932 இல் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கிய போது தமிழகத்தில் அறப்போராட்டம் பரவியது. திருப்பூரில் தேசப் பந்து இளைஞர்களை ஒன்றிணைத்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்.
- கையில் தேசிய கொடியை ஏந்தி, தொண்டர் படைக்கு தலைமை ஏற்றார். அணிவகுப்பின் போது காவலர்கள் தாக்கப்பட்டு தடியடி நடந்ததில் திருப்பூர் குமரன் தேசியக் கொடியை ஏந்தியவாறே மயங்கி விழுந்து மருத்துவமனையில் உயிர் இழந்தவர். இதனால் கொடிக்காத்தக் குமரன் என்று அழைக்கப்படுகிறார்.

**13. அஞ்சலை அம்மாள்**

- தென் ஆர்க்காடு மாவட்டத்தை சேர்ந்த அஞ்சலை அம்மாள் சுதந்திர போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளார்.
- 1927 இல் நீலன் சிறை அகற்றும் போராட்டத்தில் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறை சென்றார்.
- உப்பு சத்தியாகிரம், தனிநபர் சத்தியாகிரகம் போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**14. ம. பொ. சிவஞானம்**

- மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் என்பது பெயர்.
- சுதந்திரத்தையும் தேசியத்தையும் தமது இருகண்களாகப் போற்றியவர்.
- சுதந்திரப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தியாகி.
- திருத்தணி எல்லைப் போராட்டத்தில் தளபதியாக திகழ்ந்தவர்.

மேலும், பா. ஜீவானந்தம், தூக்குமேடை ராஜகோபால், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், சுத்தானந்த பாரதி, காமராஜர், கக்கன் போன்றோர் இந்திய சுதந்திர போராட்டத்தில் அர்ப்பணித்தவர்களாவர்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**45. இந்தியாவின் பிற்பகுதிகளில் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் குறித்து விளக்குக?**

தமிழர்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, அரசு, அமைச்சர், ஆட்சிமுறை, போர், வீரம், காதல் முதலியனவற்றை காலக் கண்ணாடியாக இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. தமிழர்களின் பண்பாடானது இந்தியாவின் பிற்பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

**1. காதல்:**

- தமிழர்கள் காதலை அன்பின் ஐந்திணை என்கின்றனர்.
- தூய்மையான காதல் என்பது ஒருவனுக்கு ஒருத்தி என்பதே தமிழர் மரபு
- காதல் வாழ்க்கை: 1. களவு - திருமணத்திற்கு முன்பு நிகழ்வது. 2. கற்பு - திருமணத்திற்கு பின்பு இல்வாழ்க்கை
- ஐந்திணை ஒழுக்கத்தில் தலைமக்களாக திகழ்பவர்கள் - அறிவும் செல்வமும் உடைய நல்ல குடும்பத்தில் பிறந்தவர்கள் ஆவர்.
- காதலில் வருபவர்கள்: தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய், தோழி, பாணன், பாடினி போன்ற ஊர் மக்கள் பாத்திரங்களாக வருவர்.
- காதல் வாழ்க்கை அறவழியில் மட்டுமே நடக்கும். அன்பின் வழியில் நிகழும் இதுவே தமிழர் பண்பாடு.

**2. வீரம்**

- பண்டைய தமிழர்களின் வீரத்தை தொல்காப்பிய புறத்திணை இயல் எடுத்துச் சொல்கிறது. போர் என்பது தற்காப்பு முறையில் நடைபெற்றுள்ளது.

- போருக்கு பயன்படுத்தப்பட்ட நான்கு படைகள்: தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாற்படை.
- புறத்திணைகள் நான்கு: வெட்சி, வஞ்சி, உழிகை, தும்பை
- தமிழர்கள் அறவழியில் அறப்போர்களை மேற்கொண்டனர்.
- போர்க்களத்திற்கு பசுக்கள், பார்ப்பனர்கள், பெண்கள், நோயாளிகள், குழந்தை பெறாதவர்கள் முதலியவர்களை அப்புறப்படுத்தி பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சேர்த்துவிட்டு போர் செய்துள்ளனர். இது தமிழர்களின் மிக உயர்ந்த மரபு ஆகும்.
- மேலும், வீரர் அல்லாதவர், போருக்கு அஞ்சி ஓடுபவர்கள், புண்பட்டர்கள், முதியோர், இளையோர் ஆகியோர் மீதும் போர் செய்வதில்லை என புறநானூறு குறிப்பிடுகிறது.

**3. நட்பு**

- சங்ககாலத் தமிழர்கள் நட்புக்கு அதிக முக்கியத்துவம் அளித்து மதித்துள்ளனர்.
- திருவள்ளுவர், உள்ளத்தில் உண்மையான அன்பு கொள்வதே நட்பு என்கிறார்.
- கபிலரும் பறம்புமலை தலைவனான பாரியும் நட்பு கொண்டிருந்தனர். பாரி இறந்த பின்பு அவனது இரு மகள்களுக்கு கபிலர்தான் திருமணம் செய்து வைக்கின்றார். சேர மன்னன் செல்வக்கடுங்கோ என்னும் மன்னிடம் தன் வறுமை போக்க உதவி கேளாது நண்பனுக்காக உதவி கேட்பது நட்பின் ஆழத்தைக் காட்டுகிறது.
- கோப்பெருஞ்சோழன் தன் மக்களை விட்டு மனம் வருந்தி வடக்கிலிருந்து உயிர் துறக்க முயற்சிக்கின்றான். அதை கேள்விபட்ட பிசிராந்தையர் என்னும் புலவர் நட்பு கொண்டு தானும் வடக்கிலிருந்து உயிர்த் துறக்க விரும்பி உயிரை விடுகிறார்.
- திருவள்ளுவர் நட்பு குறித்து பேசும்போது, ஒருவன் தனது நண்பனை தீயவழியிலிருந்து மீட்டு நல்வழிப்படுத்தி, துன்பம் வரும்போது அவன் கூடவே இருந்து அத்துன்பத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும் இவற்றிற்கு மிகச்சிறந்த சான்று புலவர் பிசிராந்தையர் நட்பாகும்.
- அதியமான் நெடுமான் அஞ்சியின் வீரத்தை எடுத்துச் சொல்லிப் பாடிய ஔவையார் நடக்கவிருந்த பெரும்போரை தடுத்துள்ளார். குறிப்பாக, அதியமான் நீண்ட நாட்கள் உயிர் வாழக்கூடிய அமிழ்தினும் இனிய நெல்லிக்கனியை தான் உண்ணாது ஔவைக் கொடுத்தது. சங்க காலத்தில் நட்பு மதிப்பிற்குரிய ஒன்றாக போற்றப்பட்டுள்ளது.

**4. விருந்தோம்பல்**

- ‘விருந்து’ என்னும் சொல்லுக்கு ‘புதுமை’ என்று பொருள். உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அல்லாத புதியவராக வரும் மக்களை ‘விருந்தினர்’ என்று தமிழர்கள் உபசரித்தனர். முன்பின் அறிமுகமற்றவர்களையும் வீட்டுக்கு அழைத்து உணவு, இடம் அளித்து உபசரித்து மகிழ்ந்தவர்கள் தமிழர்கள்.
- திருவள்ளுவர் விருந்தோம்பலை பற்றிக் குறிப்பிடுகையில்,

  **‘செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
  **நல்விருந்து வானத் தவர்க்கு.’**

- சான்றோர்கள், அந்தணர்கள் ஆகியோருக்கு அறங்களை செய்யாது தவறிவிட்டேன் என்று கண்ணகி, வருந்தி கூறுவதாக சிலப்பதிகாரம் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பை உணர்த்துகிறது.
- வீட்டுக்கு வந்த விருந்தினர்களுக்கு உணவளிக்காமல், தான் மட்டும் வீட்டின் உள்ளே உண்பது. இவ்வுலகில் சாவாதிருக்கு மருந்தாகிய அமிழ்தத்தையே கொடுத்தாலும் வாங்கமாட்டர்கள். இதனை,

  **‘விருந்து புறத்ததார் தானுண்டல் சாவா**
  **மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று’**

  என்று வள்ளுவர், சங்க கால மக்களிடையே விருந்தோம்பல் பண்பு உயர்ந்திருந்தது என்பதை உணர்த்துகின்றார்.

**5. ஈகை**

- கொடையிலிருந்து வேறுபட்டது ஈகை. திருவள்ளுவர் ஈகைக்கு வரையறை சொல்லும்போது,

**'வறியார்க்குஒன்று ஈவதேஈகை மற்று எல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து'**

என்று வறுமையில் இல்லாதவனுக்கு கொடுப்பதுதான் ஈகை. பிற கொடைகள் எல்லாம் உதவிகள் எல்லாம் பலனை எதிர்பார்த்து செய்வது என்கிறார். எனவே உண்மையிலேயே இல்லாதவர்க்கு கொடுப்பதே ஈகை என்று புரிந்து கொள்ளலாம். பசியோடு வந்தவனுக்கு முதலில் உணவளித்து மகிழ்வித்ததையே செல்வமென்று எண்ணி சங்க கால மக்கள் வாழ்ந்தனர்.

**6. கொடை**

- சங்க காலத்தில் மன்னர்கள் கொடை வள்ளல்களாக திகழ்ந்தனர். தன்னை புகழ்ந்து பாடி வரும் புலவர்களுக்கு பொன்னையும் பொருளையும் கொடுத்தை சங்க இலக்கியங்கள் சான்றளிக்கின்றன.
- பாரி, ஓரி, காரி, பேகன், ஆய் அண்டிரன், அதியமான் ஆகியோர் கடையேழு வள்ளல்கள் ஆவர்.
- முல்லைப் பூ பற்றிக் கொண்டு வளர்வதற்காக தனது தேரையே கொடுத்துவிட்டு வந்தவன் - பாரி.
- மழையில் குளிரில் நடுங்கிய மயிலுக்கு தனது போர்வையை அளித்து வரலாற்றில் அழியாத புகழ் பெற்றவன் - பேகன்
- குறிப்பாக, பத்துப்பாட்டு நூல்களில் ஆற்றுப்படை நூல்கள் மன்னர்களின் கொடைத் தன்மைகளை எடுத்துக்கூறுகின்றன.
- மேலும், கல்வெட்டுகள், செப்பேடுகள் மூலமாக சங்க கால மன்னர்களின் கொடைத் தன்மையை அறியமுடிகிறது.

**7. கற்புடைமை**

- சங்க கால மக்கள் இல்லறம் நல்லறமாக நடந்ததை சங்க இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. பெண்கள் தான் இல்லறத்தை பாதுகாத்து கொண்டார்கள். குடும்பத்தில் இனிய சொற்களை பேசி கணவன், குழந்தைகள், பிற உறவுகள் என அரவணைத்து சோர்வடையாது பெண்கள் வாழ்ந்துள்ளனர். பெண்கள் கற்போடு இருந்துள்ளனர் என்பதை வள்ளுவர்.

**'தெய்வம் தொழாஅள் கொழுநன் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை'**

- அதிகாலையிலேயே சீக்கிரமாக எழுந்து கணவனின் காலை தொட்டு வணங்கிவிட்டு பின்னர் கணவனே கண்கண்ட தெய்வமாக கருதி வாழ்ந்து வருபவள். வானத்தை நோக்கி மழையே வருக என்று கூறினாள் மழை பெய்யும். இத்தகைய பண்புக்குரியவளே கற்புடைய பெண் எனப்போற்றப்பட்டுள்ளனர்.
- ஆண்களின் போர்களில் இறந்து விடுதலால் ஆண்கள் சதவீதம் குறைந்து இருந்திருக்க வேண்டும். அதனால் ஒரு ஆண் இரண்டு அல்லது மூன்று பெண்களை திருமணம் முடித்து வாழ்ந்து வந்துள்ளதை அறியமுடிகிறது.

**8. உலக ஒருமைப்பாடு**

- பண்டைத் தமிழர்கள் நாகரிக பண்பாட்டில் சிறந்து விளங்கினர்.
- உழவு, நெசவு, வாணிகம் போன்ற தொழில்களும் சிறந்து இருந்தன.
- தமிழர்கள், கடல் கடந்தும் வணிகம் செய்துள்ளனர். மேலும், அயல்நாடுகளிலும் தமிழர்களின் பண்பாடு, நாகரிகம், மொழி செல்வாக்கு பெற்று தந்துள்ளனர்.
- உலக ஒற்றுமையை ஒரே வரியில் உலகமே அறிய செய்தவர் கணியன் பூங்குன்றனார்.

**'யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா'**

என உலக மக்கள் அனைவரையும் உறவினர்கள் என்று கருதும் உயர்ந்த உள்ளம் தமிழர்களுக்கு மட்டுமே இருந்துள்ளது.

- **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** என்ற புறநானூற்று பாடல் வரிகள் ஐ.நா. சபையின் நுழைவு வாயிலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு கல்வெட்டில் வைக்கப்பட்டுள்ளது தமிழர்களாகிய நமது பண்பாட்டின் பெருமையை எடுத்துக்காட்டுகிறது.

**46. சுயமரியாதை இயக்கம் தோற்றமும், அதனால் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றமும் குறித்து விளக்குக.**

- திராவிடர் கழகம் என்பது சுயமரியாதை இயக்கத்திலிருந்து தொடங்குகிறது. இன்றைய இளைய தலைமுறையினர் சுயமரியாதை இயக்கத்தை பற்றி பேசுவதில்லை.
- சுயமரியாதை இயக்கம் என்பது சமூகத்தில் குறிப்பாக கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்விடம் போன்ற அடிப்படை உரிமைகள் மற்றும் மனித சமத்துவத்தை வலியுறுத்திய இயக்கமாகும்.
- தமிழகத்தில் 1925 ஆம் ஆண்டு ஈ.வெ.ராமசாமி அவர்களால் தொடங்கப்பட்ட இயக்கமாகும்.
- 1944 ஆம் ஆண்டு முதல் இவ்வியக்கம் திராவிடர் கழகம் என்று மாற்றப்பட்டது. திராவிடர்களின் நலனில் அக்கறை கொண்ட அரசியல் கட்சியாக செயல்பட்டது.
- 1919 ஆம் ஆண்டில் பெரியார் வணிகத் தொழிலை நிறுத்திவிட்டு காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்.
- 1922 இல் சென்னை இராசதானியில் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். திருப்பூரில் அரசுப்பணி, கல்வியில் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென காங்கிரஸிடம் ஆங்கில அரசுக்கு வலியுறத்த வேண்டிய நிலையில் கோரிக்கை நிறைவேறாததால் காங்கிரஸை விட்டு 1925 இல் வெளியேறி சுயமரியாதை இயக்கத்தை தொடங்குகின்றார்.
- வர்ணாசிர தர்மத்தை எதிர்க்கின்றார். தமிழகம் மட்டுமின்றி மலேசியா, சிங்கப்பூர் அங்கு வாழ்கின்ற இந்தியர்கள் என அனைவரும் பெரியாரின் சிந்தனைகளை ஏற்றுக்கொள்கின்றனர். சிங்கப்பூரில் தமிழவேள் ஜி சாரங்கபாணி தலைமையில் பெரியாரின் சிந்தனைகள் பரப்பப்படுகிறது.
- மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து மக்கள் மீட்டெக்கப்படுகின்றனர். மக்களை பகுத்தறிவின் அடிப்படையில் சிந்தித்து வாழ வலியுறுத்துகின்றார் பெரியார்.
- ஆணும் பெண்ணும் சமம், திருமணங்களுக்கு அந்தணர்கள் தேவையில்லை, சமய சடங்குகள் தேவையில்லை என சமத்துவத்தை வலியுறுத்தினார்.
- சாதி மறுப்பு திருமணம், கைம்பெண் திருமணம், குடும்பக்கட்டுபாடு என 1920களில் வலியுத்தினார் பெரியார்.
- கோயில்களில் பின்பற்றப்பட்டு வந்த தேவதாசி முறை, குழந்தைத் திருமணத்தை தடை செய்தல் வலியுறுத்தப்படுகிறது.
- இத்தகைய பரப்புரைகளை பெரியார் தன் முழுநேரப் பணியாக மேற்கொண்டு வந்தார். குடியரசு என்னும் இதழை 1925 தொடங்கி நடத்தி வந்தார். ஆங்கிலம் தெரிந்த மக்களுக்காக ரிவோல்ட் என்னும் பெயரில் இதழை நடத்தி வந்தார்.
- பெரியாரின் பயிற்சிப் பட்டறைகளில் உருவாகியவர்கள் தான் பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன் குறிப்பிடத்தக்கவர்கள்.
- சுயமரியாதை இயக்கம் ஒவ்வொரு மனிதனுக்கும் பயன்படக்கூடியதாக இருந்தது.
- குடும்ப வாழ்க்கையில் புரையோடி இருந்த சாதிய, மத கருத்துகளை உடைத்தது.
- சுயமரியாதை திருமணங்கள், சாதி மறுப்புத் திருமணங்கள் என பெரியார் பகுத்தறிவின் பகலவனாக திகழ்ந்தார்.

**47. இந்திய மருத்துவத்தில் சித்த மருத்துவத்தின் பங்கு குறித்து விளக்குக?**

- சித்தர்கள் துறவிகள் எனப்படுவர். சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது சித்த மருத்துவமாகும். சித்தா என்றாலும் சித்த மருத்துவத்தையே குறிக்கும். இயற்கை முறையிலான மருத்துவ முறையே சித்த

மருத்துவம் எனப்படும். சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் பதினெட்டு சித்தர்கள் என்பர். தமிழ் இலக்கியத்தில் சித்தர் இலக்கியம் என்ற வகையும் உண்டு.

**1. சித்த மருத்துவத்தின் வரலாறு**

- இந்தியாவின் வடக்கே ஆரியர்கள் பேசிய மொழி சமஸ்கிருதம் எனப்படும். தெற்கே பேசிய மொழி திராவிட மொழிகள் எனப்படும். திராவிட மொழிகளுள் ஒன்று தமிழ் ஆகும். மனிதன் நீண்ட நாட்கள் வளமுடன் வாழ்வதற்கு மருத்துவம் அடிப்படையாக இருந்தது. மனிதன் தோன்றிய காலம் முதலே மருத்துவமும் தோன்றியிருக்கலாம் என்பர்.
- சித்த மருத்துவம் தெற்கே தோன்றியது எனில் ஆயுர்வேதம் வடக்கே வளர்ச்சி பெற்ற மருத்துவ முறை எனப்படுகிறது. சித்த மருத்துவத்தை தோற்றுவித்தவர் தனிமனிதர் என்று குறிப்பிடாமல், மனித குலத்தை தோற்றுவித்த கடவுளின் பெயர் சூட்டப்படுகிறது. சிவனிடமிருந்து பார்வதிக்கும் நந்தி தேவருக்கும் பின்னர் சித்தர்கள் என்று பெயர்கள் மாற்றம் செய்யப்படுகிறது. தொடக்க காலங்களில் சித்தர்கள் அறிவியல் ஆராய்ச்சியாளர்களாக திகழ்ந்துள்ளனர்.
- சித்த மருத்துவத்தை தோற்றுவித்த சித்தர்களில் முதன்மையானவராக அகத்தியர் சொல்லப்படுகிறார். இவற்றிற்கு பல சான்றுகள் அகத்தியரின் மருத்துவ முறைகள் என்னும் நூலில் காணப்படுகின்றன.

**2. சித்த மருத்துவத்தின் அடிப்படை**

- சித்த மருத்துவக் கோட்பாடுகள் மற்றும் முறைகள் ஆயுர்வேத முறைகளை ஒத்ததாக இருக்கும். மனித உடல் இயற்கை சார்ந்து இருப்பதை ஆயுர்வேத மருத்துவம் ஏற்றுக்கொள்கிறது. நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய ஐம்புலங்களையும் உடல் உள்வாங்கிக் கொண்டு செயல்படுகிறது.
- சித்த மருத்துவ முறையில் பல உட்பிரிவுகள் உள்ளன. அவற்றுள் கழிவுகளாகிய மலம், சிறுநீர், வியர்வை முதலியவை மனித உடலின் முக்கிய மூலக்கூறுகள் எனப்படும். இக்கழிவுகள் தான் மனித உடலின் திசுக்களை வளர்க்கிறது. தேவையற்ற கழிவுகள் என வெளியேற்றுகிறது. இச்செயல்கள் முறையாக நடைபெறும் பொழுது உடல் நலம் பெறுகிறது. இச்சமநிலையில் மாற்றங்கள் ஏற்படும் பொழுது உடலில் நோய்கள் உருவாகின்றன. உடலை சமநிலையில் வைக்கும் பொழுது ஆரோக்கிய வாழ்க்கை வாழமுடிகிறது. மேலும். உடல் சமநிலையில் இருப்பதற்கு அடிப்படையாக மருத்துவமும் - தியானமும் அவசியமாகின்றன.

**3. சித்த மருத்துவத்தில் வேதியியல்**

- சித்த மருத்துவத்தில் வேதியியல் பெரும்பங்கு வகிக்கிறது. மருந்துகள் தயாரிப்பதற்கும் அடிப்படை உலோகங்களை தங்கமாக மாற்றுவதற்கும் வேதியியல் துணைபுரிகிறது. செடிகள், உலோகங்கள், கனிமங்கள் ஆகியவைகள் வேதியியல் துறையில் ஆராயப்படுகின்றன. சித்தர்களும் வேதியியல் மாற்றங்களை நன்கு அறிந்திருந்தனர். காய்ச்சி வடிகட்டுதல், ஆவியாக்குதல், கலவை செய்தல், உருக்கி கலக்குதல், புளிக்க வைத்தல், பொங்க வைத்தல் போன்ற வேதியியல் முறைகளை சித்தர்கள் கையாண்டுள்ளனர். தங்கத்தை பிரித்தெடுத்தல், சுத்தப்படுத்துதல், நீர்மநிலையாக்குதல் ஆகிய முறைகளையும் பயன்படுத்தி உள்ளனர். அரேபியர்கள் தங்கத்தையும் வெள்ளியையும் சுத்தமாக்கும் முறைகளை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சித்தர்கள் அந்நுணுக்கங்களை தெரிந்து வைத்திருந்தனர்.
- மருந்து தயாரிப்பில் பல முறைகளை சித்தர்கள் கையாண்டுள்ளனர். உதாரணமாக, நெருப்பில் எளிதாக வாயுநிலையை அடையக்கூடிய பாதரசம், கந்தகம், அர்செனிக், வெர்மில்லியன் முதலியவைகள் வினைபுரியாமல் செய்வது இன்றும் ஆச்சரியப்பட செய்கின்றது.

**4. சித்த மருத்துவத்தின் பலம்**

- ஆபத்து காலத்தில் அவரசப்பிரிவு சார்ந்த சிகிச்சை முறைகள் மட்டுமே சித்த மருத்துவ முறையில் இல்லையே தவிர, அனைத்து நோய்களுக்கும் சித்த மருத்துவத்தில் குணப்படுத்தப்படுகிறது. சோரியாசிஸ், சிறுநீரக தொல்லைகள், தோல் வியாதிகள், கல்லீரல், வயிறு பிரச்சனைகள், ஒவ்வாமை, காய்ச்சல் முதலிய நோய்களுக்கு தேவையான அளவில் மருத்துவ வசதிகளும் பயன்பாட்டில் உள்ளது.

- நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளித்தல்
- முதலில் நோய்க்கான காரணங்கள் அறியப்படுகின்றன.
- நாடி, சிறுநீர், கண்கள், வாய், குரல், தோலின் நிறம், நாக்கு, செரிமான முறைகளின் தன்மைகள் முதலியவை ஆராயப்படுகின்றன.
- சிறுநீரின் தன்மையை அறிவதற்கு, அதன் நிறம், மணம், அடர்த்தியான, அளவு, எண்ணெய் மாதிரியான வழவழப்பான தன்மை ஆகியவை கவனத்தில் கொள்ளப்படுகின்றன.
- நோயின் தன்மை கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளித்து நலம் பெற செய்யப்படுகிறது.
- நோயாளியின் சுற்றுப்புறச் சூழல், வயது, பாலினம், வகுப்பு, பழக்கவழக்கங்கள், மனநிலை, தங்குமிடம், உணவு மற்றும் கட்டுப்பாடு ஆகியனவற்றை கருத்தில் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதனால் நோயின் தன்மை குறைந்து நோயாளி முழுமையாக குணமளிக்கப்படுகிறான்.

**48. கல்வெட்டுகள் குறித்து விளக்குக?**

**1. கல்வெட்டுகள், கையெழுத்துப்படிகள்**

பண்டைக் காலத்தில் நீண்ட காலம் அழியாதிருக்க வேண்டும் எனக் கருதப்பட்ட செய்திகள் கற்களில் வெட்டப்பட்டன. இவ்வாறு கல்லில் பொறிக்கப்பட்ட செய்தியே கல்வெட்டு எனப்படுகின்றது. பெரும்பாலும், மன்னர்களின் ஆணைகள், அவர்கள் செய்த பணிகள் போன்றவை கல்வெட்டுக்களாகப் பொறிக்கப்பட்டன. இவை தவிர வீரர்கள், பிரபுக்கள், அதிகாரிகள் போன்றோர் தொடர்பிலும், முக்கிய நிகழ்வுகள் தொடர்பிலும் கல்வெட்டுக்கள் உள்ளன.

கல்வெட்டுக்கள்,பெரும்பாலும் பொதுமக்கள் பார்ப்பதற்காக வெட்டப்படுவதால் இவை பொது இடங்களிலேயே அதிகம் காணப்படுகின்றன. கோயில்கள்,குகைகள், பொது மண்டபங்கள், வெற்றித் தூண்கள், நடுகற்கள் எனப்படும் இறந்தோர் நினைவுக் கற்கள் என்பவற்றில் கல்வெட்டுகளைக் காணலாம். கல்வெட்டு பொறிக்கும் வழக்கம் உலகின் பல பகுதிகளிலும் காணப்பட்டுள்ளது. தொல்லியல் ஆய்வுகள் இறந்துபட்ட அல்லது இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்வேறு மொழிகளிலுமான கல்வெட்டுக்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளன.

கல்வெட்டுக்கள் பல ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கக் கூடியவை. ஆதலால், மிகப் பழங்கால வரலாற்றுச் செய்திகள், நிகழ்வுகளுக்கான நம்பகமான சான்றுகளாக இவை திகழ்கின்றன. பல கல்வெட்டுக்கள் ஒரு மொழியில் மட்டுமின்றி. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளிலும் ஒரே செய்தியைக் குறிக்கும்படி அமைந்துள்ளன. இத்தகைய கல்வெட்டுக்கள் வழக்கொழிந்து மறக்கப்பட்டுவிட்ட மொழிகள் பலவற்றை வாசித்து அறியவும் அவற்றை மீட்டுருவாக்கம் செய்யவும் உதவுகின்றன. பண்டைய எகிப்திய மொழி இவ்வாறு மீட்டுருவாக்கம் செய்யப்பட்டதே. பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த கல்வெட்டுக்களை ஆய்வு செய்வதன் மூலம் எழுத்துக்களின் படிமுறை வளர்ச்சிகளையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**2. தமிழ் நாட்டில் கல்வெட்டுக்கள்**

தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டுக்களின் ஒரு பகுதி. தமிழ் நாட்டின் மிகப் பழைய கல்வெட்டுக்கள் நடுகற்களில் வெட்டப்பட்டவை ஆகும். தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல்களிலுள்ள செய்திகளும் இதற்குச் சான்றாக அமைகின்றன. தொல்காப்பியத்தில், போர்க்களத்திலே வீரமரணம் அடைந்தோருக்குக்கல்லெடுத்தலும், அக்கல்லில் அவர்தம் வீரச் செயல்களைப் பொறித்தலும் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறாக நடுகற்களில் தோன்றிய கல்வெட்டுக்கள் பல்லவர் காலத்தில் வேறு தேவைகளுக்கும் பயன்படத் தக்கதாக வளர்ச்சியடைந்தன. பல்லவர்களின் தொடக்க காலக்

கல்வெட்டுக்கள் பிராகிருத மொழியிலும், இடைக்காலத்தில் சமசுகிருதத்திலும் கி.பி ஆறாம் நூற்றாண்டு முதல் பிற்காலப் பல்லவர் காலத்தில் தமிழிலும் பொறிக்கப்பட்டன.

இவர்களுக்குப் பின்னர் சோழ மன்னரும், பாண்டியரும் கல்வெட்டுக்களைப் பொறிக்கும் வழக்கம் உடையோராக இருந்தனர். இதனால் கல்வெட்டுக்கள் பெரிதும் வளர்ச்சியுற்றன.இவ்வாறு பொறிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களின் மூலமே தமிழ் நாட்டின் இடைக்கால வரலாற்றின் பெரும்பகுதியை அறிந்து கொள்ள முடிந்தது.

2005 ஆம் ஆண்டு இந்தியத்தொல்லியல்ஆய்வுமையம் வெளியிட்ட அறிக்கையின்படி உலகிலேயே இலத்தீனுக்கு அடுத்ததாக இந்தியாவில் சுமார் 100,000 கல்வெட்டுகள் உள்ளது. இதில் 60,000 கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் உள்ளன.

தமிழ்நாட்டின், ஆதிச்சநல்லூர் புதைபொருட்களில் பெருங்கற்காலக் குறியீடுகள் மற்றும் தமிழி எழுத்துகள் காணப்படுகின்றன.

கீழடி அகழ்வாய்வு மையத்தில் தமிழ் கல்வெட்டுகளுடன் பல்வேறு கட்டமைப்புகள் மற்றும் கலைப்பொருட்கள்,மட்பாண்டங்களில் தமிழ் பெயர்களான ஆதன், உத்திரன், குவிரன்-ஆதான், திசன் போன்றவை காணப்படுகின்றன.

### 3. கையெழுத்துப்படிகள்

பாறைகளில் எழுதி வந்த தமிழர்கள் பிற்காலத்தில் பனையோலையைப் பயன்படுத்தத் தொடங்கினர். எழுதுதாள் கண்டுபிடிக்கப்பட்ட காலம்வரை பனையோலையில் எழுதுகின்றமுறை ஆசியநாடுகள் அனைத்திலும் இருந்திருக்கிறது. இவ்வாறு எழுதப்பட்ட அனைத்தும் எழுத்தோலைகள் எனப்படுகின்றன. நூலாக எழுதப்பட்ட ஓலைகள் கட்டித் தொகுக்கப்பட்டன. இவற்றைப் பொத்தகம் என்றும், பொத்தகக்கவளி என்றும் வழங்குவர். இதிலிருந்து உருவானதே புத்தகம் எனும் சொல்.

கையெழுத்துப்படி அல்லது எழுத்துப்பிரதி எனப்படுவது கையால் எழுதப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஆக்கத்தின்படி ஆகும். இதனை அச்சுப்படி அல்லது எண்ணிமப்படியில் இருந்து வேறுபடுத்திப்பார்க்கலாம். தமிழ்ச்சூழலில் அச்சுக்காலத்துக்கு முன்பு அனைத்து ஆக்கங்களும் கையெழுத்துப்படிகளாகவே அமைந்தன. சுவடிகளும் இவற்றுள் அடங்கும்.

பதமுள்ள பனையோலையைப் தேர்ந்தெடுப்பர். அளவுக்குத் தக்கவாறு நறுக்குவர் . குழந்தைக்கு நகம் வெட்டுவது போல் நளினமாக அதன் நரம்பைக்களைவர். நிழலில் உலர்த்துவர்.பனியில் பதப்படுத்துவர் இளக்கமுறுமாறு இளஞ்சூட்டு வெந்நீரில் வெதுப்புவர். பளபளப்பான சங்கு அல்லது கல்லைக் கையில் வைத்துக்கொண்டு ஓலையை அழுத்தி அழுத்தித் தேய்த்து அழகுபடுத்துவர். பக்குவமாகப் பாடம் செய்வர். பாடம் செய்வது என்பது ஓலைகளை அடுக்கிக்கட்டி முறுக்காமல் இருக்கச் செய்தல். மஞ்சள் நீரிலோ, அரிசிக் கஞ்சியிலோ ஊறவைப்பர். சுவடிக்கட்டில் இரண்டு இடத்தில் சுள்ளாணியால் துளைபோடுவர். ஒருமுனையில் ஒருதுளையில் கயிறு கோத்து ஒலையைப் பிரித்துப் புரட்டுமாறு தளர்வாகக்கட்டிக் கொள்வர். ஒவ்வொரு ஓலை மீதும் மஞ்சளையும் வேப்பெண்ணெயையும் கலந்துபூசுவர். கோவை இலை, ஊமத்தை இலை அகியவற்றின் சாறுகளைப் பூசுவர். மாவிலை, அறுகம்புல் ஆகியவற்றை எரித்த கரியை மையாகத்தடவுவர். இதன்மேல் தான் எழுத்தாணி கொண்டு எழுதுவர். ஓலையின் மறுமுனைத்துளையிலும் கயிறு கோத்துப் பொத்தகமாகக் கட்டுவர்
.

S.MARTIN RAJA, AP, TAMIL, JCE

### 3.1. எழுத்தோலையின் அளவு

ஒவ்வொருவருக்கும் பாட்டெழுதும் போது குறிப்பிட்ட அளவு (விரற்கடை அளவு) எழுத்தோலையைப் பயன்படுத்த வேண்டுமென்பதைக் கூட பாட்டியல் நூல்கள் வரையறை செய்துள்ளன. இதன்படி நான்மறையாளர்க்கு 24 விரற்றானமும், அரசருக்கு 20 விரற்றானமும், வணிகருக்கு 18 விரற்றானமும், வேளாளர்க்கு 12 விரற்றானமும் இருக்க வேண்டும் என்று கீழ்காணும் கல்லாடனார் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெண்பாவில்

"அந்தணர்க்கு நாலா றரசர்க் கிருபதாம்
இந்த விரல் வணிகர்க் கெண்ணிரண்டாம்- முந்துவிரல்
வேளாளர்க் கீராறாய் வெள்ளோலை வேயனைய
தோளாய் அறிந் தொகுத்து" இந்தக் கருத்து பொய்கையார் பாடலிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஓலைய திலக்கணம் உரைக்குங் காலை
நாலாறு விரலாம் நான்மறை யோர்க்கே
பாருடை யோர்க்கும் பதிற்றிரண் டாகும்
வணிகர்க் கீரெண் விரலாகும்மே
சாணென மொழிய சூத்திரக் களவே."

### 49. சுவடிகள் குறித்து விவரித்து எழுதுக.

**1. ஓலைகளின் வகைகள்**

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**1. நீட்டோலை:** திருமணம் மற்றும் இறப்புச் செய்திகளுக்கான ஓலை "நீட்டோலை" என அழைக்கப்பட்டன.

**2. மூல ஓலை:** ஓலைச் செய்தியைப் படியெடுத்து வைத்துக் கொள்ளும் முறை அந்தக் காலத்திலேயே இருந்துள்ளது. இந்த ஓலைகளை "மூல ஓலை" என அழைத்தனர்.

**3. சுருள் ஓலை:** ஓலை ஆவணங்கள் நாட்டுப்புற மகளிர் அணிந்து வந்த சுருள் வடிவமான காதோலை போல் சுருட்டி வைத்துப் பாதுகாக்கப்பட்டன இவை "சுருள் ஓலைகள்" எனப்பட்டன. இதை "சுருள்பெறு மடியை நீக்கி" என பெரியபுராணத்திலுள்ள பாடல் மூலம் அறிய முடிகிறது.

**4. குற்றமற்ற ஓலை:** மூளியும் பிளப்பும் இல்லாத ஓலை "குற்றமற்ற ஓலை" எனப்பட்டது.

**5. செய்தி ஓலைகளின் வகைகள்:** எழுத்தோலைகளில் உள்ள செய்திகளைக் கொண்டும் அவை தனிப் பெயர்களில் அழைக்கப்பட்டன.

**6. நாளோலை:** தமிழகத்திலுள்ள கோவில் செய்திகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ஓலை நாளோலை" எனப்பட்டது.

**7. திருமந்திர ஓலை:** அரசனது ஆணைகள் எழுதப்பட்ட ஓலை "திருமந்திர ஓலை எனப்பட்டது. இதை எழுதுவதற்காக அரசவைகளில் ஓலை நாயகம் என்பவர் இருந்தார். அரசனது ஆணைதாங்கிய எனப் பொருள்படும் "கோனோலை" "சோழகோன் ஓலை" போன்ற சொற்கள் செப்பேடுகளில் காணப்படுகின்றன.

**8. மணவினை ஓலை:** திருமணச் செய்தியைத் தெரிவிக்கும் ஓலை "மணவினை ஓலை" எனப்பட்டது.இதன் மூலம் திருமணச் செய்தி உற்றார் உறவினர்க்குத் தெரியப்படுத்தியது.

### 50. அச்சுக்கலை பற்றி விவரித்து எழுதுக.

அச்சு இயந்திரம் என்பது காகிதத் தாளில் எழுத்துக்களை பதிக்கவும் ஒரே வகையான பக்கங்களை மிக வேகமான முறையில் பல படிகள் எடுக்கவும் உதவும் ஒரு இயந்திரம் ஆகும்.

முதல் அச்சியந்திரம் 1450 ஆம் ஆண்டு ஜெர்மனியைச் சேர்ந்த யொகான் குட்டன்பெர்க் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. முதலில் பரவலாக ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பயன்பாட்டுக்கு வந்தது. பின்னர் உலகம் முழுவதும் பயன்படுத்தத் தொடங்கினர் . பொதுவாக அச்சு இயந்திரங்களை உள்ளடக்கிய ஒரு தொழிலகம் அச்சுக்கூடம் எனப்படுகிறது.

இந்திய மொழிகளிலேயே முதன் முதலில் ஒரு நூல் அச்சு வடிவம் பெற்ற பெருமையை தமிழ் மொழியே பெறுகின்றது. இப்பெருமைக்கு ஆதராமாக விளங்கும் தம்பிரான் வணக்கம் (Doctrina Christam) 1578 ஆண்டில் கொல்லத்தில் வார்க்கப்பட்ட திருத்தமான தமிழ் அச்செழுத்துக்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. 14 × 10 செ.மீ அளவு காகிதத்தில் பதினாறே பக்கங்கள் கொண்ட சிறிய நூல் இது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காகிதத்தில் ஒரு பக்கம் சிவப்பு வர்ணத்திலும் மறு பக்கம் வர்ணமில்லாமலும் உருவாக்கப்பட்ட கத்தோலிக்க மறை நூல் இது நூலின் மேல் புறமும் கீழ்புறமும் ஐரோப்பிய வெள்ளை நிறக் காகிதங்கள் வைத்து தைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நூலின் ஒரு பிரதி மட்டுமே இதுவரை ஆய்வாளர்களின் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1951 முதல் இந்த நூலின் தற்போது கிடைக்கக்கூடிய ஒரே பிரதி அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக்கழக நூலகத்தின் தொன்மையான நூல் வகையைச் சார்ந்த கிளை நூலகமான ஹௌடன் நூலகத்தில் (Houghton Library) பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

மோ நேவிஸ் விக்டோரியாவின் "தம்பிரான் வணக்கம் தமிழ் மொழியின் முதல் அச்சு புத்தகம்" நூல் 125 பக்கங்களைக் கொண்டது. எளிமையான முகப்புடன் தம்பிரான் வணக்கம் எனும் நூலின் முதல் பக்கத்தையே அட்டைப் படமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நூல். "தமிழ் அச்சுத் தந்தை அண்ட்ரிக் அடிகளார்" என்ற நூலை எழுதிய பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களின் முன்னுரையோடு இன்னூல் வந்திருக்கின்றது என்பதும் கூடுதல் சிறப்பாக அமைகின்றது.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

ஓலைச் சுவடிகளில் இருந்த தமிழ் இலக்கியங்களையும். ஆவணங்களையும், பல்வேறு செய்திகளையும் தேடியெடுத்து அவற்றை பதிப்பிக்கும் தமிழ்ப்பணியில் பல தமிழறிஞர்கள் பத்தொன்பதாம். இருபதாம் நூற்றாண்டுகளில் ஈடுபட்டு பல அரும் பெரும் இலக்கியங்களைச் சாதாரண மக்களும் வாசித்து புரிந்து கொள்ளும் வகை செய்தனர். இப்பணி முற்றுப் பெற்றிடவில்லை என்பதை நாம் அறிவோம். நூல் பதிப்பாக்கத்திற்குப் பல்வேறு தொழில்நுட்ப வாய்ப்புக்கள் அமைந்துள்ள இந்த 21ம் நூற்றாண்டில் தனியார் பலரும் பல்கலைக் கழகங்களும் ஆய்வு நிறுவனங்களும் ஓலைச் சுவடி பதிப்புக்களை அச்சுப் பதிப்பாகவும், புதிய தொழில் நுட்பத்தின் துணை கொண்டு நீண்ட காலம் பாதுகாக்கும் வகையினில் பல முயற்சிகளில் ஈடுபட்டும் பதிப்பித்தும் வருகின்றன. ஆரம்பத்தில் ஓலைச் சுவடி பதிப்பாக இருந்த நூல்கள், அச்சுப் பதிப்பாக எளிய வகையில் கையாள்வதற்கு ஏதுவாக வந்த பிறகு இவ்விலக்கியங்கள் பரவலாக வெளியீடு செய்வதற்கு வாய்ப்பாக அமைந்தன. தமிழறிஞர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் உயர் மட்ட சமூகத்தினருக்கும் மட்டுமே கல்வி என்ற நிலையை மாற்றி எளியோரும் சாதாரண மக்களும் கூட தமிழ் நூல்களை வாசிக்கவும் அவற்றின் பொருள் புரிந்து கொள்ளவும் முடியும் என்ற கல்விப் புரட்சி ஏற்பட அடிப்படைக் காரணமாக அமைந்தது அச்சுப் பதிப்பாக்க முயற்சிகள் என்பது மறுக்க முடியாத கருத்து.

அச்சுக்கலை தமிழகத்தில் எப்போது தோன்றியது? அதற்கான வரவேற்பு எப்படி இருந்தது? யார் இவ்வகை முயற்சிகளில் ஈடுபட்டோர்? எவ்வகை நூல்கள் தமிழ் மொழியில் முதன் முதலாக அச்சு பாதிப்பாக்கம் கண்டன போன்ற கேள்விகளுக்கான விடைகள் தமிழ் கற்ற பலருக்கும் தெரிந்திருக்குமா என்பது

ஐயமே!இக்கேள்விகளுக்குப் பதிலளிக்கும் ஒரு நூலாக "தம்பிரான் வணக்கம் -தமிழ் மொழியின் முதல் அச்சு புத்தகம்" நூல் அமைகின்றது.

வணிகத்தைக் காரணமாகக் கொண்டு அத்துடன் கிறிஸ்துவ சமயம் பரப்பும் மதபோதகர்களாக தமிழகம் வந்த போர்த்துக்கீஸிய கத்தோலிக்க மத குருமார்களும், ஜெர்மனியிலிருந்து டேனீஷ் அரசரின் ஆதரவுடனும், பொருளாதர பலத்துடனும் தமிழகம் வந்த ப்ரோட்டெஸ்டண்ட் மத குருமார்களும் பல குறிப்பிடத்தக்க தமிழ்ப்பணிகளை ஆற்றியுள்ளனர் என்பதை நமக்குக் கிடைக்கின்ற பல்வேறு சரித்திர ஆவணங்கள், நூல்கள் குறிப்புக்களில் காண்கின்றோம். இம்மத குருமார்களின் அப்பணிகளிலேயே சிகரம் வைத்தது போல அமைந்தது அச்சுக் கலையை தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தி வைத்தமையே எனலாம்.

கத்தோலிக்க, ப்ரோட்டெஸ்டண்ட் கிறிஸ்துவ சமயத்தைத் தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் பரப்புவதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்த இம்மத குருமார்களுக்கு மொழி எனும் அடிப்படைச் சாதனம் இருந்தால் ஒழிய இப்பணியை எவ்வகையிலும் செய்வது சாத்தியப்படாது என்பதை அறிந்ததன் விளைவாக தமிழ் மொழியைத் தாமே முதலில் கற்றல் பின்னர் அம்மொழியில் மக்களுடன் மக்களாகக் கலந்து உரையாடி. அவர்களுக்கு இப்புதிய மதமான கிறிஸ்துவ மறையில் ஈடுபடுத்துதல் என்ற வகையில் தங்கள் பணிகளைச் செய்தனர். அதில் அச்சுப் பதிப்பாக்கம் முக்கியப் பங்கு வகித்தது என்பது மறுக்க முடியாத ஒன்று. கிறிஸ்துவ மத போதனையைப் பறப்ப வந்த இந்த ஐரோப்பிய மதபோதகர்கள் உள்நாட்டில் தமிழ்ச் சன்றோர்களின் வழக்கத்தில் இருந்த சுவடி படித்தலைக் கறுக் கொண்டதோடு எழுத்தாணி பிடித்து எழுதும் ஆற்றலையும் பழக்கிக் கொண்டனர் என்னும் செய்திகள் தீவிரத்துடனும் ஆர்வத்துடனும் அவர்கள் புதிய இடத்தில் தங்கள் பணிகளைச் செய்யத் தங்களைத் தயார் படுத்திக் கொண்டமையை நன்கு உணர்த்தும்.

தமிழ் மொழியின் முதல் நூலை பற்றி விளக்கும் சில கட்டுரைகளும் முன்னரே வெளிவந்திருக்கின்றன. 2001-ஆம் ஆண்டு செட்டியார் பதிப்பகத்தின் வெளியீடாக வந்த சேலம் தமிழ்நாடனின் "தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகம்" இவ்வகையிலான ஒரு குறிப்பிடத்தக்க நூல் என்பதில் ஐயமில்லை. அச்சுக்கலை, அச்சுப் பதிப்பு முறைகள், காகிதத்தின் வரலாறு. காகிதப் பயன்பாடு ஐரோப்பாவிற்கு அறிமுகமான தகவல்கள், அச்சுக்கட்டைகள் உருவாக்கம் எனப் பல விஷயங்களை விளக்கும் ஒரு கருவூலம் இந்தச் சிறிய நூல். இதில் தமிழ் மொழியின் முதல் எழுத்துப் பெயர்ப்பு வடிவ அச்சு நூல் கார்டிலா, தமிழ் மொழியில் வெளிவந்த முதல் அச்சுப் பதிப்பான தம்பிரான் வணக்கம், தமிழ் மொழியில் வெளிவந்த இரண்டாவது அச்சுப் பதிப்பான கிரிசித்யானி வணக்கம், தமிழ் மொழியில் வெளிவந்த மூன்றாவது அச்சுப் பதிப்பான கன்பெசனரியோ பற்றிய விளக்கங்களும் அறிமுக உரைகளும் உள்ளன. முதல் தமிழ் அச்சுப் புத்தகத்துக்கு மூலகாரணமாக இருந்த அன்டிறிக்கி அடிகளாரின் (Hendriq Henriquez) வரலாறும் மேலும் பல தகவல்களும் கூட இடம்பெறுகின்றன. அத்துடன் தம்பிரான் வணக்கம் நூல் முழுதாக இந்த நூலில் இணைக்கப்பட்டுள்ளதோடு அதன் தமிழாக்கமும் வழங்கப்பட்டுள்ளது. இவை மட்டுமல்லாது கிரிசித்தியானி வணக்கம், கன்பெசனரியோ ஆகிய நூல்களின் பக்கங்களும் இணைக்கப் பட்டுள்ளன. அவ்வகையில் இதே கருத்தினை மையமாகக் கொண்டு வெளி வந்திருக்கும் மற்றுமொரு நூலாக மோ.நேவிஸ் விக்டோரியாவின் "தம்பிரான் வணக்கம் -தமிழ் மொழியின் முதல் அச்சு புத்தகம்" விளங்குகின்றது. பின்னர் பல மடங்கள் அவரவர் சமய நூல்களை மிகுதியாக அச்சாக்கம் செய்தனர்.

**51. சங்கஇலக்கிய பதிப்புப் பற்றி விளக்கி எழுதுக.**

தமிழின் தனிப்பெருஞ்செல்வமாக விளங்குவது சங்க இலக்கியமாகும். தொன்மைவாய்ந்த இவ்விலக்கியங்கள் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே அச்சுருவம் பெற்றுத் தமிழ் ஆர்வலர்க்குப் பெருவிருந்தாய்க் கிடைத்தன.

**1. முதற் பதிப்புகள்**

கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையை முதன் முதலில் பதிப்பித்தவர் தமிழ்த்தந்தை எனப் பல்லோராலும் அழைக்கபெறும் இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஆவார். 1887-ஆம் ஆண்டில் முதற்பதிப்பாகக் கலித்தொகை, தமிழ் உலகிற்கு அறிமுகமானது. அவருடைய பதிப்புப் பணிக்குப்பின் தமிழ்த்தாத்தா என அழைக்கப்பெறும் டாக்டர். உ.வே. சாமிநாதையர் அவர்களுடைய முதற்பதிப்பாகிய பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும் 1889-இல் வெளிவந்தது. இப்பதிப்பிற்குப்பின் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றினை 1894-இல் பதிப்பித்தார்.1903-ல் ஐங்குறுநூற்றினைப் பதிப்பித்தார். 1904-இல் பதிறுப்பத்தினை வெளியிட்டார். நற்றிணை பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் எழுதிய உரையுடன் சென்னை சைவ வித்தியாநுபாலன யந்திரசாலையில் 1915 இல் வெளியிடப்பெற்றது. இவருடைய பதிப்புப்பணியைப் பின் தொடர்ந்து சௌரிப் பெருமாள் அரங்கனார் குறுந்தொகையை அழகிய முறையில் பதிப்பித்து 1915 இல் வெளியிட்டார். 1918 இல் வெளியிட்ட பரிபாடலானது .வே.சாவின் முதற்பதிப்பாக வெளிவந்தது. ரா.ராகவையங்கார் அவர்கள் அகநானூற்றினை முதற்பதிப்பாக 1920 இல் கம்பர் விலாசம் இராஜகோபாலையங்கார் மூலம் வெளியிட்டார்.

**I. பத்துப்பாட்டின் பிற பதிப்புகள்**

இதுவரை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களுக்கு ஏராளமான பதிப்பு நூல்கள் தோன்றியுள்ளன.ஆய்வுப்பதிப்பு, மூலப்பதிப்பு. மலிவுப்பதிப்பு எனப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இனி ஒவ்வொரு பதிப்பாசிரியர்களுடைய நூல்களையும் தனித்தனியாகக் காணலாம். பொ.வே.சோமசுந்தரனார் அவர்கள் பத்துப்பாட்டினை இரு பகுதிகளாக வெளியிட்டுள்ளார். அவருடைய மறுபதிப்பு விவரம் வருமாறு: முதற்பதிப்பு 1956, 1962, 1966, 1968, 1971.

S MARTIN RAJA, AP, TAMIL, IGCE

1961 ஆம் ஆண்டில் வை.மு.கோபால கிருஷ்ணமாசாரியாருடைய பத்துப்பாட்டுப் பதிப்பு வெளிவந்துள்ளது. மலிவுப்பதிப்பாக மர்ரே பதிப்பு 1957 இல் முதற்பதிப்பாகவும், 1981 இல் (என்.சி.பி.எச் வெளியீடு) இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது.

**3. திருமுருகாற்றுப்படை**

பத்துப்பாட்டில் தனித்தனியாகவும் சில நூல்களை உரையாசிரியர்கள் வெளியிட்டுள்ளனர். திருமுருகாற்றுப்படையினை வெளியிட்ட பல்வேறு உரையாசிரியர்களுடைய காலவரிசை வருமாறு: 1902-3 திருமுருகாற்றுப்படையினைத் சரவணப்பெருமாளையர் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். பின்னர் 1917-இல் முதற்பதிப்பாக வெளியிட்ட ஆறுமுக நாவலர் 1947-3 oύ 16- ف பதிப்பாகவும் வெள்யிட்டார்." திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகர் உரையும்" என்ற தலைப்பில் 1924-இல் மகாதேவ செட்டியார் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். 1927- இல் "திருமுருகாற்றுப்படைச் சிற்றாராய்ச்சி" என்ற பதிப்பு நூலினைத் எம். ஆறுமுகப்பிள்ளை அவர்கள் வெளியிட்டார். திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரையினை 1937-இல் பண்டிதர் சு.அருணம்பலம் அவர்கள் வெளியிட்டார். 1937-3 "திருமுருகாற்றுப்படை மூலமும் பொருட்சுருக்கமும் பதவுரையும் குறிப்பும்" என்ற தலைப்பில் தை ஆ கனகசபாபதி முதலியார் அவர்கள் பதிப்பித்தார். 1945- வை.மு.கோ.பதிப்பும் வெளிவந்தது. ஏறத்தாழ திருமுருகாற்றுப்படைக்கு மட்டும் பதினைந்து உரையாசிரியர்கள் உரை எழுதி பதிப்பித்துள்ளனர்.

**4. பொருநராற்றுப்படை**

பொருநராற்றுப்படைக்கு இரு உரையாசிரியர் உரை எழுதியுள்ளனர். மகாதேவ முதலியார் மற்றும் பொ.வெ.சோமசுந்தரனார் ஆவர்.

**5. சிறுபாணாற்றுப்படை**

சிறுபாணாறுப்படைக்கு நான்கு உரையாசிரியர்கள் உரை எழுதிப் பதிப்பித்துள்ளனர். (வை.மு.கோ. வி. கந்தசாமி முதலியார், மு. பி. பாலசுப்பிரமணியன் பொ.வே.சோமசுந்தரனார்)

**6. பெரும்பாணாற்றுப்படை**

வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார். ரா.ராகவையங்கார். பொ.வே.சோமசுந்தரனார், சு.அருணம்பலம் முதலான உரையாசிரியப் பெருமக்களும் உரை எழுதிப் பதிப்பித்துள்ளனர்.

**7. முல்லைப் பாட்டு**

முல்லைப்பாட்டிற்கு மட்டும் 1927-இல் உ. வே. சா. அவர்கள் உரை எழுதியுள்ளார். 1903-இல் மறைமலையடிகள் அவர்களுடைய முதற்பதிப்பாக முல்லைப்பாட்டு வெளிவந்துள்ளது. தவிர வை.மு.கோ.கனகசபாபதி முதலியார், க.ப.சந்தோஷம், பொ.வே.சோமசுந்தரனார், முதலானோர் எழுதிய உரைகளும் வெளிவந்துள்ளன.

**8. மதுரைக்காஞ்சி**

மதுரைக்காஞ்சிக்கு பொ.வே.சோமசுந்தரனார் அவர்கள் எழுதிய உரை மட்டும் கழ வெளியீடாக வெளிவந்துள்ளது. (முதற்பதிப்பு 1956)

**9. நெடுநல்வாடை**

நெடுநல்வாடைக்கு வை.மு.கோபாபாலகிருஷ்ணமாசாரியார் பதிப்பும் (1931) பொ.வே.சோமசுந்தரனார் அவர்கள் எழுதிய கழக வெளியீடும் வந்துள்ளன.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**10. குறிஞ்சிப்பாட்டு**

கழக வெளியீடாக பொ.வே.சோமசுந்தரனார் உரை மட்டும் (1956) வந்துள்ளது.

**11. பட்டினப்பாலை**

பட்டினப்பாலைக்கு வை. மு. கோ (1933, 1938) உரயும் மறைமலையடிகள் எழுதிய கழக உரையும் (1956), ரா.ராகவையங்காரின் உரையும். முதற்பதிப்பு 1951 இலும், சாமி.சிதம்பரனாரின் முதற்பதிப்பு 1967 இலும், பொ.வே.சோமசுந்தரனார் உரை என உரையாசிரியர்களுடைய பதிப்புகள் வெளிவந்துள்ளன.

**12. மலைபடுகடாம்**

மலைபடுகடாத்திற்கு பொ.வே.சோமசுந்தரனார் உரைமட்டும் கழக வெளியீடாக வந்துள்ளது.

**II. எட்டுத்தொகை நூல்களின் பிற பதிப்புகள்**

**1. நற்றிணை**

பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரின் முதற்பதிப்பிற்குப்பின் வெளிவந்த மறுபதிப்புகள் பற்றிய விவரம். முதற்பதிப்பு 1952-இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடாக பின்னத்தூரார் வெளியிட்டார். அடுத்த பதிப்பினை 1956-இல் வெளியிடார். இவரே நற்றிணை நானூறு" என்ற பதிப்பு நூலினைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீட்டில் மூன்றாம் பதிப்பாக 1962-இல் வெளியிட்டார்.

**2. குறுந்தொகை**

சௌரிப்பெருமாள் அரங்கனாரின் உரைக்குப்பின் எண்ணிலடங்கா உரையாசிரியர்களும் உரை எழுதியுள்ளனர். அடுத்து 1920-இல் கா.ரா, நமச்சிவாய முதலியார் பதிப்பு வெளிவந்தது. 1930-இல்

முதற்பதிப்பாக இராமரத்தினம் ஐயர் பதிப்பும், 1933-இல் சோ.அருணாசல தேசிகரின் குறுந்தொகை மூலமும் வெளிவந்துள்ளன.

**3. ஐங்குறுநூறு**

உ வே.சாவின் முதற்பதிப்புக்குப்பின் இரண்டாம் பதிப்பாக 1920- இல் வெளிவந்தது. இவருடைய பதிப்புக்குப்பின் இரண்டாம் பதிப்பாக 1920- இல் வெளிவந்தது. இவருடைய பதிப்புக்குப்பின் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்களுடைய பதிப்பானது மூன்று தொகுதிகளாக 1957-இல் வெளிவந்தது.

**4. பதிற்றுப்பத்து**

உ வே.சாவின் முதற்பதிப்புக்குப்பின் வந்த மறு பதிப்புகள் 1920. 1941, 1945, 1949, 1957 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன. இவருடைய பதிப்பினை அடுத்து ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1950, 1955, 1958, 1963, 1968 2 வெளிவந்துள்ளன

**5. பரிபாடல்**

டாக்டர். உ வே.சாவின் மறுபதிப்பு 1935-லும் வெளிவந்துள்ளது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக (1957, 1964, 1969) பொ.வே.சோமசுந்தரனார் உரை வெளிவந்துள்ளது.

**6. கலித்தொகை**

எட்டுத்தொகை வரிசை நூல்களுள் முதன் முதல் பதிப்பிக்கப் பெற்ற நூல் கலித்தொகையேயாகும். சி. வ தாமோதரனார் அவர்களுடைய பதிப்பில் நச்சினார்க்கினியர் உரையும் உள்ளது. இவருடைய பதிப்பினைத் தொடர்ந்து இ. வை அனந்தராமையாவருடைய பதிப்பு (1925)மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளது. முதல் தொகுதியில் பாலைக்கலியும், குறிஞ்சிக்கலியும் (1925) இரண்டாம் தொகுதியில் மருதக்கலியும் முல்லைக்கலியும் (1925) என இரு தொகுதிகளாக வெளியிட்டார். நெய்தற்கலியை மட்டும் 1931-இல் தனியாகப் பதிப்பித்து வெளியிட்ட இவர் 1930-இல் மூலத்தையும் பதிப்பித்துள்ளார். இவருடைய பதிப்பினை தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தார் 1984-இல் வெளியிட்டுள்ளனர்.

S.MARTIN RAJA, AP, TAMIL, IGCE

**7. அகநானூறு**

ரா.ராகவையங்கார் அவர்கள் அகநானூற்றினைப் பதிப்பிக்க வேண்டு மென்ற எண்ணத்துடன், பல ஏடுகளைப் பரிசோதித்து மயிலாப்பூர் கம்பர் விலாசம். இராஜகோபாலய்யங்கார் மூலம் மூலத்தை மட்டும் பதிப்பித்து வெளியிட்டார். அகநானூற்றின் ஒரு கூறாகிய களிற்றியானைநிரையை உரையுடன் 1926-இல் பதிப்பித்தார். இவருடைய பதிப்பிற்குப்பின் உரையாசிரியர்களாகிய ந.மு. வேங்கடசாமி நாட்டார். கரந்தை கவியரசு வேங்கடாசலம்பிள்ளை ஆகிய இருவரும் அகநானூற்றினை களிற்றியானைநிரை (1943). மணிமிடைபவளம், நித்திலக்கோவை (1944) எனும் ஒவ்வொன்றையும் தனித்தனியாகத் தமிழ் வெளியீட்டுக்கழகம் மூலம் பதிப்பித்துள்ளனர்.

**8. புறநானூறு**

உ.வே.சா.அவர்களுடைய புறநானூற்றின் மறுபதிப்புகள் வருமாறு: 1923, 1935, 1950, 1956, 1963, 1971. புறநானூற்றினை உரையுடன் வழங்கிய இவர் 1936-இல் மூலம் மட்டும் வெளியிட்டுள்ளார். ஔவ.சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் புறநானூற்றினை இருபகுதிகளாக 1947-இல் பதிப்பித்துள்ளார்.

**III. திருக்குறள்**

திருக்குறளை முதன் முதலில் 1892-இல் தஞ்சை ஞானப்பிரகாசர் அவர்கள் அச்சுக்கு ஏற்றி நூலாக்கம் செய்தார்.